# மன்மதன் ரதி
## ஜனன காண்டம்



உ

# மன்மதன் ரதி
# ஜனனகாண்டம்
## வில்லடிப்பாட்டு

சென்னை முத்தியாலுப்பேட்டை
V. A. தியாகராஜ செட்டியார் அவர்களால்
இயற்றப் பெற்ற

பதிப்பாளர்
**T.R. பாலகிருஷ்ண முதலியார்**
அவர்களது
கலைமகள் அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

காபிரைட்] 1961 [ந. பை.

# விளம்பரம்

அறிவிற்சிறந்த அன்பர்களே! இப்பூவுலகில் அங்கஜனு கிய மன்மதன் பண்டிகையை ஆவலாய் கொண்டாடுகிறவர் களுக்கு சிவபெருமானுல் செய்தருளிய அநேகம் திருவிளை யாடல்களில் மன்மதனை நெற்றிக்கண்ணுல் எரித்து தேவர் களுக்குக் காக்ஷிதந்த மன்மதன் உற்சவத்தை வருஷத்திற் கொருமுறை மாசிமாதம் அமாவாசை கழித்த மூன்றும்நாள் வழக்கம்போல் மன்மதஸ்தாபனம் செய்யுமிடத்தில் தண்ணீர் தெளித்து மாவிலைதோரணங்கள் கட்டி சுத்தமான இடத்தி லிருக்கும் ஆமணக்குபோழியும் கொட்டை கதளி தெர்பை மாவிலை புட்பசந்தம் சாத்தி புரோகிதரைகொண்டு மன்மத ஸ்தாபனம் செய்து மருதினம்முதல் ஒவ்வொருதினமும் அவரவர்களாலியன்ற வரையில் கனிவர்க்கம் முதலிய தூப தீபம் கொடுத்து பிரதிதினமும் இந்த புஸ்தகத்தை வாசித்து வந்து அடுத்த பௌர்ணமி அன்றையதினம் மன்மததகனம் வரையில் வாசித்து நிருத்திவிடவும் மூன்றும்நாள் லிங்க பூஜைக்கு பலவித பக்ஷணங்களும் பாயசம் பானகம் முதலிய நீர்மோர் யாவற்றும் வைத்து இந்த புஸ்தகத்தை வாசித்து முடிவுசெய்து மன்மதனை யெழுப்பினதும் தேவர்கள் முனி வர்களுக்கு அனுக்கிரகம் செய்தருளிய இந்த மன்மதன் சரித் திரத்தை முடித்து யாவர்களும் பேரானந்தமடைந்து சுகமாய் வாழ்ந்திருப்பார்களென்று சிவபிரான் திருவருளை ஸ்துதி செய்கிறேன் ஸ்ரீமன் நாராயணனுடைய அனுக்கிரகமும் உண்டாகும்.

சுபம்.

ஸ்ரீ வேலும்மயிலுந் துணை

## மன்மதன் ரதி

# ஜனன காண்டம்

## வில்லடிப்பாட்டு

### (வேழமுகன் துதி விருத்தம்)

ஆதிகணபதியே ஐங்கரக் கணபதியே அருள் நிறைந்த
சோதிக் கணபதியே சுடரே சுடரொளியே துயரகற்றும்
நீதிக்கணபதியே நிமலக் கணபதியே நெடுமதன் சரிதை
ஓதக் கணபதியே வரமருள் குணநிதியே வந்தெனக்கே

### (மூவடி வெண் செந்துறை)

முந்தி யுதித்தவனே முக்கண் சிவன்மகனே
நந்தி முகத்தவனே தற்பரி தபோபலனே
சித்திபுத்தி நாயகனே சீதரன் மருமகனே
முத்திக்கு முதல்வனே மூவர்க்கும் மூர்த்தவனே
சத்ரு சம்மாரணனே சதிமாரன் கதையதனை
முத்தமிழா லோதவுனை முனைந்தே பணிந்தேனே
கமலா சனத்தாளே காகுத்தன் மருமகளே
கரத்தில் வீணையுடைய கல்விக்கரசியரே
நிமலன் தபசழித்த நெடுமாரன் வில்கதையை
தமிழ்ச்சீர்தவராமல் தாயே வரமருளே
சிறியே னுரைத்தகவி சீர்பிழை யிருந்தாலும்
பெரிதாக பாராமல் பாதுகார் சரஸ்வதியே
ஆதியிலே பூதலத்தில் அருள் நிறைந்த சக்தியினால்
நீதியாய் மூவர்களும் நிலத்தி லவதரித்தார்
அவதரித்த மூவர்களில் அயன்படைப்புத் தொழில் புரிய

சிவனார் வரமளிக்க ஸ்யாமளன் காதலிக்க
மூவர் பிறந்துலகில் முனைந்து நிதிபுரிய
பூமாரனார் பிறந்த புதுமை யுரைப்பேனறிய
கரியமாலும் ஒருநாள் கங்காளனை நோக்கி
பரிவாய் தவமிருக்க பரமன் எதிராகி
எதற்கு எனைநோக்கி இருந்தீர் தபசெனவே
சுதனொன்று வேணுமென்று ஸ்யாமளன் கூறிடவே
தர்பைதனை எடுத்து தற்பரனாரத்தருணம்
கர்ப்பனையா யுண்டு செய்தார் காமவேளை யச்சமயம்
மைத்தனை பிறக்கசெய்து மறைந்தார் மகாதேவன்
சிந்தைகளித்து மதனை செங்கண்மால் வளர்த்துவந்தார்
மன்மத வாண்டினிலே மாசிப்பிறைதனிலே
கன்யமதன் பிறந்தான் க்ரேதாயுகத்தினிலே
துன்மதி வருடமதில் தேவசுரர் பார்க்கடலில்
அன்பாய் அமிர்தம்கடைய அவதரித்தாள்ரதிவிரைவில்
மதன் ரதி இருவருக்கும் மகமேரு பர்வதத்தில்
இதமுடன் மணமுடித்தே அளித்தனரே சீதனங்கள்
தென்றல்தேர் பெண்கள்படை சந்திரவட்டகுடை
கண்மூன்றுடைய சிவன் கனிந்தளித்தாரின்பவிடை
மச்சக்கொடிவிருது மங்கையுமையளித்தாள்
மெச்சு மாரோக்யநகர் மாமறைவாணிதந்தாள்
இருள்யானை கொடிமுரசு எம்பெருமானளித்தார்
ப்ரமன் பஞ்சபாணம்தர பறக்கநெளி வாணிதந்தாள்
இத்தனையுங் கொடுத்து இன்பரதி மாரனுக்கு
உத்திரவு கொடுத்தார் உள்ளன்பளிப்பதற்கு
சதிபதி சல்லாபமுடன் சையோகங் கொண்டிடவும்
ரதிமாரனை யமைத்து நடந்தனரே மூவர்களும்
ஆதிகயிலாயத்திலே அம்பிகையின் பாகத்திலே
பூதகணங்கள் சூழ பூதநாத னிருக்கையிலே

தற்பரியை ஈன்றெடுத்த தக்கனவனொருநாள்
சிற்பரனை காணுதற்கு சிறப்புடனே யங்குவந்தான்
மாமனா ரென்றுசிவன் மதியாதிருந்தாரே
கோமானும் தக்கன்கண்டு கொடுங்கோபங் கொண்டானே
மீசை துடிக்குதுபார் முன்கோபமாகுதுபார்
பேச்சு தடுமாறுதுபார் பித்தகளை சீறுதுபார்
அவ்வலரி கண்கள் ரெண்டும் செவ்வலறி பூர்த்திடவே
கொவ்வைக்கனிபோல்மனது கொதித்து தணலாகிடவே
ஆர்கரித்து பற்கடித்து அதிககோபங் கொண்டானே
பார்த்தும் மதியாதிருந்த பரமனை சினந்தானே
பரமனைமாய்த்திடவே பார்மன்னன் எண்ணங்கொண்டான்
கோரமுடன்யாகமொன்று கோபமுடன் செய்யலுற்றான்
தக்கனிட யாகத்திற்கு தேவர்முதல் சென்றிருந்தார்
நக்கன் தவிர பல முனிவர்களு மங்கிருந்தார்
தந்தைசெய்யும் யாகமதை தான்காண தற்பரியாள்
விந்தையுடன் நாதனையே வணங்கிவிடை கேட்கலுற்றாள்
விடைபெற்றுவிமலனிடம் வேகமாய் நடந்தாளே
அடைந்தனளே தக்கன்மனை யாகமதை கண்டாளே
ஈஸ்வரியை கண்டதக்கன் ஈசனை தூஷித்திடவே
வேஷ்டைகொண்டு தாயிடத்தேவிமலியவள் சென்றிடவே
பேசாதிருந்தாளே பெற்றெடுத்த தாயவளும்
மோசக்கருத்து கொண்டமூடர்களை பார்த்துமையும்
தந்தையோ யெந்தனுக்கு சத்ராதி நீயல்லவோ
சந்திர சேகரனை சாகச்செய்யும் யாகமிதோ
உன்வேள்வியழியவேணும் வெட்டுண்டுநீசாகவேணும்
தோல்விபெற்றுயாகசாலை சுடலைகறை யாகவேணும்
சண்டாளா என்தேகம் தணலாயெரியுதுபார்
என்று சொல்லி யாகத்திலே ஈஸ்வரி குதித்திறந்தாள்
எத்திக்கிலும் புகழும் இனியமலையரசன்

புத்திரப்பேரில்லாமல் பெருந்தபசு தான்புரிந்தான்
மலையரசன் தேவியவள் மேனுதேவி வயிற்றில்
மாது உமையவளும் மகளாய் அவதரித்தாள்
பிறந்து வளர்ந்தாளே பருவபக்குவ மடைந்தாள்
தெரிந்தே பலகலைகள் திரமாய் வளர்த்திருந்தாள்
யாகமதை பார்க்கசென்ற அம்பிகை வாராததினுல்
யோகமதில் கண்டறிந்தே ஈசன் திகைத்ததனுல்
தந்திமுகனை யழைத்து தக்கனை வழைத்துவர
சந்திரசேகரனும் அனுப்பினுர் சித்தியுற
பெரிச்சாளிவாகனத்தில் பேழைவயிற்ருேனும் வந்தார்
பொரிகடலை யுண்டைவடை வழிதனிலே தின்றமர்ந்தார்
ஐங்கரனைக் காணுமென்று ஆறுமுகனை யழைத்தார்
மங்களமாய் சென்றுவர மஹேஸ்வரன் விடையளித்தார்
புள்ளி மயிலேறி புறப்பட்டு வேல் முருகன்
துள்ளியே தக்கனிடம் சென்றனரே கோபமுடன்
யாகசாலை யருகே தோகையர்கள் நடனமிட
மோகங்கொண்டு நின்றுவிட்டார் மயிலோன்மனம்வாட
சங்கதி முற்றும் சிவன் ஞானதிருஷ்டியிலறிந்தே
ஓங்காரகோபமுடன் வியர்வை வழித்தெரிந்தார்
வியர்வை நிலத்தில்விழ வீரபத்திரர் பிறந்தார்
ஆயிரம் சிரசுடனே அரனைப் பணிந்துநின்ருர்
எதற்காய் எனைபடைத்தீர் ஈசரே உந்தனுக்கு
அதமம் செய்த பாதகரை அறிவிப்பீ ரெந்தனுக்கு
அகோர.வீரபத்திரனே அடங்காத சேவகனே
மகாயாகம் செய்யும் தக்கன் மமதை யடைந்தானே
யாகமதை கலைத்து அவனைக்கிழித்தெரிந்து
வேகமாய் வாருமென்று விடையளித்தார் துணிந்து
கோபங்கொண்டு வீரபத்ரர் கொக்கரித்து பற்கடித்து
தீபற்றி எரிவது போல் தக்கன் சபையடுத்து

ஓங்கார சப்தமிட்டு ஓடோடி வந்தாரே
தூக்கிக் கிழித்தாரே துண்டு ரெண்டாய் செய்தாரே
மற்றுமவன் மரபினரை மடித்து வதைத்தாரே
தற்பரனிடத்திற்வந்து சங்கதி யுரைத்தாரே
மங்கையுமை மாய்ந்தபின்பு மஹேஸ்வரனெழுந்திருந்தார்
தங்குதடையில்லாமல் தவம்புரியவே துணிந்தார்
இமையமலைச்சாரலிலே ஈசான்யமூலையிலே
கமழும் தவம் புரிந்தார் கடவுளு மவ்வேலையிலே
ஈசன் புரியும் தவம் ஈரேழு புவனமெல்லாம்
வீசுதுபார் ஜ்வாலைகொண்டு விண்ணவருலகமெல்லாம்
சகிக்க முடியாமல் தத்தளித்தார் தேவரெல்லாம்
பகீரவன் தபசிலையால் பயந்த துலக மெல்லாம்
இமையவர்கள் கூடியொன்றாய் இந்திரனை கண்டாரே
உமைபங்கன் யோக நிலை யுபத்திரவம் விண்பாரே
தேவர்கள் வேண்டுதலை தேவேந்திரன் கேட்டறிந்து
தீவிரமாய் பரமன் தவயோகத்தைக் குறித்து
யோசித்துணர்ந்தானே உபாயமொன்ற றிந்தானே
ஈசன் தபசிலையை யழிக்கத்துணிந்தானே
யாரைகொண்டழித்திடலாம் ஆதிசிவன்யோகமேதான்
என்று சீராகவே யுணர்ந்து தீவிரமாய் ஏதுரைப்பான்
தேவர் முனிவர்களே சித்தர்களே முத்தர்களே
ஆவலுடன் கூறுமெந்தன் ஆலோசனை கேளுங்களே
நக்கன் தபசழிக்க நம்மாலே யாகாது
இக்கணமே மன்மதற்கு எழுதிடுவோம் தூது
மன்மதன் மனதுவைத்தால் மாதவம் கலைத்திடுவான்
துன்பத்தை தீர்த்திடுவான் துயரகல கார்த்திடுவான்
என்று லிகிதம்வரைந்தானே நீலமேகன் மைந்தனுக்கு
வகுந்த குறையொழிய வாமளன் குமாரனுக்கு
சேவகரை யழைத்து சிமிலோலை கைகொடுத்தான்

தேவிரதி மாரனிடம் தந்திடுங்களென்றுரைந்தான்
ஓலைஎழுதியதை உலகளந்தோன் தானறிந்தார்
மேலும் மனம் தளர்ந்து மேகவர்ணனேது செய்தார்
மைந்தனுக்கு தீங்குவந்து மூண்டதென எம்பெருமான்
அந்தமிகும்லக்ஷ்மியை அழைத்தவரும்ஏதுசொல்வார்
பார்த்தனையோ லக்ஷ்மியே புரந்தான் செய்சதியை
சீர்மாரனைவதைக்க சித்துள்ள செய்தியதை
அம்புலியோன் யோகமதில் ஆதிக்கமாயிருக்க
நம்மகனைதேவரெல்லாம் நக்கனுக்கு பலிகொடுக்க
யோசனை செய்தார்காண் உத்தமியே லக்ஷ்மியே
மோசம்வந்து மூண்டதடி மைந்தனுக்கு இத்ததியே
கங்காளனின்தபசை கெடுக்கயாரால் முடியும்
தங்காமல் யானேகி தடுப்பேன் விடையளியும்
என்றுவிடை பெற்றெழுந்தாரே வேகமாய் மாயவரும்
தடைபடுத்த மன்மதனை தனித்து வாரா ரவரும்
வைகுந்தத்திற்கடுத்த மண்டபத்தில் வந்து நின்று
செய்வது என்னவென்று தீர்க்கமாய் யோசித்து
உற்று நினைத்தாரே ஒருகோடியோசனையை
சற்று மனந்தெளிந்து சமாளித்தார் தன்மதியை
என்னவேடங்கொள்ளலுற்றார் எம்பெருமான்மாயவரும்
ஒருவர்னக்குறத்தியைப்போல் வடிவங்கொண்டாரவரும்
சன்னல் பின்னல் தாவடமாம் சங்குமணி மாலைகளாம்
மின்னும் சரப்பளியாம் மேற்காதில் கொப்புகளாம்
அக்குமணி கொக்குமணி அழகுடனே தானணிந்தாள்
சிக்கருத்து கூந்தலதை சிமிள்போல கொண்டையிட்டாள்
கொண்டைக் கழகாக கலிக்கத்து ராவமைத்தாள்
தண்டைகொலுசணிந்தாள் தங்கவளையல் தரித்தாள்
குடமல்லி குண்டுமல்லி கொண்டையில் சொருகலுற்றாள்
இடையிலே ஒட்டியாணம் இனிதாய் பிதுவெடுத்தாள்

குறக்கூடை இடுப்பில்வைத்து கோகிலத்தைபோல்நெளிந்து
பிறப்பங்கோல் கைபிடித்து வாராள்வழிநடந்து
காடுசெடிகடந்தாள் காறுறுபொய்கை விட்டாள்
மேடுபள்ளம் தாண்டிவந்தாள் மேனகைபோல் நடந்தாள்
சிங்கம்புலி சீறும்வனம் சிறுத்தை விளையாடும் வனம்
எங்கும் நரிக்கரடி இருக்கும் கொடியவனம்
காரோங்கும் வனங்கடந்து கால்நடையாக நடந்து
ஆரோக்யப்புரம்நோக்கி அரிவைவாராள் துடர்ந்து
இரதிதேவியாள் தனக்கு நல்லகுறியுறைந்து
உரமாரனைதடுக்க ஒயிலாய் வாராள் தடுத்து
கடையாம் கடைத்தெருவாம் கன்னரவீதிகளாம்
கொடியிடையாள் தாண்டியல்லோ குறியுரைக்கவராளாம்
ஆரியர்வீதிவிட்டாள் அரசர்தெருக்கடந்தாள்
கூறியேமருந்துவகை கொடுத்துவாரால் குளிகை

(கு ற ம்)

தினதந்தின தினதந்தின தினதந்தின தினன

தினதந்தின தினன

தென்றதி நாதினன்ன தினதந்தின தினன [தி]

பச்சைமணி பாலமணி வாங்கலையோ அம்மே வா
மெச்சும் நல்ல பவளமணி வாங்கலையோ அம்மே
ஆண்வசியம்பெண்வசியம் அடியேனிடம்உண்டு அம்மே அ
கூன்குருடர் செவிடருக்கு குளிகைபல உண்டு
நரிபல்லு கோரோஜனை கஸ்தூரி யுண்டு அம்மே க
மரித்தவரை எழுப்புதற்கு மருந்துவகை யுண்டு
கொடிக்கயர் ஏணைகயர் குனப்படிச்சியுண்டு அம்மே கு
கடிவிஷங்க ளிறங்குதற்கு தைலவகை யுண்டு
முத்திழைத்த கூடையிலே மூலிகைகள் உண்டு அம்மே மூ
வைத்த பில்லி சூனியங்கள் திருப்பவழியுண்டு

கருத்தரிக்காபேர்களுக்கு கர்ப்பமூலிகையுண்டு அம்மே க
வருத்தும்பல ரோகத்திற்கும் வனமூலிகையுண்டு
யானைத்தோல் அரவைநாக்கு முதலைவாலுமுண்டு அம்மே மு
ஆனுவ ஐங்கோலமையும் அடியாளிட முண்டு
கருவெடுப்பேன் குறியுரைப்பேன் கைரேகை பார்ப்பேன்-
[அம்மே கை
பொருத்த நிமித்த மில்லா பேர்களையே சேர்ப்பேன்
வேண்டியவர் சீக்கிரமாய் வாங்களடியம்மே வா
ஆண்டவனருளிருக்க அனுவசையாதம்மே.

(வெண் செந்துறை)

தெந்திருப்பாட்டுப்பாடி தெருவீதி வாராளே
வைகுந்தன் மருமகளின் வருத்தந்தீர்க்க வாராளே
அன்னேர வேளையிலே ஆரணங்கு மெய்ரதியாள்
உண்டுபசியாறி உறங்கினால் மஞ்சமதில்
கண்ணயர்ந்தபிறகு கண்டாளதிசயமே
அண்டமதிலவனும் ஆகாத சொர்ப்பனமே
சொர்ப்பனங்கள் கண்டவளும் திடுக்கிட்டெழுந்தாளே
தற்பரனை நினைந்து சதுராய் பணிந்தாளே
அப்பொழுது பூங்குறத்தி அவ்வீதிவாராளே
ஒப்பில்லா குறத்தியரின் ஒலிதனையே கேட்டாளே
தாதிகளா தோழிகளா தையலரே வாங்களடி
மாதொருத்தி வீதிவழி மருந்துவிற்று வாராளடி
மருந்துவிற்கும் குறத்தியரை மாதரே யழையுங்கடி
சிறிது குறிகேட்டு நாம் சித்தங்களிப்போமடி
இரதியின் மொழிகேட்டு நங்கையர்கள் ஓடிவந்தார்
குறத்தியருகில்வந்து கூவியழைக்கலுற்றார்
கோதை குறத்தியரும் குலுங்கி நடைநடந்தாள்
சீதன முகங்குளிர சிரித்து மனைக்குள் வந்தாள்
வந்தகுறத்தியற்கு வட்டமனை போட்டார்கள்

குந்தும் குறத்தியென்று கொம்பனைக்குறைந்தார்கள்
குறக்கூடை கீழேவைத்து கையில் பிரம்பைப்பிடித்து
ஒருகால்தனைமடித்து உட்கார்ந்தாளே களித்து
கானக்குறத்தியரே கைபார்க்க தெரியுமோடி
மானேதெரிந்திருந்தால் மறையாதுறையுமடி
உரைக்கின்றேன் கேள்தாயே உத்தமியே மயிலே
குறை ஒன்றுமில்லாமல் கூறுவேன்கேள் தையலே

## குறம்

உலகினில் பலாபலன்கள் வேணதுண்டு அம்மே வே
உரைத்திடுவேன் சிலதுனக்கு ஊக்கமாய் கேளம்மே
இடதுபுரம் ஆண்களுக்கு துடித்திடிலோ தாயே து
எதிரில்லா மைந்தனென்று பிறக்குமறிவாயே
வலதுபக்கம்பெண்களுக்கு வையகத்தில்துடித்தால் வை
வருத்தமெத்தமாகுமடி ஆளனிட குணத்தால்
புருஷருக்கு இடதுபக்கம் பூவையரே துடித்தால் பூ
பூலோகவாழ்க்கைவிட்டு பொன்னுலகமடைவார்
ஆண்களுக்கு வலதுபக்கம் ஆரணங்கே துடித்தால் ஆ
ஐஸ்வர்யம் மெத்தவுண்டு அவனியையுமாள்வார்
துடிநூல் முறைகளின்னும் வேணதுண்டு அம்மே வே
துன்பமொன்றும் அணுவாது உந்தனுக்கு அம்மே

## (வெண் செந்துறை)

போகட்டும் குறத்தியரே புதுமையுள்ள பொற்கொடியே
ஏகபோகமயிலே உன் இருப்பிடத்தை கூறடியே
அந்தமொழிகேட்டு அருங்குறத்தி ஏதுசொல்வாள்
விந்தைமிகுங்குயில்போல் வாய்திறந்திடுவாள்
நான்பிறந்து வளர்ந்த நாடதனை கேளுமம்மே
தேன்மொழி களித்திடவே தெரிவிப்பேன் என் நாடுதன்னை

## குறம்

யெந்தனது நாடுதனை கேட்க வந்தாயம்மே
யிருப்பிடத்தை சொல்லுகிறேன் விருப்பமுடன் கேளும்
ஆதி அந்த கயிலாசனுத னருளாலே
ஐங்கரனார் தன்னருளாலம்மையுமை யருளால்
இன்றுயெங்களது தென்னுடு அம்மே
இந்திரரும் சூரியருமிருக்க மெங்கள் நாடு
சூரியரும் சந்திரரும் சூழ்ந்திருக்கும் நாடு
சுத்தமுள்ள பெரியோர்கள் தவம் புரியும் நாடு
அந்தணர்கள் வேதியர்கள் அருந்தவத்து முனிவர்
அனைவோரும் யெப்பொழுதும் தவம் புரியும் நாடு
மந்திரங்கள் சாஸ்திரங்கள் மறையோதும் நாடு
மறவாமல் மூவறையும் துதிக்குமெங்கள் நாடு
யீரேழுபதினாலு லோகமெல்லாம் நாங்கள்
யெப்போதும் மரசாள் வோமினை யொருவரில்லை
தப்பாமல் எங்களது சீமைதனில் அம்மே
தளருது ஒருநாளும் பஞ்சமது இல்லை.
அக்ஷயத்தாலன்னமது ஆயிரம்பேர்க்கிடுவோம்
ஆதிகயிலாச சிவசங்கரனா ரருளால்
மந்திரத்தால் மாங்கனிகள் பரிப்ப மடியம்மே
பச்சமலை குடியிருந்து பழங்களது பரிப்போம்
பசிகாலமானுலோ பட்டணத்தில் திரிவோம்
கொச்சிமலை குடியிருந்து கோவைப் பழம்பரிப்போம்
குளிர்காலமானுலோ குறியுரைக்க வருவோம்
யெங்கள்குலம் ருஜகுலம் குறக்கூட்டமல்ல.
யெழிலான குடிசையிலே குடியிருப்போம் அம்மே
பெண்டிருந்த தேசமெல்லாம் பிள்ளையொன்று மறியோம்
பெரு நெருப்பை தீண்டாத சாதியடி நாங்கள்

வேறு

அந்த உரைக்கேட்டு அழகுரதிக் கிளியாள்
பூங்குறத்தி யெந்தனுக்கு புகழ்ந்து குறிசொன்னாலோ
யெந்தன் மனக்குறையை இங்கெடுத்துமொழியுமென்றாள்
உள்ள குறியுரைத்தால் உத்தமியே எந்தனுக்கு
நல்லகுறியுரைத்தால் நான்தருவேன் ரெத்தினங்கள்
அந்த உரைக்கேட்டு அழகான கட்டுவச்சி

குறம்

சாணியதுதானெடுத்து சதுரமாகமொழுகி
சட்டமாக பிள்ளையாரை பிடித்துமங்கேவைத்து
அருகுடனே தும்பையதை அவர் சிரசில் சாத்தி
அருமையுள்ள கனிவகைகள் கொண்டு வந்து வைத்து
பச்சரிசி தேங்காயும் பயருடனேபாலும்
இச்சையுடன் தான் படைத்து தூபதீபம் கொடுத்தாள்
ஒங்கள் குலதெய்வங்களை உகந்து போற்றுமம்மே
ஒன் வீட்டு பூவாடை காரியையும் நினைப்பாய்
சிந்தையிலும் தியானம்பண்ணிவந்தமரும் அம்மே
திரமாக ஒந்தனுக்கு குறியுரைப்பேனிப்போ
யெங்கள்குல தெய்வங்களை நானினைத்து அம்மே
இத்தருண முந்தனுக்கு குறியுரைப்பேனிப்போ
அங்காள அம்மன் சத்தி அனைவோரும்வாங்கள்
ஆகாசவாணி துர்க்கை அய்யனார் பிடாரி
அலைகடலில் வாழுகின்ற கன்னிகளும் வாங்கள்
அய்ந்து முனிக்கிளைய முனி மன்றுசாமி
யெல்லோரும் வந்து குறக்கூடை தனிலமரும்
பச்சைமலை தாயாரும் பரிவுடனே வந்து
பாவாடைராயனுமே வந்தமருமிங்கே
தெய்வங்களை நினைத்தாலோசிலுக்குமதுடம்பை அம்மே
தேன்மொழியே உந்தனுக்கு குறியுரைப்பேனிப்போ

குறக்கோலே கையிலெடுத்து கொம்பனையாள் தானும்
குறியுரைக்கும் வேளையிலே குலுங்கநகைத்தாளே
காணாத அதிசயங்கள் காட்டுதடி அம்மே
கந்தருந்தன் தமையனென்று சொல்லுதடியம்மே
மாயவனுருந்தனுக்கு மாமனாக வேணும்
மகாதேவருந்தனுக்கு தகப்பனடி யம்மே
பார்வதியாளுந்தனுக்கு தாயாகவேணும்
பரமசிவன் பெற்றெடுத்த பைங்கிளிதான்நீயும்
மகரக்கொடி தான்படைத்த மன்மதநாருனக்கு
மங்கிலியம் தரித்தாரென்று சொல்லுதடியம்மே
பொய்யென்றும் மெய்யென்றும் புரிந்ததுவோ உனக்கு
புகன்றிடுவேன் யென்வார்த்தைக்கேளடி அம்மே
உன்பாட்டன் தர்க்கனவ னுகந்துவேள்வி செய்தான்
உமையவளும் யீஸ்பரரை உத்திரவுகேட்டு
உகந்து அந்த தற்கனிடம் வந்து நின்றுளப்போ
வந்து நின்ற பார்வதியை மதிக்கவில்லே யவனும்
மங்கையரும்கோபங்கொண்டு மனம்வெறுத்து அப்போ
அக்கினியில் தான்விழுந்து அவளுயிரை விடுத்தாள்
யீஸ்பரியும்முன் தாயுமிறந்துவிட்டா ளம்மே
யின்பமுடன் மலேக்குறத்தி யெடுத்துறைத்தாளப்போ

### வேறு.

அப்போ ரதிக்கிளியாளாரணங்கு யேதுசொல்வாள்
யென்தாயே யீஸ்பரியேயென்று சொல்லிதானவளும்
அடித்து விழுந்தழுதாள் ஆதிசிவன் தன்மகளும்
அப்பொழுது தாதியர்களனைவோரும் ஓடிவந்து
வாரியெடுத்து மார்போடே தானணைத்து
உட்காருமென்று உபசாரவார்த்தை சொல்லி
தண்ணீரும் பன்னீரும்தான் தெளித்து உபசரித்து
சாமரங்களால்விசிறி தாதியர்கள் சூழ்ந்திருக்க

தன்னுடைய கண்திறந்து தாதியரை பார்க்கலுற்ருள்
வந்தகுறத்தி இன்னம் வரிசையுடன் சொல்லுமென்ருள்
வரிசையுடன் குறத்திக்கு வண்மையாய் சொல்லலுற்ருள்
சமயமிது நல்லதென்றுரதியாள் சரிவரவே சொல்லுமென்ரு
சம்பிரமாய் ரதியவளும் கும்பிட்டடிபணிந்து

குறம்

நெல்விரையை தான் பரப்பி நேர்ந்த குறியுறைக்க
நீலகண்டனுமையவளே வாக்கருளு மென்பாள்
காஞ்சி நகர்தனில் வாழும் காமாக்ஷி உமையே
கன்னியற்கு குறியுரைக்க வாக்கருளுமென்பாள்
பச்சைமலைதாயாரே வாக்கருளு மென்பாள்
பரமசிவன் ஒன் தகப்பன் அருந்தபசு செய்வார்
அவர் தபசை தானழிக்க அமரர்களும் இப்போ
தேவேந்திர மகருஜன் திருமுகமுமெளுதி
தெரிவிக்கவே தூதர்களை அனுப்புவாரே யம்மே
ஒன் புருஷன் மன்மதற்கு ஓலைவருதிப்போ
ஓலைகண்ட க்ஷணத்திலுகந்து செல்வாரம்மே
வேள் மதனிப்போது வேகமுடன் சென்று
வேணி அரன்மேல் பாணம் விட்டிடவே போருர்
யீஸ்பரனார் கோபங்கொண்டு யெரித்துவிடபோருர்
யீஸ்பரியே யெங்கள்குறி சொல்லுதடியம்மே
யென்றுசொல்லி தானவளு மெடுத்துரைத்தாளப்போ

வேறு

அப்போது ரதிகிளியாளாரணங்குயேது செய்தாள்
அருகிருந்த தாதிகளை அன்பாக தானழைத்து
பொன்னுலே ஆடைகளும் பூஷணங்கள் வெகுவாக
மலைக்குறத்திபற்ற வரிசையுடன் தான்கொடென்ருள்
தங்க நகை யெடுத்து மங்களமாய் தான் கொடுத்து
சாற்றிமலை குறத்திபோற்றி நடந்த பின்பு

அந்தப்புரம் சேர்ந்து சிந்தையுற்று தானினைந்தாள்
அப்போது தூதர்களும் அன்பாக யேதுசெல்வார்
இவ்வனத்தில் நாமிருந்தாலிந்திரன் முன் போவதில்லை
மதிமோசம் வந்துவிடும் வனந்தாண்டி போவதென்றால்
காமவனந்தாண்டி விட்டால் கடத்தேரிப்போவேமென்றார்
இந்தபடியாகதூதர்கள் இனிநடக்கும் வேளையிலே
அங்கேமயிலுகளும் குயிலுகளும்மருவி விளையாடுவதும்
வக்காவும்தாரூவும் ஒக்கவிளையாடுறதும்
அன்னங்களெல்லாம் அமர்ந்து இசைபாடுவதும்
நானத்தான்பிள்ளை நயனங்கள் பாடுவதும்
பச்சைக்கிளிகள்வந்து மெச்சிவிளையாடுறதும்
பஞ்சவர்ணகிளிகள்வந்து கொஞ்சிவிளையாடுறதும்
ஜவ்வாது பூனைகள் தனித்துவிளையாடுறதும்
காமவனந்தனிலே கனிவாசம் வீசுறதும்
வேரில்பழுத்த வெடித்தப் பலாபழமும்
கொம்பில்பழுத்த கோதுமடா மாங்கனியும்
வாழைப்பழங்கள் வளைந்துகுலைசாய்கிறதும்
காமவனத்திலுள்ள கனிவர்க்கமத்தனையும்
இன்னதென்று கண்டறியயெவராலுமாகாது
வனத்தில் திருக்குளமும் மாளிகையும் கண்டார்கள்
திருக்குளத்தைசுற்றி செங்கழுநீர் வாசமதும்
குளத்தினழகைகண்டு கூடிநின்று பார்த்திருந்தார்
நாலுபடித்துறையும் நவரெத்தினமாளிகையும்
பூசைக்கு ஓர் துறையும் போசனத்துக்கோர் துறையும்
ரதிதேவிநாயகிக்கு நலமான ஓர் துறையும்
தாதிமார் பெண்களுக்குத்தனியே ஒருதுறையும்
நாலுதுறையும் நவரெத்தினமாளிகையும்
இருவரும் சேர்ந்திருக்கவே காந்தமேடைகளும்
உப்பரிகை அதிசயத்தை உரைக்கமுடிபோகாது

காமவெறியெடுத்து தூதர்கள்கலங்கி நின்றுபோகயிலே
மன்மதவெறியெடுத்து மயங்கினார் தூதர்களும்
இந்திரன் தன்வனமும் இதற்குநிகரில்லை யென்றார்
வைகுந்தமிதற்கு மதிப்பல்லவென்றுரைத்தார்
கயிலாசத்துக்கிதனைகணக்கிடவும் முடியாது
வனத்தைவிட்டு வந்தார்கள் வகையாக தூதர்களும்
மன்மதனார் அரண்மனைக்கிமகிழ்ச்சியாவந்தார்கள்
வாசல்அறிக்காரர் வழிமரித்தார் தூதர்களை
ஆருடைய தூதரென்று அவசரமாய்கேட்டார்கள்
யெவருடைய தூதரென்று யியம்பிடுவீர்யென்றார்கள்
இந்தபடியாய் காவலர்கள் இனிகேட்கும் வேளையிலே
அப்போது தூதர்களுமன்பாக யேதுசொல்வார்
இந்திரலோகமிருந்து இங்கேவந்தோம் தூதர்களும்
தெய்வசபையைவிட்டு தேடிவந்தோர்மன்மதரை
இந்திரருமன்மதரை இன்பமுடன் கொண்டாடி
தேவர்கள் யெல்லோரும் தீர்க்கமுடன்யோசித்து
ஆயிரங்கண்ணுடையாரழைத்துவர சொன்னார்காண்
ஆனதினால் நாங்களன்புடனே வந்தோமிங்கே
தூதர்கள்வந்தோமென்றுங்கள் துரைக்கிநீர்சொல்லுமம்மா
தூதர் சொன்னமொழியை துருசாக்கேட்டெழுந்து
ஓட்டம் நடையாக ஓடிவந்தார் தூதர்களும்
ரதியாளும்மன்மதனும் நலமா இருக்கையிலே
அன்னமும் நாருவுமமர்ந்து விளையாடயிலே
மயிலுங்குயிலும்போல் மருவிவிளையாடயிலே
சொக்கட்டாடி சொகுசாயிருக்கயிலே
பந்தயங்கள்வைத்து பகடைவிளையாடயிலே
விந்தைகளாக விளையாடி தானிருந்தார்
வந்ததொருதூதர்களும் வணங்கினார் மன்மதனை
வணங்கிநின்ற தூதர்களை மன்மதனும் தான்பார்த்து
வேற்க விருவிக்க வேகமாய் வந்ததென்ன

அவசரமாய் வந்ததென்ன அன்புடனே சொல்லுமென்றார்
வந்ததொருசேதிதன்னை வகைவிபரம் சொல்லுமென்றார்
இந்தபடியாய் மன்மதனு மினிகேட்க்கும் வேளையினில்
அப்போது தூதர்களும் அடிவணங்கி யேதுசொல்வார்
தெய்வலோக மிருந்தெனக்கு தெரிவிக்க வந்ததென்ன
தெய்வலோக மிருந்துமை தெரிசிக்க வந்தோமென்றார்
ஆகையினாலே தங்கட்கரிக்கையிட வந்தோமென்றார்
சொல்லிவாய்மூடி தூதர்களும் நிற்கயிலே
முத்தானவாய்திறந்து மன்மதன் உத்தரமும் சொல்வாரே
இங்கேவந்த விபரமதை இயம்பிடுவீரெந்தனுக்கு
யென்றுசொல்லும் வேளையிலே யெழிலான மாளிகையில்
தூணுக்குதூணு தூண்டா விளக்கெரிய
காலைவிளக்கெரிய கைபந்தம் நின்றெறிய
வெள்ளி விளக்கெரிய விடிவிளக்கு னின்றெறிய
தங்கவிளக்கெரிய தாதிமார் சூழ்ந்திருக்க
குத்துவிளக்கெரிய கோதையர்கள் சூழ்ந்திருக்க
கொத்து குளோப்பர்களும் சுற்றிலுமே னின்றெறிய
வேடிக்கைபார்த்து தூதர்கள் விருப்பமுடன் நிற்கயிலே
தங்கடியோரம் தங்கிநின்றார் தூதர்களும்
மன்மதனைகண்டு மகிழ்ச்சியாய் னின்றார்கள்
வடிவில் மிகுந்த வரிசையுள்ள மன்மதரே
மங்கையருளால்வந்தோம் மாயன்மகனாரே
மாயன்மகனாரே மன்மதனே தஞ்சமென்றார்
ஆயன்மகனாரே ஆனழகா தஞ்சமென்றார்
ரூபத்தழகா ருக்குமணிபுத்திரனே
அலமேலு மங்கைக்கி அருமையுள்ள புத்திரனே
மாயன்மகிழவந்துதித்த புத்திரனே
திங்கள் குடைசூழ்ந்த சிவனார் மருமகனே
யெங்கள் குறைதீர்த்து யீடேற்றும் மன்மதனே
மன்மதரைகண்டு தூதர்கள் வருணித்துனின்றார்கள்
வணங்கிநின்ற தூதர்களை மன்மதனும் தான்பார்த்து

ஆசனம் தான்கொடுத்து அருகிருக்க செய்தாரே
உட்காருமென்றுசொல்லி உத்திரவும்தான் கொடுத்தார்
மகாபாக்கியமென்று தூதர்கள் மகிழ்ந்து இருக்கயிலே
அடைகாயும்வெள்ளிலையும் அன்புடனே தான்கொடுத்தார்
யெளியேனைத்தேடி யெங்கேவந்தீர் தூதர்களே
அடியேனை தேவர்கள் அன்பாய் நினைத்ததென்ன
தெய்வலோகத்திலிருந்து தேடிவந்தகாரியமேன்
வந்ததொரு காரியத்தை வரிசையுடன் சொல்லுமென்றார்
இந்தபடியாய் மன்மதராஜன் இனிகேட்கும்வேளையிலே
கேட்டஉடன் தூதர்களும் கெம்பீரமாகவேதான்
சொல்லுகிறோம்மன்மதரே துணைபுரியுமெங்களுக்கு
ஆயிரங்கண்ணனும்மை அழைத்துவரச்சொன்னார்காண்
தெய்வசபையிலும்மை தேவர்களும் கொண்டாடி
கொண்டாடிபேற்பெற்ற கோவிந்தன் மகனாரே
சேவுகத்திலும்மை திறமென்றுசொன்னார்காண்
அண்டத்திலும்மை அதிசூரனென்றார்காண்
மன்மதநார் வந்தால் மனக்கவலை தீருமென்றார்
ஆகையினால் நாங்களனைவோரும்வந்தோமய்யா
வாருமென்று தூதர்கள் மன்றாடி நிற்கயிலே
போகாதேயிருந்தால் பிழைமோசம் வந்துவிடும்
யென்றுசொல்லி மன்மதரும்யெழுந்திருந்தாரன்னேரம்
சலவைகல் மண்டபத்தில் சாமிமதன் வந்துநின்று
சம்பங்கியெண்ணை கொண்டு தான்முழுகிமயிராற்றி
கோதிமயிரை கோணமல் சிக்கருத்து
வாறிமுடித்து வரிசையுடன் மன்மதனும்
திருநாமமிட்டு திவ்வியபோஜனம்செய்து
சரியாநிஜாருமிட்டு ஜரிகையங்கி மேல்தரித்து
சப்த்த கஜம்நடுங்க மத்தாப்பு உடுப்பணிந்து
நவரெத்தின கச்சை நன்றாய் அரைக்கிசைத்து
ஜரிகை நிஜார்தரித்து வயிரக்கடுக்கனிட்டு

தனங்கோடி வயிரமுத்து யினமாகவைத்திழைத்து
சச்சகதாநந்த பாலன் பச்சைக்கல் முருகுசீலன்
தரித்திடகாதில் துளி உதித்தது சூர்யனொளி
தங்கபதக்கமதில் சிங்கமுகமெழுதிவைத்த
தகதகன மார்பிலங்க பகலவன்போல் துலங்க
தானே தளதளன பூனூல்பளபளென்ன
சத்திரபதி ராஜராஜன் முத்தாரம் மேல்போஜன்
தரித்தார் புஜகிருதும் ஜொலிக்க ஜெகமுழுதும்
தஸ்த்தான கடயமிட்டார் முத்துவர்ணதொங்கலிட்டார்
தண்டலரமான வீரகண்டாமணி யணிந்தார்
சந்திருயுதமிடையில் சுந்திரமானுடையில்
சட்டமிருந்த பதினெட்டாயுதம் யணிந்து
தவருமலே அனியபுவனமெல்லாம்பணிய
தபபாகனமிகுந்த அம்பூருகூடணிந்தார்
சருவதகனமுத்து உருமாலை கைதரித்து
பத்திறதிதானிலங்ககசுத்தினர் சிரங்குலுங்க
சலுதியிற் கண்ணுடியிலே திரும்பியவர்பார்க்கயிலே
தங்கமயமாயமைத்ததிங்களொளி மிகுத்த
சத்திரபதிபாகெடுத்தார் முத்துசர தொங்கலிட்டார்
சத்திகலிக்கிறவிமுத்துருசொருகிப் பெருகி
தலப்பாதலையில் வைத்து மலைப்பாகவேகுரித்து
நன்று தலைவிட்டார் கண்ணுடியினில் பார்த்தார்
சரியவென்றுரைத்து வரிசையுடனே பார்த்து
சாத்த் ஒன்றுது கட்டுமாத்து ஆயிரத்தெட்டு
தங்கத்தினுலிழைத்தசிங்கமுகம் மேல்பதித்த
சற்குணசூரியனுற்ற நவரத்தின மிட்டிழைத்த
சாமிமதன் கிரீடமதை நேகமுகமாக அதை
தலையிலே அவர்தரிக்க நிலக்கண்ணுடியைபார்க்க
சவ்வாசியென்றுசொல்லி ஒவ்விபுரமீசை துள்ளி
சந்தோஷம் வந்துனன்னி மந்தகாசங்கள் பண்ணி

சர்வாபரணமெல்லாம் தான்தரித்து கொண்டார்காண்
கரும்பென்ற வில்லெடுத்து கையிலே தான்பிடித்தார்
தென்றல் தேர்தன்னை தெருவில் வரவழைத்தார்
ரதிதேவி தன்னிடத்தில் நவமாக வந்தார்காண்
நாயகனைகண்டவுடன் ரதிதேவி ஓடிவந்து
அலங்காரமேனுனக்கு ஆனழகா யென்சாமி
யென்றுசொல்ல ரதியாளு மினிகேழ்க்கும் வேலையிலே
அப்போது மன்மதனும் ஆனழகனேது சொல்வார்
தெய்வலோகத்திலிருந்து தெரிவிக்க வந்தார்கள்
அதிரதனுமிந்திரனு மழைத்துவர சொன்னாரும்
ஆகையினால் நானுமவ்விடத்தில் போய்வாரேன்
போகவிடைதாடி பெண்மயிலே யெந்தனுக்கு
போகவிடைகேட்ட புண்ணியனைத் தான்பார்த்து
யென்னவென்னுசொல்லுகுருள் யேந்திழையாளன்னேரம்
மன்மதனே யென்சாமியென்வார்த்தைதனை கேளுமென்றான்
இந்தபயண மென்மனதுக் கேற்கவில்லை யென்றுளே
இதுமோசப்பயணமென்று முன்பாக தோணுகுது
உங்கள்வாய்ச்சொல்லை கேட்டென்மனது துடிக்கிறது
பதில்சொல்ல யெந்தனுக்கு வாயுங்குளருது
யென்யெடதுகை துடிக்கிதிப்போ யென்னமோ தெரியலையே
வந்ததொரு தூதருக்கு பதில்சொல்லி தானனுப்பும்
பதில்சேதி வந்தவுடன் பயணம்வய்யும் யென்சாமி
இந்தப்படியா ரதிதேவி யெடுத்துரைக்கும் வேலையிலே
அப்போது மன்மதனும் ஆனழகனேது சொல்வார்
அல்லவேபெண்ணரசே ஆரணங்கேசொல்லுரேன்கேள்
தெய்வலோகந்தனிலே தேவர்களுமெல்லோரும்
பெருமாளுமிந்திரரும் பேரண பிர்மாவும்
அனைவருமேகூடி அழைத்துவரசொன்னார்கள்
தாமதங்கள்சொல்ல தகுமோதான் யெந்தனுக்கு
மும்மூர்த்தி உள்ளமட்டும் மோசம்வரபோவதில்லை

மகாவிஷ்ணு உள்ளமட்டும் மதிமோசம்வாருது
பெண்புத்தி பேதையென்று பேருலகில் சொல்வார்கள்
இந்தபடியாய்மன்மதனு மெடுத்துரைக்கும்வேளையினில்
அப்போ ரதிதேவி ஆரணங்கு மேது சொல்வாள்
அல்லவே யென்கணவா ஆனழகா சொல்லுகரேன்
பெண்புத்தியென்று பெருமையாய் சொல்லாதீர்
உங்களை பெருமையுடன் உண்மையாய் தானழைத்தார்
உங்கள் பெருமையடக்கவல்லோ பிர்மாவும் தானழைத்தார்
உங்கள்இடும்பையடக்கவல்லோ இந்திரனும் தானழைத்தார்
உங்கள்மதத்தையடக்கவல்லோ மாயோனும் தானழைத்தார்
உங்கள் ஆள்மையடக்கவல்லோ அனைவர்களும் தானழைத்
போகாதேயென்கணவா புண்ணியனே மோசம்வரும் [தார்
இந்தபடியாய் ரதிதேவி யெடுத்துரைக்கும் வேளையிலே
அப்போது மன்மதரு மன்புடனே யேதுசொல்வார்
அல்லவேபெண்ணரசே ஆரணங்கேசொல்லுரேன்கேள்
யென்பெருமையையடக்க பிர்மாவினலாகுமோதான்
யென்திருணி அடக்கினால் தேவர்களும் வாள்வதுண்டோ
யென்இடும்பையடக்க இந்திரனலாகுமோதான்
யென்மதத்தையடக்க மாயோனலாகுமோதான்
யென்ஆள்மையடக்கினல் அனைவர்களும் வாழ்வதுண்டோ
யென்பெருமையறியாமல் யெடுத்துரைத்தாய் பெண்மயிலே
மகிழ்க்ஷியுடன்போய்வாரேன் வாழ்த்திவிடைதாடியென்றார்
இந்தபடியாய் மன்மதனு மெடுத்துரைக்கும் வேளையிலே
அப்போதுரதிதேவி ஆரணங்குயேது சொல்வாள்
அல்லவே யென்கணவா ஆனழகா சொல்லுகுரேன்
தெய்வலோகத்தில் தேவர்களும் தான்கூடி
அகிலங்களழியுமென்று அழைத்தார்கள் ஒந்தனையும்
மாயோனலாகாது மற்றவருலாகுமோதான்
இந்திரனலாகாது யெவர்களாலாகுமோதான்
பிர்மாவாலாகாது பின்னொருவருலாகுமோதான்
அவரைவிட திருணியிலே அதிகமோ யென்கணவா

ஆள்மையடைந்தவற்கு அவதிவரும் தப்பாமல்
இந்தபடியா ரதிதேவி யெடுத்துரைக்கும்வேளையிலே
அப்போது மன்மதரும் ஆனழகனேது சொல்வார்
அல்லவேபெண்ணரசே ஆரணங்கே சொல்குரேன்கேள்
தேவர்களும்மென்பெருமை தெரிந்துயெதிர்ப்பார்களோ
மாயோனும் யென்முன்னே மரித்து நிற்கபோகாது
இந்திரனும் யென்முன்னே யெதிர்த்துநிற்கபோகாது
பிர்மாவும் யென்முன்னே பின்வாங்கிப்போவா—ரே
மும்மூர்த்தி யென்னிடத்தில் முன்னிற்கபோகாது
ஆகையினாலே அவர்முன்னே போய்வாரேன்
போகவிடைதாடி பெண்மயிலே யெந்தனுக்கு
இந்தபடியாய் மன்மதனுமியம்பினரப்பொழுது
அப்போது ரதிதேவி ஆரணங்கு யேதுசொல்வாள்
அல்லவே யென்கணவா ஆனழகா சொல்லுரேன்கேள்
ஆள்மையாளழிந்தவர்களனேகருண்டுலகத்தினில்
திருணியினாலே திரியோதிரனழிந்தான்
இருமாப்பினாலே இரணியனும் தானழிந்தான்
மார்க்கண்டற்காக மரலியழியலையா
இன்னமனேகம்பேர் இடும்பாலழியலையா
ஆகயினாலே ஆள்மைதனை விட்டுவிடும்
ஆள்மை படைத்தவற்கு அவதிவரும் தப்பாமல்
இந்தப்படியாய்ரதியாள் யெடுத்துரைத்தாளப்பொழுது
அப்போது மன்மதனும் ஆனழகனேது சொல்வார்
ஆள்மையெவருக்கும் ஆகாது பெண்மயிலே
ஆள்மையெனக்கு அடுக்குமடி அருங்கிளியே
திருணியெவருக்கும் செல்லாது யென்கிளியே
திருணியெனக்கு செல்லுமடி எப்பொழுதும்
செல்லாத ஆள்மை செலுத்துவேண்டி தப்பாமல்
யென்திருணி அரிவார்கள் தேவர்களுமெப்பொழுதும்
போய்வாரேன் பெண்மயிலே போகவிடைதாடி யென்றார்

இந்தபடியாய் மன்மத்ரஜன் இனிசொல்லும் வேளையினில்
அப்போதுரதிதேவி ஆரணங்குயேது சொல்வாள்
உங்கள் ஆள்மைதெரியவரும் யாவருக்கும் தப்பாமல்
உங்கள் பெருமைதெரியவரும் பூவுலகில் யாவருக்கும்
பெண்டுகளெல்லாம் புகழ்ந்திடுவாருண்பெருமை
தேவர்கள் முன்பாக செல்லாது உன்பெருமை
இந்த பயணம் யேற்காது மன்மதரே
நான் ரதியாளுடசொல்லை நாயகனே நீ பொருப்பீர்
பெண்புத்தியென்று புரம்பேசி தள்ளாதீர்
இந்தபடியாய் ரதிதேவி இனி சொல்லும் வேளையிலே
அப்போது மன்மதனும் ஆனழகனேது சொல்வார்
அருங்கிளியே ரதிதேவி ஆரணங்கே சொல்லுகிறேன்
ஆயனுருள்ளமட்டும் அடியேனுக்கு சேதமில்லை
பெருமாள் தானுள்ளமட்டும் பெண்மயிலே சேதமில்லை
மாயவனுருள்ளமட்டும் மங்கயரே சேதமில்லை
போகவேண்டாமென்று புலம்பி தவிக்காதே
மருவார்த்தைசொல்லி மரித்து தடுக்காதே
நீ வாழ்த்தி அனுப்பினல் மன்மதனும் போய்வாரேன்
பெண்மணியே யெந்தனுக்கு போகவிடை தாடியென்ருர்
இந்தபடியாக மன்மதரும் இனிசொல்லும் வேளையிலே
அப்போரதிதேவி ஆரணங்குயேது சொல்வாள்
அல்லவே யென்கணவா ஆனழகா சொல்லுறேன்கேள்
மாயவனுலேயல்லோ மன்னரெல்லா மாண்டதுவும்
ஆயனராலேயல்லோ அபிமன்னன் மாண்டதுவும்
திருமால்கப்பட்டாலே செத்தவர்கள் கோடியுண்டு
பெருமாள் கப்பட்டாலே போனவர்கள் மெத்த உண்டு
கோபாலர் வம்மிஷந்தில் கொடுங்கபடு மெத்தவுண்டு
மாயனுட வம்ஷத்தில் மனக்கவடு மெத்த உண்டு
சொந்தமென்று நம்பாதே சொல்தவரு மன்மதரே
இந்தபடியாக ரதிதேவி இனி சொல்லும் வேளையிலே

அப்போது மன்மதருமானழகனேது சொல்வார்
அல்லவே பெண்ணரசே ஆரணங்கேசொல்லுறேன்கேள்
கபட்டாலே மன்மதனை கணைதொடுக்கபோகாது
யெவருலும் மன்மதனை யெதிர்த்து நிற்கபோகாது
புத்தியில்லாபெண்போல பிதற்றுகுறாய் பெண்ணரசே
புத்தியில்லா வார்த்தை பேருலகிலேற்காது
பயித்தியம்கொண்டவள்போல் பலவிதமாய் பேசுகிறாய்
இந்தபடியாய்மன்மதராஜன் இனி சொல்லும் வேளையிலே
அப்போ ரதிதேவி ஆரணங்கு யேது சொல்வாள்
அல்லவே யென்கணவா ஆனழகா சொல்லுகிறேன்
நான்பத்தினியாள்பேசினது பயித்தியம்போல் தோனுகுது
பெண்பெருமாள் பேசினது பிதற்றுகுரேனென்றீர்கள்
பத்தினியாள் பேசினது பழுதாக போகாது
நான் உத்தமியாள் பேசினது ஒடனே தெரியவரும்
பெண்பெருமாள் பேசினது பின்னால் தெரியவரும்
ரதியாள் புலம்பினது நாளைதெரியவரும்
நன்மைசொன்னேன் யென்கணவா தீமையெனநினைத்தீர்
இந்தபடியாய் ரதிதேவி இனிசொல்லும் வேளையிலே
அப்போ மன்மதனும் ஆனழகனேது சொல்வார்
அல்லவே பெண்ணரசே ஆரணங்கே சொல்கிறேன் கேள்
இத்தனை நேரம் நீயெதிர்வார்த்தை பேசினதும்
கெம்பீரமாக கேட்டிருக்க வேளையில்லை
சந்தோஷமாக தனித்திருக்க நேரமில்லை
தாதியாரெல்லோரும் பக்கத்திலிருந்து சொன்னாள்
பாங்கிமாரெல்லோரும் பக்கத்திலிருந்து சொன்னாள்
தோழிகளெல்லோரும் சொல்லுறுதியாய் சொன்னாள்
சொல்லுறுதியாலே ரதிதேவி தோணாமல் பேசுகுறாள்
இந்தபடியாய்மன்மதராஜன் இனிச்சொல்லும்வேளையிலே
அப்போரதிதேவி ஆரணங்குயேது சொல்வாள்
அல்லவே யென்கணவா ஆனழகா சொல்லுகிறேன்கேள்
அஞ்சிவயதினிலென்னை அறியாதநாளையிலே
கொஞ்சவயதில் குழந்தை பர்வமதில்

பல்லுவிழுந்து முன்னே டாரியென்றால் மன்மதற்கு
நர்ன்தவிழ்ந்து விளையாடயிலே தாரமென்றுர் மன்மதற்கு
தேவர்களெல்லோரும் திருப்பூட்டி வைத்தாரே
அன்றுமுதலின்றளவு அரை நாழி பிரிந்ததில்லை
இன்று பிரியயென்ன மனங்கூடு மென்றுள்
இந்தபடியாய் ரதிதேவி இனிசொல்லும் வேளையிலே
அப்போது மன்மதனும் ஆனழகன் யேதுசொல்வான்
அல்லவே பெண்ணரசே ஆரணங்கே சொல்லுகிறேன்
மலைக்காதே ரதிதேவி மயக்கமோ மங்கயரே
யெனக்கு மலைப்பாகதோணுகுது மதிமயங்கிநிற்கிறது
யெனக்கு அதிசயமாய் தோணுகுது நீ அரிவழிந்துநிற்கிறது
பிரமையாய் தோணுகுது நீபுலம்பி தவிக்கிறது
பெண்புத்திபோலே புலம்பி தவிக்காதே
பிரமையினலே பிதுர் கலங்கி நிற்காதே
நீ புலம்பிதவித்தாலும் நான் போய்வருவேன் தப்பாமல்
இந்தபடியாய் மன்மதராஜன் இனிசொல்லும் வேளையிலே
அப்போரதிதேவி ஆரணங்கு யேது சொல்வாள்
அல்லவே யென் கணவா ஆனழகா சொல்லுறேன் கேள்
நான்போக வேண்டாமென்று புண்ணியனே சொன்னதற்கு
நீர் பிடித்த பிடிவாதம் பேசுகிறீர் மன்மதரே
நான்சொன்னசொல்லை நீர்கேட்டால் சுகப்படுவீரெப்போதும்
பெண்சொல்லை நீர்கேட்டால் பேருலகிற் கேற்காதோ
பத்தினியாள்சொல்கேட்க பாரிலுள்ளோர்க் கேற்காதே
ரதியாளுட சொல்லை யென்னுயகனே தட்டாதீர்
இந்தபடியாய் ரதிதேவி இனிசொல்லும் வேளையிலே
அப்போது மன்மதன் ஆனழகனேது சொல்வார்
அல்லவேபெண்ணரசே ஆரணங்கே சொல்லுறேன் கேள்
தெய்வலோகத்தில் தேவர்கள் தான்கொண்டாடி
ஆயிரங்கண்ணனென்னை அழைத்துவரச் சொன்னுரே
போகாமலிருந்தால் பிழைமோசம் மெத்தவரும்

அருங்கிளி சொல்கேட்டு அரசாள்வதுண்டடியோ
பெண்புத்திகேட்டு பூலோகமாள்வதுண்டோ
உன்புத்தி நான் கேட்டாலுலகத்திற் கேற்காது
பெண்புத்தி சொல்லாமல் பேசாதே போடி யென்ருர்
இந்தபடியாய் மன்மதராஜன் இனிசொல்லும் வேளையிலே
அப்போரதிதேவி ஆரணங்கு யேது சொல்வாள்
அல்லவே யென் கணவா ஆனழகா சொல்லுறேன்கேள்
அஞ்சிவயதிலென்னை அரியாத நாளையிலே
கொஞ்ச வயதிலென்னை கொண்டுவந்த நாள் முதலாய்
பெத்தவரை நான் காணேன் பேரு சொல்லக் கேட்டதுண்டு
வளத்தவரைநான் காணேன் மகிமைசொல்லக்கேட்டதுண்டு
தாயும் தகப்பனும் தம்மையன்றி யாரெனக்கு
கோவில் குளமும் குருபீடமுன்பாதம்
உன்னைவிடதெய்வமெனக்குருசி யுண்டோ மன்மதரே
இந்தபடியாய் ரதியாளினிச் சொல்லும்வேளையிலே
அப்போது மன்மதனு மானழகனேது சொல்வார்
போகவேண்டாமென்று புலம்பி தவிக்காதே
நான்போகாமலிருந்தால் பொற்கொடியே தேவர்களும்
சாபம்கொடுத்திடுவார் சங்கரனார் தன்மகளே
ஆகையிலைலே அன்புடனே போய்வாரேன்
இந்தபடியாய் மன்மதராஜன் இனிசொல்லும் வேளையிலே
அப்போ ரதிதேவி ஆரணங்குயேது சொல்வாள்
அல்லவே யென்கணவா ஆனழகா சொல்லுகிறேன்
போய்வாரேனென்ற சொல்லைபுண்ணியனே மறந்துவிடும்
போவதுநிச்சயமானல் புண்ணியனேசொல்கிறேன்கேள்
நீர்வருகிறது மெத்த வருத்தங்காண் யென்சாமி
அங்கஜனே உன்னைப்பார்க்க அநேக நாள் செல்லுமோதான்
இந்த யேகவடிவை யெக்காலம் பார்ப்பேனோநான்
வகைமடிப்புக்கேத்த வகைமோசம் வந்து விடும்
இந்தபடியாய் ரதிதேவி சொல்லும் வேளையிலே

அப்போது மன்மதனு ஆனழகனேது சொல்வார்
போகவேண்டா மென்று புலம்பி தவிக்காதே
போய் வருவேன் தப்பாமல் பொற்கொடியே இப்போது
நான் திரும்பிவரமாட்டேனென்று தேன்மொழியேசொல்லா
நான் திரும்பிவருவேனடி தெரிவித்தேனுந்தனுக்கு [தே
அலங்காரம் பார்க்க அனேகநாள் செல்லுமென்ருய்
யேக வடிவையெக்காலம் பார்ப்பதென்ருய்
நீ நினைத்த உடன் வந்திடுவேன் நினைவழிந்து போகாதே
இந்தபடியாய் மன்மதராஜன் யெடுத்துரைக்கும் வேளையிலே
அப்போ ரதிதேவி ஆரணங்கு யேது சொல்வாள்
உம்மைவிட்டு நானும் ஒருபொழுதும் பிரிந்ததில்லே
யென்னைவிட்டு நீர் போகயென்ன மனங்கூடுமோதான்
பெண்ணுளை தனியவிட்டு புண்ணியரே போவதுண்டா
ரதியாளை தனியேவைத்து யென்நாயகனே போவதுண்டா
இந்த படியாய் ரதிதேவி இனி சொல்லும் வேளையிலே
அப்போது மன்மதனு ஆனழகனேது சொல்வார்
அல்லவே பெண்ணரசே ஆரணங்கே சொல்லுகிறேன்
நீ தனித்து இருப்பானே தாதிமாரில்லேயோதான்
நீ பசித்து இருப்பானே பாங்கிமாரில்லேயோ தான்
நீ திகைத்து இருப்பானே திரவியங்களில்லேயோ தான்
உன்வார்த்தைதனை கேட்டால்யென் பிரான நாயகியே ஓடி
[வரும் பூங்கிளிகள்
உன் குரலோசை கேட்டால் யென்கண்மணியே குயிலு
[களுங் கொண்டாடும்
தேரும் புரவியும் யென்நாயகியே திரமாயிருக்கையிலே
உனக்கென்ன குரச்சலென்று யேங்குவதேனிப்போது
யிந்தபடியாய் மன்மதராஜன் இனி சொல்லும்வேளையிலே
அப்போ ரதிதேவி ஆரணங்கு யேது சொல்வாள்
அல்லவே யென்கணவா ஆனழகா சொல்லுகிறேன் கேள்
தாதிமாரிருந்து யென்னயென் சாமியைப்போல வருமா

பாங்கிமாரிருந்தென்ன யென் பத்தாவைப்போல்வருமோ
திரவியமிருந்தென்ன யென்பத்தாவைப்போல்வருமோ
பச்சைகிளிகளெல்லாம் யென்காமக் களஞ்சியமேமைத்து
[னரைப் போல்வருமோ
தேரும்கொடியும் என்சாமிமன்மதனே என்சீமானைப்போல்
இருவரும் சுகமாக இருக்கலாம் மன்மதனே [வருமோ
வேணுமென்ற வேடிக்கை விதவிதமாய் பார்த்திருப்போம்
இந்தபடியாக ரதிதேவி இனிசொல்லும்வேளையிலே
அப்போதுமன்மதனும் ஆனழகனேது சொல்வார்
அல்லவே பெண்ணரசே ஆரணங்கே சொல்லுகிறேன்
வேடிக்கைபார்க்க யென்ரதிகிளியே வேளையிது அல்லவடி
அழைக்கவந்த தூதர்களும் அவசரமாய் நிற்கிரதும்
அவர்வாய்சொல்லை கேட்டவுடன் வரிசையாநானவருக்கு
வாரேனென்று சொல்லி யென்ரதியே வாக்குருதி
[செய்துவிட்டேன்
விருதுதளங்களையும் மின்னவிடையாளே வீதிதனில் நிருத்தி
தேறும்கொடியும் யென்பிரூணநாயகியே தெரிவினிலே
[நிற்கிரதே
நான்பயணம்புறப்படையில் பார்வதியின்கண்ணேபதரிதடுக்
இந்தபடியாய்மன்மதராஜன் இனிசொல்லும்வேளையில் [காதே
அப்போரதிதேவி ஆரணங்குயேது செப்வாள்
அல்லவே யென்கணவா ஆனழகாசொல்லுறேன்கேள்
அனேகங்கோடிதேவர்களும்மை அழைக்கநீர்போவதுண்
இப்போயழைக்கவந்த காரியத்தைமாயன்மகனே [டோ
[அன்புடனே சொல்லுகிறேன்
அசுரருபத்திரவம் தேவலோகத்தி லண்டமுிக்க போவதில்லை
சூரருபத்திரவம் தேவலோகத்தில் சொல்லமுடி போவதில்லை
பரமசிவனாரும் என்கணவா மன்மதரேபார்த்து சிரிப்பார்கள்
அவர்தபசை குலைக்கஉம்மை தானழைத்தார் தேவர்களும்
அவர் எண்ணத்தை நீர்குலைத்தால் என்சாமி மன்மதரே
[யெரித்திடுவார் தப்பாமல்
இந்தபடியாய் ரதிதேவி யினிச்சொல்லும் வேளையிலே

அப்போது மன்மதனும் ஆனழகனேது சொல்வார்
அல்லவேபெண்ணரசே ஆரணங்கேசொல்லுறேன் கேள்
சங்கரனு ரங்கேதபசிருப்பதுண்டானாள்
நான்பாணம் தொடுத்திடுவேனவர்பதிவை குலைத்திடுவேன்
அவர்தபசுகுலைந்தவுடன் தேவர்கள் சந்தோஷமாயிருப்பார்
தேவர்களிடுக்கம் எந்தன்ரதிக்கிளியே தீர்ந்தாலேபோதுமடி.
இந்திரனார் தனக்கு இடுக்கமதுதீருமடி
தேவர்களிடுக்கம் என்மயிலே தீர்ந்தாலே போதுமடி.
வெகுதேவர் முன்பாகநான் வெந்தாலே கீர்த்தியுண்டு
இந்தபடியாய் மன்தராஜன் யெடுத்துரைக்கும் வேளையிலே
அப்போரதிதேவி ஆரணங்கு யேதுசொல்வாள்
அல்லவே யெண்கணவா ஆனழகா சொல்லுறேன் கேள்
கீர்த்திவருமென்று என் துரையே கெவுருவமாய் சொன்னீரே
நாம்சுகமிருந்துகீர்த்திபெற்றால் தொல்லுலகோர் மகிழ்வார்கள்
நீர்சாம்பலாய் போனவுடன் சந்தோஷமா யிருப்பார்
நீர்போகவே ஆகாது புண்ணியனே யென்கணவா
யென்றுசொல்லி ரதிதேவி யெதிரேமரித்தாள்காண்
இருகையை நீட்டியெழுந்து மரிந்தாள்காண்
பெண்ணுளை கொன்றுவிட்டு புண்ணியனே போய்வாரும்
இந்தபடியாய் ரதிதேவி யெதிர்மரித்து நின்றாளே
அப்போது ஆங்காரமானார்காண் அழகுதுரைமன்மதனும்
பெண்ணே நீஎன்னுடனே போர்கொடுக்கஆள்மையுண்டோ
பாரடியே யிக்ஷணமே உன்னைபடுக்கவைத்து நான்போறேன்
உன்திராணி அடக்கிவைத்து தெய்வசபை நான்போறேன்
உன்கெருவமடக்கிவைத்து கெம்பீரமாய்போறேன்
என்றுசொல்லி வில்லை யிடதுகையில் தானெடுத்தார்
வலதுகையில் பாணம் மன்மதரும் தானெடுத்தார்
இப்போயெதிர்த்தாலுன்னை இருதுண்டாய் கொய்திடுவேன்
இந்தபடியாய் மன்மதராஜன் யெதிர்த்து நின்றவேளை
அப்போ ரதிதேவி ஆரணங்குயேதுசொல்வாள்

ஆங்காரந்தாஞகி அழகுதுரை முன்னெதிர்த்தாள்
உன்திருணியெல்லா மென்னெதிரே திரமாககாண்பி இங்கே
யென்றுசொல்லவில்லை யெதிர்மரித்து தானெடுத்தாள்
மாருதட்டி சேலைவரிந்து கட்டினின்றுளே
மோகபாணத்தை ரதிதேவி முன்கையில் தானெடுத்தாள்
பாருங்காண் யென்திருணி பதருதீர் மன்மதரே
ஆங்காரத்தாலே அழகுதுரை முன்னெதிர்த்தாள்
காமனுட இருகண்ணும் கடுந்தணலாய் போகுதப்போ
இருவர்களும்கோபமுடன் யெதிர்த்துனின்றுன் னேரம்
இந்தப்படியாய் இருவர்களும் யெதிர்த்துப்போருடையில்
மாரிபோல் பாணமதை வருஷித்தா ரன்னேரம்
மன்மதபாணம் ரதியாள் மார்பிலே பட்டுருவ
ரதியாளுடபாணம் மன்மதற்கு நலமாகபட்டுருவ
சல்லடைக் கண்போலே தய்த்ததுகாண் இருவருக்கும்
இருவரும் போர்தொடுத்து யெதிர்த்தாரொருசாமம்
இருவரும் கெர்ச்சித்து யெதிர்த்து போருடையிலே
கெர்ச்சனைகள்கேட்டு தேவர்கள் கதிகலங்கி நின்றுர்கள்
இருவருக்கும் மோகவெறி இருதயத்திலடங்காமல்
மோகவெறிகொண்டு இருவரும் மூர்ச்சையாக தானிருந்தார்
மன்மதரும் மங்கையரும் மயங்கிகிடக்கயிலே
தூதர்கள் யெல்லோரும் சுருக்கா எழுந்திருந்து
இருவருட கெர்ச்சனைகள் பேசுமாய் கேட்டோமே
யென்ன அதிசயமோ யேதோ தெரியாது
யென்றுசொல்லி தூதர்கள் யெழுந்திருந்துவாருர்கள்
அந்தபுரத்துக் கருகாக வாருர்கள்
அங்கேதாதிக ளெல்லோரும் தயங்கிநிற்க கண்டார்கள்
மங்கையரைப்பார்த்து தூதர்கள் மன்மதனெ ரெங்கேயென்றுர்
பாங்கிமா ரெல்லாரும் மன்மதன் பத்தினியா ளண்டையிலே
தற்கமிட்டுசண்டைசெய் தருனம்போல் தோனுதுகாண்
இந்தப்படியாய் தாதிகள் இருக்குமந்த வேளையிலே

அப்போது தூதர்களுமன்பாக யேதுசொல்வார்
அல்லவே தாதிகளா அனைவர்களும் கேளுமிப்போ
மல்லுயுத்த மரன்மட்டும் வகைமடிப்பு மெத்தவுண்டு
யென்றுசொல்லி தாதிகளை யினிவாங்களென்றழைத்தார்
தாதிகளு முன்னாக தூதர்களும் பின்னாக
யெல்லோருமாக இருவரிடம் வந்தார்கள்
கைபிடித்தவில்லோடே இருவருங் களைத்திருக்ககண்டார்கள்
எண்ணிவந்த எண்ணமெல்லாம் யிங்கேவெளியானதுகாண்
யென்றுசொல்லி தூதர்கள் யேங்கிஞரன்னேரம்
தாதிகள் யெல்லோரும் ரதியாளைத்தழுவி யெடுத்தணைத்தார்
தூதர்கள் யெல்லோரும் மன்மதனை தூக்கி யெடுத்தணைத்தார்
சோகந்தெளிய இருவரையும் சொகுசா யுபசரித்தார்
மூர்ச்சை தெளிய முழுதும் உபசரித்தார்
இருவரும் களைதீர்ந்து யெழுந்திருந்தா ரன்னேரம்
மன்மதற்கு தூதர்கள் வகையாக யேதுசொல்வார்
வாதிடும் வேளை மன்மததுரையே வன்மையுள்ளகாலமிதோ
தெய்வலோகத்தில் தேவேந்திரன் முதலாய்
பெருமாளும் நாரதரும் பிர்மாவும் தேவர்களும்
மன்மதரை இன்னும் வரகாணும் யென்றிருப்பார்
தூதர்கள் மன்மதற்கு சொன்னாரே சொல்லலையோ
சொன்னதே புண்டானு லவர்துருசாக வந்திடுவார்
கண்டவுடன் தூதர்களை காமனுர் வந்திடுவார்
வாருங்கள்மன்மதரே நாங்கள்வந்துநேரமாகுதுதான்
யென்னமோ யென்று யேங்கியிருப்பார்கள்
வாருங்கள் மன்மதரே நாங்கள்வந்து வெகுநேர மென்றார்
அப்போரதியாளு மாரணங்கு யேது சொல்வாள்
மன்மதரேயென்கணவா தூதர்கள்மன்றாட காரணமேன்
நாமிருவரும் போய்வருவோ மென்றாள் ரதிதேவி
நான்கூடவருவேனென்றாள் கொம்பனையா ளன்னேரம்
நான் இருக்க வருவேனென்றாள் உத்தமியா ளன்னேரம்

நாமிருவரும் போனால் அவர்களுக்கும் அச்சமுண்டு
நான் இருக்க வருவேனென்றாலும் அவர்கட்கு அச்சமுண்டு
நான்கூட வந்தேனென்றால் கோபாலற் கச்சமுண்டு
ஆகையினாலே என்சாமிமன்மதரே அன்புட்னே வாரேனென்
இந்தபடியாய் ரதிதேவி யெடுத்துரைக்கும் வேளையிலே [றாள்
அப்போதுமன்மதரும் ஆனழகனேது சொல்வார்
அல்லவே பெண்ணரசே என்னாசைக் கிசைந்தகண்ணே
தெய்வசபைக்கி யென்தேவி வருவதுண்டோ
கூட்டாக பெண்ஜாதி கூடவருவதுண்டோ
யென்னோடொத்தமன்னர்கள் யென்னை நகைப்பார்கள்
தெய்வசபையில் சிரிப்பார்கள் பெண்ணரசே
உன் இச்சை யதையெல்லாம் இருதயத்தில் தானடக்கி
உன் உத்தாரம் கேழ்க்கிறேன் ஒருநாழி இங்கிருக்கேன்
பெண்ணே ரதிதேவி போகவிடை தாடியென்றான்
இந்தபடியாய்மன்மதராஜன் யெடுத்துரைக்கும் வேளையிலே
அப்போ ரதியாளும் ஆரணங்கு யேதுசொல்வாள்
பயந்துநடுங்குதே நீர்பயணம் போய்வாருமென்றாள்
சரீரம்நடுங்குதே யென்சாமியே நீர்போய்வாரும்
யேங்கியே மனந்தளர்ந்து யெண்ணாதும் யெண்ணியிப்போ
தன்னுடைய அரன்மனைக்கி தானடைந்தாள் தாதியுடன்
சாமியை நினைத்து சாய்ந்துவிட்டாள் பஞ்சணைமேல்
தூக்கங்கள்போல ரதிதேவிநாயகியாள்சோகமாய்தான்விழுந்து
மன்மதன்மேலே மகிடத்துரைச்சியவள் மனக்கவலைதானாகி
கர்த்தாவே யென்றுரதியாள் கண்ணுறக்கமானாள்காண்
இந்தபடியாய் ரதிதேவி இருக்கின்ற வேளையிலே
அப்போது மன்மதனும் ஆனழகன் தான்பார்த்து
பத்தினியாள்வாக்கியத்தால் பயணமென்றார் மன்மதரும்
உத்தமியாள் வாக்கியத்தால் உடனே பயணமென்றார்
தென்றல்தே ருகாக தேசிகனார் வந்துனின்று
மூன்றுபிர தக்ஷணமாய் முன்பாக தூபமிட்டு

சேயன் நான் வைகுந்தா ஜெயம் பெறவேவேணுமென்று
தட்டி குதிரைதன்னை செர்ட்டுசலாம்செய்து பின்னே
சன்மார்க்க முள்ளதிட சிம்மாசன பீடம்
தன்னில் மதன்யேற பொன்னின்மலர் தூவ
சந்திர குடைபிடிக்க இந்திரபதி மதிக்க
சட்டென்ற னவற்போற்ற கட்டியங்கள் கூறிவாழ்த்த
சாமரமாதர்போட பாவலர் துதிகொண்டாட
சாகரமுரசுபோட அக்ஷசஸ்திரிகள்பாட
தன்றுஅறங்கள்கூட வண்டுகீதங்கள்பாட
தங்கஆடை இடைகுலுங்க பெண்கள் படைநடுங்க
சக்ஷுசுபணி ஜொலிக்க மக்ஷுகொடி களைக்க
சக்கர தேரிலங்க உக்கரகொடி துலங்க
சரசத்தவுணர்போற்ற வரதனரதம் நடத்த
சம்பிருதிவேள்துரையும் அன்பாக தான்பார்த்து
விருதுதளங்களையும் பொருந்திடவே முன்னேவிட்டார்
வாத்தியங்களெல்லாம் மகாமேருதானடுங்க
பேரிகை சப்தம் பிரமலோகம் தானடுங்க
பதினாலு லோகமும் படபடென்று தானடுங்க
அஷ்ட்டகஜங்கள் அலரி நடுநடுங்க
உச்சியில் நக்ஷத்திரங்கள் உதிர்ந்து விழுந்துவிட
சந்திரரும் சூரியரும் தானே கெதிகலங்க
சப்தசாகரங்களும் தளம்பி கொதியெழும்ப
தெய்வ லோகங்களுமே திகிலடைந்து தானடுங்க
இதுயென்ன அதிசயங்கள் யென்றுமெள்ள தான்பார்த்தார்
மன்மதனார் வருகின்றமகிழ்ச்சியைத் தான்பாருமென்றார்
ஆனமுகன்வார அதிசயத்தை பாருமென்றார்
தென்றல் தேர்வார திரமதனைபாருமென்றார்
இந்தபடியா தேவர்க ளின்பமுடன் தான்பார்த்து
மனமகிழ்ச்சியாக மகிழ்ந்திருந்தா ரன்னேரம்
மன்மதனார் தேர்நடத்தி வருகிறாரப்போது

காமபடைகள் கலந்து விளையாடிவர
மன்மதபடைகள் மகிழ்ந்து விளையாடிவர
கூட்டபடைகள் கூடிவிளையாடிவர
அனேக தளத்துடனே ஆனழகனப்போது
அவர் ஆசாரவாசல் அணிமுகப்பை கண்டார்கள்
தென்னந் தெருநடந்து தேரோடும் வீதிவிட்டு
மன்னர்தெருகடந்து மந்திரிமார் வீதிவிட்டு
செட்டித் தெருகடந்து தெரிவையர்கள் வீதிவிட்டு
கடையும் கடைதெருவுங்கன்னடியர் வீதிவிட்டு
பட்டணங்கள் தாண்டிபயணஞ்சென்றார் மன்மதரும்
ஆரோக்கிய புரம்விட்டு அதட்டினார் தேருதன்னை
தெய்வலோகம்நோக்கி மன்மதராஜன் திடமாகபோயிலே
வழியில்சகுனங்கள் வகைவகையா கண்டார்காண்
கூகையுங் கோட்டானும் குலாவி தவிக்கிரதும்
காகமும் ஓரியும் கதரிதடுக்கிரதும்
ஓரிகுறிக்கிட்டு ஓந்திமரிக்கிரதும்
கொள்ளிவாய் போய்கள் கூத்தாடி நிற்கிறதும்
ரெத்தமாய் பூதபிரேதம் நின்று கூத்தாடுறதும்
அஷ்டமத்தில்கெருடன் வட்டமிட்டு மரிக்கிறதும்
இந்தசகுனத் தைக்கண்டு யேங்கினார் மன்மதரும்
ஏங்கிமனங்கலங்கி மன்தனாரப்போ யெண்ணங்கள்வேறாகி
பத்தினியாள்சொன்னது பலித்ததென்றார்மன்மதரும்
உத்தமியாள்சொன்னது உடனேபலித்ததென்றார்
யெந்தன்ரதிகிளியாள் சொன்னது நலமாய் பலித்ததென்றார்
யென்னகாரணமென்று யேக்கங்கள்தானாகி
காலமுடிவோ கர்த்தாவின் சொல்படியே
யென்விதியின் பயனோ பிர்மதேவன் சொல்படியோ
யென்காலம் குருகிச்சோ கர்த்தாவின் சொல்படியோ
யென்றுஆலோசனைகள்செய்து ஆனழகன் தானினைத்து
யேதேதிருந்தாலும் யென்செய்வோமென்று சொல்லி

தைரியங்கள் கொண்டுதன் மனதைதான் தேற்றி
யெண்ண மெல்லாம்தள்ளி யினிநடந்தார் மன்மதரும்
தெய்வலோகம்நோக்கி மன்மதன் திடமாகபோனுர்காண்
இந்திரன் சபையை யெதிருக கண்டார்காண்
முப்பத்து முக்கோடி முனிவர்சபை நடுவே
நாற்பத் தெண்ணுயிரம் ரிஷிசூழ்ந்த சபைநடுவே
வானவரும் வதிஷ்டரும் மற்றுமுள்ள ரிஷிமாரும்
பேர்பெரிய நாரதரும் பேருன இந்திரரும்
சந்திரரும் சூரியரும் தானவரும் வானவரும்
யெல்லோரும் கூடியிருக்கும் சபைநடுவே
தேரைநிருத்தி மன்மதராஜன் திடமாகதானிறங்கி
தளங்களுடனே தானடந்து வந்தார்காண்
அப்பொழுது இந்திரனுர் அன்பாகதானழைத்தார்
தேவர்களெல்லோரும் திடமாயெழுந்திருந்து
சிம்மாசனம்போட்டு திடமாக கையமர்த்தி
உட்காருமென்று உபசாரம் சொன்னுர்காண்
நமஸ்காரமென்று மன்மதருஜன் நலமாக வீற்றிருந்தார்
இந்திரனைப்பார்த்து யேதுரைப்பார் மன்மதனும்
யென்னை அழைத்ததென்ன யிந்திரனே சொல்லுமென்றுர்
பத்தினிமார் தவத்தை பாங்காயழிக்கவோதான்
உத்தமியாள் தவத்தை உடனே அழிக்கவோதான்
சப்தரிஷிகள் தவத்தை யழிக்கவோதான்
ஆர்தபசையழிக்க அழைத்தீர்கா னிந்திரனே
இந்தபடியாய் மன்மதராஜன் யெடுத்துரைக்கும் வேளையிலே
இந்திரனுரைப்போ யேதுரைப்பார் மன்மதற்கு
மகாமேருசார்பில் மகாதேவர் தபசிருக்கார்
இமயகிரி பருவதத்தில் உத்தமனுர் தபசிருக்கார்
சப்தரிஷிகளுடன் சங்கரனுர் தபசிருக்கார்
பார்வதியாளம்மை பணிவிடையா தானிருக்கார்
பார்வதியும் யீஸ்வரனும் பரிபூரணமாகவேனும்

இந்தபடியாக இந்திரனு மெடுத்துரைக்கும் வேளையினில்
அப்பொழுது மன்மதரும் ஆனழகனோது சொல்வார்
யெப்படியும் யீஸ்பரனை எய்திடுவே னென்கணையால்
கரும்பை சிலைவளைத்தால் கரும்பெரிந்துபோயிவிடும்
அரும்பினால்சிலைவளைத்தால் அக்கினியாய் போயிவிடும்
வண்டுனால்நாணிதொட்டால் வண்டெரிந்துபோயிவிடும்
காமவிகாரமுண்டோ கடவுளந்த யீஸ்பரர்க்கு
மன்மதவிகாரமுண்டோ மகாதேவ னீஸ்பரர்க்கு
ஆருலேயாகும் ஆதிசிவன் முன்னெதிற்க
யெப்படிபோய் நின்றுயெதிர்ப்பதென்றார் மன்மதனும்
இந்தபடியாய் மன்மதராஜன் யெடுத்துரைக்கும் வேளையினில்
இந்திரனுமப்போ யேதுசொல்வார்மன்மதற்கு
மாயன்மகனாரே மன்மதரே கேளுமென்றார்
ஆயன்மகனாரே ஆனழகாகேளு மென்றார்
உம்முடையபாணம் உட்டால் உமைபாகர்மனங்கலங்கும்
சிலையை தொடுத்துவிட்டால் சிவனார்மனங்கலங்கும்
உம்முடைய மகிமை ஒருவருக்கும் தெரியாது
ஆள்மை தெரியாமல் அரண்டீரோ மன்மதரே
உம்முடையமகிமை சொல்வேன் உத்தமனேகேளுமென்றார்
ஆனழகாமன்மதனே ஆனந்த மார்பழகா
பேரில் பெரியபெருமாள் மகனாரே
மாயன்மகனாரே மன்மதரே கேளுமென்றார்
கெங்கையை சிரமதனில் தரித்ததும் ஒன்பெருமை
கெவுரியவளை துடையில் வைத்ததுன்பெருமை
மகாவிஷ்ணுலெக்ஷ்மியை மார்பில்வைத்ததுன்பெருமை
சரஸ்பதியை பிரமதேவன் நாவில்வைத்ததுன்பெருமை
யெந்தனுக்கு ஆயிரங்கண் வந்ததும் ஒன்பெருமை
அகலிகையைபெண்ணாக செய்ததும் உன்பெருமை
யெத்தனையோபெருமைகளு மிருக்குது காணுந்தனுக்கு
தஞ்சமென்று வந்தவரை தற்காக்க வேணுமென்றார்

அபயமென்ற சொல்லை ஆதரிப்ப துன்பாரம்
பாணம் தொடுத்துவிட பயமேது மன்மதரே
பரமனை கொல்லவோ நீர்பாணம் தொடுப்பதுவும்
ஆதிசிவன்முன்னெதிற்க ஆண்மையுண்டோ மன்மதரே
அவர் தபசைகுலைக்க தயங்காதீர் மன்மதரே
மோகினி வேஷமுடனவர் முன்பாகபோயினின்று
காமபாணமெடுத்துமது கய்யாலே தொடுத்துவிடும்
காமபாணம்பட்டவுடன் கலங்குமே அவர்மனது
அவர் தபசு குலைந்தவுடன் சகலருக்கும் சந்தோஷம்
அவர் ஆங்காரகோபத்தை அடக்கிவைப்பீர் தப்பாமல்
அப்போது சந்தோஷமானார்காண் சாமிதுரைமன்மதனும்
சீறியெழுந்து மன்மதன் திரமுடனே பேதுசொல்வார்
யென்னகாரியமென்று மன்மதனியம்பலுற்றாரன்னேரம்
அவதிவரும் காரியத்தை அரிந்தவரும் பார்க்காமல்
இந்திரனார் சொன்னதினு லினிமயக்கம் தானுஞ்
தெய்வசபையதிலே தேவர்களின் மத்தியிலே
யென்னசபதமிட்டார் யிந்திரனார் முன்பாக
இந்தக்ஷணமே யீஸ்பரன் முன்பேயெதிர்த்து
கரும்பென்ற வில்லெடுத்து கையிலேதான்பிடித்தார்
வில்லுக்கிசைந்த வீரபாணம் தானெடுத்தார்
மூஸ்துப்புடனே தேவர்கள் முன்பாக னின்றூர்காண்
யிந்திரனைரபோ மன்மதனை யெதிர்நின்று பார்த்தார்காண்
சவுரியத்தி லுமக்குசரி யொருவரில்லை யென்றூர்
மன்னியநல் இந்திரனார் மனமகிழ்ந்து சொல்லயிலே
உச்சாயம்கொண்டு மன்மதன் உத்தண்ட மானார்காண்
கரும்பென்றவில்லெடுத்து கருவண்டால்நாணிதொட்டு
அரும்பை கணையாக அய்ந்து கணை தானெடுத்தார்
கூட்டபடைகளெல்லாம் கூட்டினார் மன்மதரும்
மன்மதபடைகளெல்லாம் மகிழ்ந்து விளையாடிவர
காமபடைகள் கலந்துவிளையாடி வர்

தம்பூருவீணை சகலமுந் தான்முழங்க
சின்னங்களூத சிறு கன்னிமா ருடிவர
சாந்துபுனுகு ஜவ்வாது பரிமளிக்க
கெந்தங்கள் கஸ்தூரி யெங்கும் கமகமங்க
சகலதளங்களுடன் சந்தோஷமாக வந்து
தென்றல்தேர் தன்னருகில் திடமாக வந்துநின்று
முப்பிரதக்ஷிணம் வந்துமுன்பாக தூபமிட்டு
தென்றல் தேர்மீதில் திடமாகத் தானேறி
அன்னகிளிமேலே அமர்ந்தார்காண் மன்மதரும்
மண்டியிட்டு தானிருந்து வசந்தலைத் தான்பார்த்து
அஞ்சுலெக்ஷண முள்ளதொரு பஞ்சபுரவியையும்
அதட்டிவிடுமென்றுத்தார் அக்ஷணமேவசந்தனவர்
காலகண்ட யீஸ்பரன்மேல் கனகோபந்தானுகி
மகாமேருவைதேடி மன்மதரும் வந்தார் காண்
சுவாமி இருக்கும் தபசுநிலை கண்டார்காண்
கண்டார்காண் மன்மதனும் காளகண்ட யீஸ்பரனை
எண்ணாது யெண்ணியவர் யேங்கிஇருக்கயிலே
தன்னுடைய மந்திரிகள் தலைகர்த்தர் அய்வரையும்
பார்த்தார்காண் மன்மதனும் பரமசிவன் தன்தபசை
அவர் தெக்ஷணு திருமுகமா யிருக்கயிலே
அவர்ஞான நிலையில்நலமாகத் தானிருக்க
அவரென்ன முடிவில் யேகாந்தமாயிருக்க
அவர்கண்ணை திரவாமல் கவனமாய் தானிருக்க
அவர்யேகாந்த மாகஇருக்கின்ற வேளையிலே
சுத்திவளைந்தார்கள் சூரர்படையதுபோல்
அருகில் வளைந்தார்கள் அசுரபடையதுபோல்
மன்மதப்படையை மயக்கவே யேவிவிட்டார்
அவரவர்கள் ஆண்மையை அரனிடத்தில்காட்டலுற்றார்
அப்போது மன்மதரும் ஆனழகனேது செய்தார்
இடதுகையில் வில்லும் வலதுகையில் பாணமுமாய்

சேர்த்துகணை தொடுத்தார் சிவனுரை தான்பார்த்து
கோத்துக் கணைதொடுத்தார் கும்பலிங்கர் தன்மீதில்
மண்டியிட்டு பாணம் மார்பிரள வாங்கயிலே
பாணமிடப் போகயிலே பார்த்தார்கான் யீஸ்பரனை
பார்வையாக பார்த்தார்காண் மன்மதனும்
யெதிரில்நின்று பார்க்கயிலே யேங்கினார்மன்மதனும்
கைவில்லை கீழ்போட்டு கலங்கினார் மன்மதனும்
தெய்வசபையிலே திடமாய் சப்தமிட்டோம்
தேவர்களெல்லாம் நமக்கு தீம்புநினைத்தார்கள்
தீம்புநினைத்தார்கள் சிவன்மேல் கணைதொடுக்க
தேன்மொழியாள் வாக்கியம் திரமாய் பலித்ததிப்போ
ரதியாளின் வாய்சொல்லு நலமாய் பலித்ததிப்போ
சிவன்மேல் கணைதொடுக்க சிந்தை கலங்குதிப்போ
சிந்தை கலங்குதிப்போ சிவனார் முகம்பார்க்க
ஆதிசிவனே அரனாரே என்செயலோ
வேதவேதாந்த விமலனே என்செயலோ
என்காலமுடிவாலே தேவர்கள் கருதினரெந்தனையும்
கருத்திலுதித்த தென்ன கடவுளே தஞ்சமய்யா
கர்த்தனே தஞ்சமென்று கலங்கினின்றார் மன்மதரும்
யெண்ணி நினைந்தார்காண் யீஸ்பரநின் தன்மருகன்
அப்போ குரோதனெனும் அன்பான லோபனெனும்
ஐந்துபேர் மந்திரியும் அன்புடனே வந்தார்காண்
வந்தவரைகண்டு மன்மதராஜன் வகைமோசம் போனே [னென்றார்
யெந்தவிதத்தால் யீஸ்பரனைவெல்வோமென்றார்
ஆலோசனைகள் செய்து அனைவரும் தான்கூடி
யிருக்கின்றவேளையிலே யீஸ்பரியை கண்டார்கள்
கண்ணாலே கண்டார்காண் காசாம்பு நிறத்தாளை
உமையவளை கண்டார்காண் ஒளிவுள்ள மன்மதரும்
அப்போது மன்மதரும் ஆனழகனேது சொல்வார்
இடுக்கத்தை தீர்த்தருளும்யீஸ்பரியே தஞ்சமம்மா

வேதாந்த முனிவருக்கும் விமலருக்கும் நீதுணையே
காரணமாய்நின்ற கண்ணொளியே தஞ்சமம்மா
நால்வேத மாகினின்ற நாரணியே தஞ்சமம்மா
உலகத்தை யின்றருளும் உத்தமியே தஞ்சமம்மா
சரணமடைந்த வென்னை தற்காக்க வேணுமம்மா
பத்தினியாள் வாக்கியத்தை பாருமல் வந்துவிட்டேன்
உத்தமியாள் வாக்கியம் உடனே பலித்ததம்மா
உமையவளை தொழுது உருதிகொண்டார் மன்மதரும்
உருதிகொண்ட மன்மதனும் உத்தண்ட மானுர்காண்
கடவுளை பார்த்து கடுங்கோபந் தானுகி
தேரும் புரவியும் தெரியாமல் தானிருத்தி
விருதும் தளங்களையும் வெகுதூரமாய் நிருத்தி
கையில் பிடித்திருந்த கரும்புவில் கீழ்போட்டு
வில்லெடுத்து புண்ணியனுர் விரைவாக கைபிடித்து
வண்டினுல் நாணிதொட்டார் மன்மதனுரப்போது
புட்பபாண மைந்தும் புண்ணியனுர் தான்தொடுத்தார்
தாண்டியே மன்மதனும் தபசடியில் வந்து நின்று
யீஸ்பரனுர் நிலையை யெதிரினிலே தான்பார்த்து
மண்டியிட்டு உட்கார்ந்து மகாதேவர் முன்னெதிர்த்தார்
வில்லைவளைத்து விசையாக பாணம்வைத்து
மார்புக்கு நேராக வாங்கியிழுத்தார்காண்
தோள்பிரள வாங்கி தொடுத்துவிட்டா ரன்னேரம்
பாணம் பரந்துவந்து பட்டுதுகாண் யீஸ்பரன்மேல்
மார்பிலே தைத்து மருகி உருகயிலே
திக்கென்றெழுந்தார் சிவபெருமானன்னேரம்
கண்டார்காண் பாணத்தை காலகண்ட யீஸ்பரரும்
கோபாக்கினியாக கோபித்தார் யீஸ்பரனும்
முப்புரதிகளையொருமுகூர்த்தத்தில் தாளெரித்தோன்
திரிபுரதிகளை யொருக்ஷணத்தி லெரித்தவரும்
அப்போதவர்க்கு அதிககோபம் வந்ததில்லை

அப்போதந்த அக்கினிக்கண் திறந்ததில்லை
அன்றுபூமியொரு அச்சாக பூலோகம் தேருக
ஆகாசங் கொடுங்கை அஷ்டகஜம் தானுக
நக்ஷத்திரங்கள் நல்லதலங்களுமாய்
முப்பத்தி முக்கோடி முனிவர்களுங் குடையாக
நாற்பத்தெண்ணுயிரம்ரிஷி நவமணிகள் தானுக
வேதங்கள் சாஸ்திரங்கள் வெள்ளைபுரவியுமாய்
சந்திரரும் சூரியரும் தாங்குமொரு வண்டியுமாய்
கயிலாசமேரு கனத்ததொரு வில்லாக
ஆதிசேஷனவனும் அரண்நாணி தானுக
கபடமுள்ள மகாவிஷ்ணு கணையாக தான்சமைந்தார்
காலாக்கினியாக கதருதுகாண்பாணமப்போ
வில்லிலே தான்பூட்டி விசையா யிழுக்கலுற்ருர்
பாணத்தை விரட்டுதுதான் பரமன்கண் அக்கினியும்
நெத்திக்கண் அக்கினி நேரேபோய் பாய்ந்ததுகாண்
பாய்ந்தவுடனே மன்மதனை பற்றிற்றே வேகமதாய்
கொழுந்துவிட்டெரியயிலே மன்மதன் கொண்டவனை நினைத் [தார்
ஆதிசிவனே உனக்கபய மென்ருர் மன்மதரும்
அரநாரே தஞ்சமென்று அக்கினியாய் வெந்தார்காண்
அவர்பச்சை திருமேனி யெல்லாம் படுசூரணமாச்சி
அவர்மாணிக்க மிழைத்த மகுடமெரிந்த தப்போ
ஆணிப்பொன்னிழைத்த அழகுரெத்தினம் சிதறிவிழ
காலாக்கினியாக காமனெரிந்தார்காண்
இந்தபடியாக மன்மதன் யெரிந்ததோர் வேளையிலே
அப்போமன்மத படைகளெல்லாம் மனங்கலங்கி நின்ருர்கள்
அன்று முப்பத்திமுக்கோடி முனிவர்களும் வந்தார்கள்
நாற்பத்தெண்ணுயிரம் ரிஷிமார்கள் வந்தார்கள்
சந்திரரும்சூரியரும் தானவர்கள் வந்தார்கள்
இந்திரரும் வானவரும் இமையவர்கள் வந்தார்கள்
அஷ்டதிக்குபாலர்கள் அனைவருமே வந்தார்கள்

ஆயனும் பிர்மாவும் அனைவர்களும் தான்கூடி
தபசுநிலை யடியில்தான் வந்தாரெல்லோரும்
நெத்திக் கண்ணுள்ள நிமலனையும் கண்டார்கள்
அபயமபயமய்யா ஆண்டவனே தஞ்சமென்றார்
நகைத்து புரமெரித்த நாதனே தஞ்சமய்யா
காலன்தனை உதைத்த கடவுளே தஞ்சமய்யா
ஆதிமூலப் பொருளே அரனாரே தஞ்சமய்யா
அபயஸ்தம் தாருமய்யா ஆண்டவனே போற்றியென்றார்
யேழைபங்காளா யெங்களைக் காருமய்யா
திரிபுரத்தை சிரித்தெரித்த தேவனே போற்றியென்றார்
அம்மையார் பார்வதியை அநேகர் முறையிட்டார்கள்
யிடுகத்தை தீர்க்கவந்த யீஸ்பரியே தஞ்சமம்மா
யென்றுசொல்லி தேவர்கள் இருகைகுவித்து நின்றார்
அபயஸ்தம் கொடுத்து அமர்த்தினா ரீஸ்பரரும்
அஞ்சாதீரென்று ஆதிசிவன் அருகில் வரவழைத்தார்
அனைவர்களும்கூடி அருகில்வந்தா ரன்னேரம்
சகலவியாகூலம் தீரதேவர்கள் சந்தோஷ மானார்காண்
இந்தபடியாக இருக்கின்ற வேளையிலே
அன்றுமன்மதன்மேல் சிந்தையாய் மகருசி தூங்கினவள்
புருஷன்மேல் சிந்தையாய் பெண்ரதியாள் தூங்கினவள்
ஆரோக்கியபுரத்தில் அலண்டுநித்திரை செய்யுரவள்
பஞ்சணை மேலேபடுத்து நித்திரை செய்யயிலே
சப்ரமஞ்சத்தில் ரதியும் தனித்து நித்ரை செய்யயிலே
அல்லல்கனவும் ஆதிசிவன் மகளும் அரட்டியும் காணலுற்
காணாத சொர்ப்பனங்கள் கண்டாளே அன்னேரம் [றாள்
யென்னகனவு கண்டா யேந்திழையா ளப்பொழுது
பத்தாபுரப்படயில் பலசகுணம் கண்டதுவும்
சகுணத்தைகண்டு காமராஜன் தன்னிடந்ததுவும்
தெய்வலோகத்தில் தேவர்கள் தேருதலை சொன்னதுவும்
தேருதலையாலே மன்மதராஜன் தெளிந்துகலை யெடுத்து

யெதிர்த்துகணை யெடுத்து யீஸ்பரன்மேல்போட்டதுவும்
அபயம் அபயமென்று அங்கஜன் அனலாயெரிந்ததுவும்
கொண்டவளைத் தானினைத்து குபீரென் றெரிந்திடவும்
நித்திரையில் கனவுகண்டு நேரிழையாள்தானழுதாள்
அய்யோ சிவனேயென்று அலரிவிழுந் தழுதாள்
அலரிவிழுந்து அடிவயற்றி லரைந்துகொண்டாள்
அப்போ தாதியரோடி வந்து தாயேயென்று வாய்மூடி
யென்னகாரணமென்று யெங்களுக்குசொல்லுமம்மா
தேருதலை சொல்லிதாதிமார் திரமாக கேழ்க்கையிலே
திரேகம்பதருதோரதிதேவி நாயகிக்கு திடுக்கிடுதே அன்னேரம்
வாய்கள் தடுமாறிரதிக்கு மதிமயக்கம்கொண்டுதப்போ
யென்னவென்று சொல்லுகிறாள் ஏந்திழையாளன்னேரம்
நித்திரையில் கனவுகண்டேன் நேரிழையே சொல்லுகிறேன்
பாவியுட சொல்லுயெனக்கு புலிக்கக்கனவு கண்டேன்
கண்டவிடமெல்லாம் யெனக்குகானகமாய் தோணுதடி
நிக்கதரிக்குதில்லை யெனக்குநின்றுகால் போவதில்லை
நான்பாவிபடுந்துயரம் பார்த்துவந்தோர் சொல்லலையே
நான்கன்னிபடுந்துயரம் கண்டுவந்தோர் சொல்லலையே
நீர்தெய்வசபைபோக நான்சிந்தைகலங்குவதேன்
நீர்வானோர் சபைபோக நான்மங்கை கலங்குவதேன்
நான்பெண்ஜாதிசொல் தவறிபோனீரே யென்கணவா
என்சிந்தைகலங்கவந்ததிமை யென்னயென்சாமி
நான்மங்கைகலங்கவந்தமடிப்பெண்ண யென்துரையே
மடிபுகள்வந்துதென்றால் யென்மன்மதராஜனே மனதுகலங்கு
[திப்போ
கலக்கமேவந்துதென்றால் நான்கட்டழகிதூரமோதான்
அகடுகள் வந்துதென்றால் நானருங்கிளியாள்தூரமோதான்
அருங்கிளியாள் தான்காண ஒரு அரிக்கைவரக்காணும்
ஒம்முடைய சேதியறியஒருசேவுகரை நான்காணேன்
ஒம்முடைய வார்த்தையரிய ஒருமன்னவரைநான்காணேன்
அஞ்சலொன்றும் காணேனடி அருங்கிளியே யென்தாதி

அபூதுபுரண்டு ஆதிசிவன்மகளும் ஆங்காரம் தானுகி
மனதுகலங்கி ரதிதேவி நாயகிக்கி மனக்கவலையுண்டாகி
தாதியரைபார்த்து தையலரும் யேதுசொல்வாள்
பாங்கியரைபார்த்து பைங்கிளியா ளேதுசொல்வாள்
அனைவரையும்பார்த்து ரதியாளருகில் அழைத்தாளே
அவர்சிம்மாசனமும் மன்மதராஜன் சேர்ந்திருந்த மண்டபமும்
அவர்கொலுவிருந்த மண்டபமும் கொட்டகையும் கண்டா
அங்கேதங்கமிழைத்த சதுற்படியை கண்டாளே [ளே
சங்கடம் தெளியுமடி தாதிகளா ளங்கவென்முள்
யென்றுரதிதேவி யெடுத்துரைக்கும் வேளையிலே
நல்லதென்றுசொல்லி நடந்தார்கள் தாதிகளும்
தாதிமாருடனே தய்யல்ரதி அங்கேவந்தாள்
சிம்மாசனமும் மன்மதராஜன் சிரந்திருக்கும் மாளிகையும்
உப்பரிகை மேடைகண்டு உருகிருள் ரதிதேவி
மாளிகையைக்கண்டு மயங்கிநின்முளன்னேரம்
சதிர்சபையைக்கண்டு தயங்கிளுள் ரதிதேவி
யெப்போ வந்திச்சபையில் இருப்பீரோமன்மதரே
கண்டுமகிழ்ந்துயென் காமகளஞ்சியமேகண்குளிரபார்ப்பேனு
தாதியரைதானழைத்து தயங்கிமெள்ள சேதிசொன்னுள்
அடிசேருபதியே அவர்சேதி அரியவேனும்
அவர்சேதி அரியவொரு சேவுகரை நான்காணேன்
தெய்வசபைக்குநான் தேன்மொழியாள் போய்வாரேன்
வானவர் சபைக்குநான் மங்கையரும் போய்வாரேன்
நான்கண்ட கிறுபொல்லாது கன்னியரே போய்வாரேன்
இந்தபடியாரதியவளும் யெடுத்துரைக்கும் வேளையிலே
தாதிகள்யெல்லோரும் ரதிக்கு தயிரியங்கள் சொன்னுர்கள்
அப்போது பாங்கியர்கள் ஆதரவு சொன்னுர்கள்
நீபத்தினியாள் கண்டகினு பலியாது உந்தனுக்கு
நீஉத்தமியாள் கண்டகினு ஊரிலே சாய்ந்துவிடும்
நீயெதுக்கும் அஞ்சாதே யென்துரச்சி பெண்ணரசே

நாங்கள் தெய்வலோகம்போயி சேதிகொண்டு வாறோமிப்போ
வானவர்லோகம்போயி வகைதெரிந்து வாறோமிப்போ
தாதியர்களெல்லோரும் ரதிக்கு தைரியங்கள் சொன்னார்கள்
மன்மதனார் சேதிகொண்டு வானவர்கள் வந்தார்கள்
ஆனழகன் சேதிகொண்டு ரதிக்கு அரிக்கையிடவந்தார்கள்
கைகட்டி வாய்புதைத்து தூதர்கள் கடக்கபோய்நின்றார்கள்
அடிவணங்கிநின்று ஆரணங்கு முன்பாக
பாதம்நடுங்கி யைங்கிளியாள் முன்பாக
சரீரம்நடுங்கி தூதர்கள் தான்பயந்து சிற்கையிலே
தாழ்ந்துநின்ற சேவுகரை தாயாரும் தான் பார்த்து
மன்மதனார் சேதிதன்னை வண்மையுடன் சொல்லுமென்றார்
ஆனழகன் சேதிதன்னை அன்பாக சொல்லுமென்றார்
தயிரியவான்சேதிதன்னை தய்யலரும் கேழ்க்கலுற்றாள்
தய்யல் முகம்பார்த்து தூதர்தாழ்ந்து மிகப்பணிந்து
அரியவரே யென்தாயே ஆரணங்கே சொல்கிறேன்கேள்
வாய்திறந்து சேதிசொல்ல வார்த்தைதடுமாருதிப்போ
தான்திறந்து சேதிசொல்ல சரீரம் நடுங்குதம்மா
சரீரநடுங்குதம்மா தாயாரே சொல்லுரேன்கேள்
ஆதிசிவனார் அருந்தபசு தானிருந்தார்
இந்தபடியா யீஸ்பரன் இருக்கின்ற வேளையிலே
தேவர்சொல்கேட்டு மன்மதராஜன் சிந்தை கலங்கிவிட்டார்
அவர்சிந்தைகலங்கி சிவபெருமான்முன் புவந்து
அவர்பூரித்துவில்வளைத்து புஷ்பபாணம் தான்போட்டார்
அங்கஜனும்தொட்டகணை அரனார்மேல்தைத்ததம்மா
மார்பிலேபட்டு மருபுரம் உருகயிலே
அப்போது அரனுக்கு அதிககோபந்தானாகி
நெத்திக்கண் திறந்து நீலகண்டர் தான்பார்த்தார்
கணைதொடுத்த மன்மதரும் கடுந்தனலாகி விட்டார்
அவர்பச்சை திருமேனி புட்பம்போ லாச்சுதம்மா
அவரழகு திருமேனி அக்கினியாய் வெந்ததம்மா

மன்மதனூர்யெரிந்தவுடன் மகிழ்ந்திருந்தார் தேவர்களும்
யிவ்வார்த்தைதன்னை யியம்பினார் தூதர்களும்
வாய் சொல்லைகேட்டஉடன் ரதிதேவி மனதுதுடி துடித்து
சரீரம்மறந்து ரதிதேவி நாயகியும் சாய்ந்தாளே மெய்மறந்து
மின்மறந்துதானயர்ந்து மின்னிடையாள் தான் விழுந்தாள்
நின்றநிலைதவறிநீலகண்டர்தன்மகளும் நிலத்தில்விழுந்தாளே
நிலத்தில்விழுந்தவுடன் ரதிதேவி நாயகிக்கு நினைவுபிறந்தது
[காண்
நினைவுபிறந்துரதிதேவி நாயகியாள் நிலத்தைதடவலுற்றாள்
அய்யோசிவனேயென்று அடித்தாள் நிலைமார்பை
பூமியைவிட்டு பொக்கென்று தானெழுந்தாள்
நிலத்தில்தரிக்கிதில்லை ரதிதேவிநாயகிக்கு நிலத்தில்கால்பாவ
ஆபரணமெல்லாம் அவிழ்த்தெரிந்தா ளன்னேரம் [தில்லை
தலையின்மயிர் விரித்து தயங்கிநின்று தானழுதாள்
குத்தினாள் மார்பில் குமரிநாலடிவயிற்றில்
பயித்திய காரியைப்போல் பலவிதமாய் பேசுகிறாள்
பித்துகொண்டவள் போலே பிதற்றி உளருகிறாள்
சதுரடியைவிட்டு சங்கரனார்மகளும் தானோடிவருகையிலே
தாதிமாரெல்லோரும் தானோடி வாரார்கள்
வாசல்மன்ன ரெல்லோரும் மதிமயங்கி நின்றார்கள்
ஆசாரவாசல் அணிமுகப்பில் வந்தார்கள்
அங்கேமூர்ச்சையாய்தான் விழுந்தாள்மெய்குழலாளன்னேரம்
அப்போதுதாதியர் களருங்கிளியை தானெடுத்து
தூக்கியெடுத்து சோகந்தெளிய வைத்தார்
அப்போரதியாளும் ஆலோசனைகள் செய்து
ஆரடி தாதி யெந்தன் அழகியபல்லக்கை கொண்டா
அந்திரதேவர்களை சிந்தைகலங்கசெய்வேன்
அதிவீர இந்திரனை மதிமைகுலைத்திடுவேன்
அமரர்பதியை அடக்கிவைத்து வந்திடுவேன்
அல்லாமல் தெய்வலோகம் கொள்ளையிட்டு வாரேனென்றாள்
அப்போது தாதியர்கள் குப்பென்று தண்டிகையை

அன்னேரம் ஆசாரவாசல் முன்னாலே கொண்டுவந்து
ஆதிமகள் தனக்குசேதி சொன்னார் தாதியர்கள்
அருங்கிளி வாகனத்தாள் துருசாகவே யெழுந்து
அள்ளிகிளியாளும் பல்லக்கிலேறி விட்டாள்
அப்போ தாதியர்கள் தண்டிகையை தக்ஷணமே தான்தூக்கி
ஆரபார வேகமுடன் வீரசூரங்கொண் டெழுந்து
அதிசுருக்கில் போகவென்று சதிருகவே நடந்தாள்

முடுகு

ஆலமுண்ட கண்டன்மகள் பாளையம் நிறைந்துசூழ
அந்த இந்திரனை
தேடிமுந்து முந்துதாதிஓடி அதிரவனங்கள் பொடியாகவும்
பூமியசைந்தாடவும் தேவர்கள் கண்டோடவும்

அங்கரும்பு மாரனுட மங்கையரை கொண்டிரக்க
அங்கேதேவர் சபையெல்லாம் தேடினார் மன்மதரை
யெங்கினுந்தேட யெவர்களையுங்காண வில்லை
பாரிலுள்ள பேர்களெல்லாம் பரதவித்து நின்றார்கள்
தெய்வசபை யெங்கும் தேடியும் காணவில்லை
தெய்வசபையில் தேவர்களை காணவில்லை
சங்கரன் தபசடியில் தான்தேடி வந்தாளே
அங்கேசகலரையும் கண்டுதயங்கி நின்றுபார்க்கயிலே
அங்கே இந்திரனு மப்போ யெதிர்நிற்க கண்டாளே
கண்டவுடன் ரதிக்கி கனகோபமுண்டாகி
அல்லவடா யிந்திரனே சொல்லுகிறேன் கேளுனக்கு
அன்னாளில் வேள்மாரன் மன்னவன்செய் வாதனையால்
அகலிகை நீபுணர்ந்தது கண்டுமா முனிவன்
ஆயிரங்கண்ணுக்கிவைத்த தாள்மையதை நீயறிந்தும்
அந்த ஆத்திரத்தைமனதில்வைத்தென் கோத்திரத்தை
ஆரடா சண்டாளா பாரடாஒந்தனுட [நீகெடுத்தாய்
நீயாளும் தெய்வலோகமதை பாழடைய செய்குரண்டா
ஆடாதகூத்தாடி வாடாவெளியே யென்றாள்

ஒந்தன் இந்தி ராணியவள் யெந்தனைப்போலாவாள்
அவளும் யென்னைப்போலலையவெகுநாளாகுமோ
அப்போதடித்துகொண்டாள் மார்பிலலரியேதான்விழுந்தாள்
அங்கேசங்கரநெரித்த சாம்பலைகண்டாளே
அய்யய்யோ பாவியென்று அலரிவிழுந் தழுதாள்
அப்போ ரதிதேவி ஆரணங்கு யேதுசொல்வாள்
யென்கணவா மன்மதனே இதற்கோநான் யென்பிறந்தேன்
அக்கினியில் நீயெரிய அவர்கள் சொல்லை கேட்டீரே
நீதியாயெரிய தேவர்கள்சொல் கேட்டிரே
பெண்சாதிசொல்லை என்துரையேநீரும் பொருக்காமல்போனீ
சிவனுடைய அருகில்தேவர்களை தான்பார்த்து [ரே
தூரஒதுங்கிநின்று துடங்கிபுலம்ப லுற்றாள்
பக்கம்ஒதுங்கி பரதவித்து தானழுதாள்
யிருவரும் சேர்ந்திருக்க யெக்காலம் காண்பமோ தான்
வாய்விட்டலரி ரதியாள் மதிமயங்கிதானிருந்தாள்
அலரிவிழுந் தழுதாள் ஆபரணம் சிந்திவிழ
மாலைநெரிஞ்சிவிழ மண்மேல்புரண்டழுதாள்
சாந்துபுனுகு ஜவ்வாதுதொட்டகையாள்
தீரமான மன்மதரை சேர்த்துதழுவும் கையால்
ஆனழகன் மன்மதனை அணைத்து தழுவும் கையால்
புண்ணியனார் மன்மதனை புணர்ந்துதழுவும் கையால்
ஆனழகன் பணிவிடைக்கி அமர்ந்திருந்த கய்யாலே
அவர்பணி விடைக்கேத்த பத்தினியாள்கையாலே
தரையிலுள்ள புழுதியெல்லாம் தடவலுற்றாளப்போது
மயிருல்ஜம்பங்கி யெண்ணைவாரிமுடித்தகுழல்
தெய்வசபை புழுதிபட்டுகுழல் சிக்குபடநின்றழுதாள்
அரைந்துகொண்டாள்மார்பில் அடிவயற்றில் தானரைந்தாள்
குத்திகொண்டாள்மார்பில் குமரிஞளன்னேரம்
தலையைவிரித்து தரையில் புரண்டழுதாள்
கூந்தலைவிரித்து கோவென் றழுதுநின்றாள்

வச்சிரமிழைத்த அவள்வாளி தெரித்துவிழ
முத்தாலிழைத்த அவள்மூக்குத்தி அற்றுவிழ
டத்தாவை நினைத்து பரதவித்தா ளன்னேரம்
கணவன்மேல் சிந்தையாய் கலங்கிறு ளன்னேரம்
இந்தபடியாய் ரதிதேவி இனிப்புலம்பும்வேளையிலே
கூடவந்த தாதியர்கள் கூடியழுது நின்ருர்
மன்மத னெரிந்ததுவும் மங்கை புலம்புவதும்
சிவனுடைய அருகிருக்கும் தேவர்களைத்தான்பார்த்து
அப்போரதிதேவி ஆரணங்கு யேதுசொல்வாள்
யென்கணவாமன்மதனேயிதுக்கோ நான் பெண்பிறந்தேன்
அக்கினியில் நீயெறிய அவர்கள்சொல் கேட்டீரே
நீதியாயெரிய தேவர்கள் சொல்கேட்டீரோ
பெண்சாதிசொல்லை யென்துரையேபொருக்காமல்போனீரே
மனையாட்டி சொல்லைஎன்காம களஞ்சியமே மதிக்காமல்
[போனீரே
நான்குறுக்கே மறித்தேனே மாயன்மகனே கேர்வென்றமு
சற்றுமரியாமல் யென்துரையே தயிரியமாய் வந்தீரே [தேனே
தயிரியமாய் வந்தீரேநீர் தணலாயெரிய வோதான்
அக்கினியாய்வேகயிலே நான்பாவிசண்டாளி அருகிலிருக்கலை
யென்வயற்றையெரியுதேவயறு பற்றிவேகுதிப்போ [யே
யென்கும்பி யெரியுதே யென்குடல்பற்றி வேகுதிப்போ
யென்யீரல் யெரியுதேயென்துரையே இருதயமும்வாடுதே
பற்றுதேயென்னங்கம் யென்துரையேபந்தத்து செய்யதுபோல்
உருகுதே யென்னங்கம் ஓமத்து நெய்யதுபோல்
வெந்தஉடம்படியோ யெனக்கு வெறகுமெத்த செல்லாது
கனிந்தஉடம்படியோ யென்தோழிகட்டை மெத்தசெல்லாது
மங்கையெனக்கு இந்தவையகமும் மயங்குதடி
இங்கேயிருக்க யெள்ளளவும் சிந்தையில்லை
மன்மதரைப்பார்க்க மனக்கவலையாகுதடி
ஆயன்வயற்றில் அவதாரம் செய்தீரே
மாயன்வயற்றில் வந்துதித்தமன்மதரே

யென்னேமாலேயிட்டநாள் முதலாய்மாதாமனேயரியேன்
யென்னே தாலிகட்டினநாள் முதலாய்தாயார்மனேயறியேன்
அண்ணன் தம்பியெனக்கு அரியபிரவி யற்றேன்
ஆருமற்ற பாவியெனக் காதாரமில்லே ஒன்றும்
நான்சலுகையற்றபாவி என்துரையே சபையில் வந்தேன்தனி
[யாக
நான்பேருபெற்ற பெண்சாதி பெருஞ்சபையில்வருவேனே
யென்மன்னவரும் தேவியரும்மருகிவழிநடந்தால்
யென்கொற்றவரும் தேவியரும் கூடிவழிநடந்தால்
கொம்பிலிருக்கும் குயிலதுவும் தெண்டனிடும்
காமனுங் கன்னியும் கடுகிவழிநடந்தால்
கானகத்தில் தானிருக்கும் கருவண்டு தெண்டனிடும்
மரத்திலிருக்கும் மயிலதுவும்கூவிவிடும்
கண்டவர்கள் யாவர்களும் களிப்படைந்து நிற்பார்கள்
இன்றுமரமேறும்பல்லிக்கியென் அழகுதுரையே வார்த்தைக்
[கிடமாச்சே
செவரேறும்பல்லிக்கு எனக்கு சொல்லுகிடமாச்சே
பார்த்தவர்கள் யெல்லோர்க்கும் பழிப்புக்கிட மாச்சே
இந்தபழிப்புக்கிட மாகிநான்பாவி பாரிலிருப் பதுண்டோ
மல்லிகை பூமுடித்துநான்மங்கை இருந்திடவும்
யென்மல்லிகைப்பூ வாசனேயை மன்னனரிந்திடுவார்
நான்செண்பகப்பூமுடித்து தேன்மொழியாள் வீற்றிருந்தால்
கொத்தலரிபூமுடித்துநான் கொம்பனேயாள் வீற்றிருந்தால்
யென்கொத்தலரி வாசனேயை யென்கொற்ற வரும்தானரிவார்
நான் அரளி பூமுடித்து அலரிநின்று வாடுகுறேன்
நான்பூமுடித்து வாழ்வமென்று புண்ணியனே யெண்ணின
நான்பூமுடிக்கபொருக்காமல்நீபோனவிடந்தெரியலேயே [னே
ஏறும்புருவம்யென்துரையேமன்மதனே எழுதியிட்டதிருநா
கூரும்புருவம் கோபாலன்மகனே கொழுந்துவிட்டதிரு [மம்
ஒன்கண்க ளிரண்டுக்கும் கருவண்டை ஒப்பிடலாம் [நாமம்
ஒன்நெத்தி திருநாமம் நெடுமாலுமதிசயிப்பார்
உன்பல்லு ஒளிவுக்கு பார்த்திபன்மயங்கிடுவான்

ஒன்கழுத்தி னழகைக் கண்டவர்கள் கருதிடுவார்
ஒன்மார்பு திருவழகை மண்டலத்தில் கண்டதில்லை
கையழகும் காலழகும்யென்கண்ணைவிட்டு போகலையே
ஒன்சிற்றிடை அழகுகண்டால் ரிதவர்களு மஞ்சிடுவார்
ஒந்தன் அழகைப்போல் ஒருவரில்லை வையகத்தில்
ஒம்மைநான் காணுமல் உயிரோடிருப்பேனே
பத்துமாதம் சுமந்தென்னை பாதகியாள் பெற்றதுவும்
நான்தத்தடி யிட்டதுவு மென்தாயார் வளர்த்ததுவும்
வெளியிலே விட்டாக்கால் யென்மேனி கருகுமென்று
காணலிலே விட்டாக்கால் கருகிடுமேனியென்றும்
தோள்மேலெனை வளர்த்து துடைமேல் நடைபழக்கி
மார்மேலும் தோள்மேலும் வன்னமடி மேலும்
விளக்கெதிரே நான்போனல் மேனிகருகு மென்று
மாணிக்கக் கல்பதித்து வளர்த்தாள் யென்தாயாரும்
அன்றுகட்டிகொடுத்ததென்ன இன்றுகண்ணு லெரித்ததென்
நான்யாருடனே சொல்லி ஆற்றுவேன் யென்குறையை [ன
யின்றுயெனக்கு தேருதல் சொல்லி எனக்குதிடம் சொல்வா
மாயன்மகனுரேயெனக்கு மைத்துனராய்வந்நீரே [ரில்லை
கோவிந்தன்மகனுரே யென்னைகூடி அணைந்தவரே
பொழுதோடிபோகுதே என்துரையேஒன் பொன்முகத்தை
நாளோடிபோகுதே நல்லமுகம் தேடுதிப்போ [தேடுதே
நிலவல்லோ மறையுது ஒம்முடைய நிலமுகம் தேடுதிப்போ
பொழுதைசரியிடுவேன் பொன்வண்டு கொப்பிடுவேன்
நாளை சரியிடுவேன் நல்லவண்டுக் கொப்பிடுவேன்
ஒப்பிடுவேன் ஒப்பிடுவேன் ஒருதைபிரைக்கேஒப்பிடுவேன்
நான்ஒப்பிட்டழுதாலும்யெனக் குறுதிசொல்வார்யாருமில்லை
நான்கூப்பிட்டழுவமென்ருல் என்குறைகேள்பாரொருவரில்
யின்றுஒப்பிட்டபெண்ரதியும் வந்துஉங்களுடன்சேர் [லை
[வதில்லை

உம்முடைய நடுநெத்தி திருவழகு நாலாம்பிறையதுபோல்
மூக்குதிருவழகும் என்காமகளஞ்சியமேமுத்துபதித்தது போல்

கண்புருவம்கொண்டு மென்துரையே உனக்கு கருவண்டை
[ஒப்பிடலாம்
கூரும்புருவம்ரெண்டும் கோதில்லாவில்லதுபோல்
நீர்கிள்ளியிட்ட திருநாமம் கிளியிருந்து கொஞ்சிதிப்போ
நீர் அள்ளியிட்டத் திருநாமத் தழகுக்கிணையேது
நான்போக வேண்டாமென்று புலம்பி தவித்தேனே
இதுசத்துருவாயிருகுதென்றென்சாமியேநான் சொன்னேனே
இதுமோசபயண மென்றுநான்பாவி முன்பாகசொன்னேனே
மடிப்புவரும் யென்று மன்மதரே சொன்னேனே
யென்பாவியுடவாய் சொல்லையென் துரையேநீரும்பாருமல்
[வந்தீரே
சற்றுமரியாமல் யென்துரையேநீர் சந்தோஷமாய்போனீர்
ஆதிசிவனுரும்ப்போ அதிகோபந்தானுகி
அக்கினிகண்ணுலே உம்மை அனலா யெரித்தாரே
உங்கள் வேகம் அடங்கிற்ரே வெந்து தனலானீரே
வெந்துதனிந்தீரே வெளிபட்டு போனீரே
சிங்கத்தின்கன்றே யென்துரையே திகட்டாத தெள்ளமுதே
அங்கத்தின்மேலே அணிந்த திருநாமம்
மங்கையர்கள் கண்டுமதிமயங்கி நிற்பார்கள்
பங்கபடுத்தி விட்டார் பரமசிவன் தப்பாமல்
புங்கவனே யென்துரையே ஒன்திரேகம் புழுதியடைந்ததுவே
அன்றுபோக வேண்டாமென்று புலம்பிதவித்தேனே
நான் இருக்க வருவேனென் றுரைத்தேனே உந்தனுக்கு
நான்வருவேன்வருவேனென்று வழிமறித்துநின்றேனே
நான்காணுதசொற்பனங்கள் பாவிகாணுதென்றுசொன்னே
காரணமாயிருக்குதென்று யென்காதலனே சொன்னேனே
நீர்போனவிடம்பார்த்து நான்பாவிபுலம்பியழுதிருந்தேன்
தானேபுலம்பிமகிடதுரச்சியவள் தயங்கினளன்னேரம்
ஒம்மைவிட்டுநானும் ஒருநாள் பிரிந்ததில்லை
யென்னைவிட்டுநீரும் யிருந்ததுண்டோயெப்பொழுதும்
யின்றுபிரியயென்னரசே யேதுவுண்டோ யிப்பொழுது
சீனிகரும்பேஎன்பச்சைபசுங்கிளியே தெகட்டாதசெந்தேனே

ஆணிகனகமே அங்கஜனே என் துரையே ஆபரண ஆணிமுத்தே
கோமேதகமே மாயவனார்பெற்ற குளிர்மதியே கோகிலமே
ஆருக்கும்நல்லவரே என் துரையே மன்மதரே அருமையரிந்த
எவருக்கும்நல்லவரே என்சாமிமன்மதரே எழிலான [வரே
சீருள்ளயென்னரசே சிலைகரும்பு கையோனே [என் துரையே
பாருக்குள் நல்லவரே என்பிரும்மநாதா பரமனிடம் வந்திரே
பூசைக்குகந்த புண்ணியனே என் துரையே பொய்சொல்லா
எங்களுக்குஏற்றதொரு யெழிலான மன்மதனே [வாசகனே
பெண்களுக்கு நாயகனே பேர்பெரிய மன்மதனே
அழகில்மிகுந்தமன்மதராஜதுரையே அன்புள்ள யென்சாமி
உன்னைநம்பி இருந்தயென்னை நடுத்தெருவில் விட்டீரே
என்னைதனியவைத்து என் துரையேநீரெமலோகம்சேர்ந்தீரே
நீர்வருவீர்வருவீரென்றுநான் பாவிசண்டாளி வழிபார்த்திருந்
நான்குறிபார்த்தநெல்லு ஒருகோபுரத்தை போலாம் [தேனே
திரும்புவீரென்றுயென்னுசை துரையே நான்திசை பார்த்திருந்
வாரிதெளித்ததுபோல் உமக்கு வரணச்சிறுதேமல் [தேனே
மொண்டு தெளித்ததுபோல் உமக்கு முகத்தில் சிறுதேமல்
தேமல்படர்ந்தது நமக்கு தேவலா மென்றிருந்தேன்
வடிவானதேமலென்று நாம்வாழலாமென் றிருந்தேன்
தேமல்படர்ந்தது என்சாமிமன்மதற்குதீம்புவந்தகாரணமேன்
வைகைநதியாட யென்காமதுரையே வருவதுமெப்பொழுது
படுக்கையில் முளைத்தமரம் யென்சாமிபக்கம் வேரற்றமரம்
இன்றுபக்கம் வேரற்றஒன்பச்சை திருமேனி பழுதுவந்த
[காரணமேன்
குளத்தில் முளைத்தமரம் என்காமதுரையே நான்கூட்டுரவற்ற
யின்றுகூட்டுரவற்ற கொடும்பாவி நானுனேன் [மரம்
யென் எண்ணமெல்லாம்பொய்யாச்சியேளிதமே மெய்யாச்சி
மன்னவனேயென்கணவா யென்னைமயங்கவைத்துபோனீரே
என்நாகரத்தினமுத்தே என்னுசைக்கிசைநற்பவழகோருவை
நீர்சாகவயதோ என்சாமிமன்மதரே சாஞ்சிருக்கநாளிதுவோ

நீர்வேகவயதோ வென் காமகளஞ்சியமேவேருக நாளிதுவோ
நீர்போகலயதோ என்புண்ணிய ராஜதுரைபோய்மாளநாளிது
[வோ
சாகநாளான தென்று என்சாமிமன்மதரேசாம்பலாய்போநீரே
ஒம்மைவைத்துபோவேனென்று உறுதியாய் நானிருந்தேன்
யென்னைவைத்து நீர்போகயேற்குமோ வய்யகத்தில்
யென்றைக்கு நான்காண்டேன் யென்யேக மணிவிளக்கே
மாடியில்ஜபமாலை யென்துரையே மண்டலத்தில் பூமாலை
கையில்ஜெபமாலை அத்தைமகனே பக்கத்தில் பூமாலை
டக்கம்கணக்குதென்று என்மாமன் மகனேகைவிட்டிரெந்
[தனையும்
போனவர்கள் போதுமென்றேன் ஒம்முடைய பொன்னு
[முகம் வேணுமென்றேன்
மாண்டவர்கள் போதுமென்றேன் யெந்தன் மன்மதனேவேணு
[மென்றேன்
பொழுதுவிடியலிலே பொன்னுந்தேர் கொள்ளையென்றேன்
வெள்ளிமுளைக்கயிலே வெங்கலதேர் கொள்ளையென்றேன்
வாசல்நிழல்சாயுமுன்னே வச்சிரத்தேர் கொள்ளையென்றேன்
கூரை நிழல்சாயுமுன்னே யென்துரையே ஒன்குளிர்ந்தமுகம்
[தேடுகிறேன்
அந்திநிழல்சாயுமுன்னே ஆனழகாமன்மதரே அமர்ந்தமுகம்
[தேடுகுது
தேசமெங்கும் தேடினாலும்யென்துரையே ஒம்முடைய
[திருமுகத்தைக் காண்பதெப்போ
உலகெங்கும்தேடினாலும் ஒம்முடயஉத்தமுகம்காண்பதெப்
எங்கேஎன்றுதேடுவேன் என்சாமிநீருய்யிருந்தாலே [போ
போநீரே என்னைவிட்டு யென்பூசைக்கிசைந்த [போருதே
[புண்ணியரைப்போல் வருமோ
பாடுபட்டேன்ஒன்னாலேநான் பாவிசண்டாளிபடுத்தா லுரக்க
கேடுவரும்போது மதிகெட்டுவரும்தப்பாமல் [மில்லை
விதியை நினைத்தால் விசாரமுண்டோ யெந்தனுக்கு
மார்பில் நிறைந்தவயிரபதக்கம் பொன்னாலே

தோளில் நிறைந்ததொரு தோள்வாங்கி பொன்னாலே
கையில் நிறைந்த கணையாழிபொன்னாலே
வீசிவரும் கைகளுக்கு மின்னல்போல் கையாலே
ஆடிவரும் கால்களுக்கு அசைந்துவரும் பொற்சிலம்பு
தண்டை சிலம்புகளும் தான் நிறைந்த பனிதிகளும்
இந்திர வர்ணப்பட்டு ஏழுலெட்சம் பொன்பெருமே
மாமனுக்கு பச்சைவடம் மாமியற்குப் பொன்னாடை
கோவைக்காய்போலே கோத்தமுத்து தாவடமும்
பாவக்காய்போல பவழமணி தாவடமும்
அல்லிக்காய்போலெனக்கு அனந்த முடிச்சிகளும்
சரமாக யெனக்கு சந்திரமாலைத் தாவடமும்
முத்திழைத்த ரெத்தினமும் மோகனமாலைகளும்
ஒத்தை சரடுகளும் ஒளிவுள்ள முருகுகளும்
ரெட்டை சரடுகளும் நெரிஞ்சிப்பு நேரமணியும்
இத்தனையும் கொண்டுவந்தார் யென் மாமன் கோபாலன்
எனக்கு எழுவதுகோடி பவுன் இயல்பாகத் தான்கொடுத்தார்
தெட்சினத்தில் கெவுளியது உச்சிதமாய் சொன்னதுவும்
அஷ்டமிட்ட கெருடன் வட்டமிட்டு நின்றதுவும்
நல்ல நக்ஷத்திரமும் நளமான நாள்கேட்டு
முகூர்த்தமதில் தாலிகட்டி முச்சூடும் வாழயிலே
மஞ்சள் நீராடி மருவி இருக்காமல்
சோப்பாரிலாடி சுகமாயிருக்காமல்
படுக்கும் அரண்மனையில் பள்ளிகொள்ளவாரதெப்போ
வந்தவற்கு இந்தவகை மோசம் வந்ததுவே
தேவர்கள் யெல்லோரும் தேடியிட்ட மங்கிலியம்
தொட்டிட்ட மங்கிலியம்துலங்கு மென்றுநானிருந்தேன்
முகூர்த்தமதில் தாலிகட்டி முச்சூடும் வாழலையே
மஞ்சள் நீருடி மருவிவிளையாடாமல்
சோப்பாவிலாடி சொகுசாயிருக்காமல்
படுக்கும் அரைதனிலே பள்ளிகொள்ள வாரதெப்போ

வந்தவற்கு இந்தவகை மோசம் வந்ததென்ன
அன்றுகட்டிகொடுத்ததென்ன இன்றுகண்ணூலெரிததென்ன
அதற்குள்ளேசிவன்கிருபை அமளிவந்து நேர்ந்ததென்ன
முத்துமுடிகுலுங்க யெனக்குபுத்தி சொல்லவார்ரதெப்போ
நீங்கள்வாரியுண்ட அன்னத்தில்நான் மண்ணை கலந்ததுண்டோ
நீங்கள்கலந்துண்ட பொசிப்பில்கல்லைக் கலந்ததுண்டோ
சுற்றத்தாருடன் கூடி நான்பார்விசூது விளைத்தூதுண்டோ
பாவியுடன் கூடி பகைத்ததுண்டோ ஒங்களையும்
யென்னைத்தனியவைத்து நீர்யெமலோகம் சேர்ந்தீரே
கன்னியை தனிய விட்டு நீர் கைலாசம் சேர்ந்தீரே
செவரேயிடிந்துவிழயென்சாமி சித்திரமோ அத்துவிழ
மரமோமுரிந்துவிழ என்துரையே இப்போ மாமரமோயித்து
பூவோ மணங்குரைய பூமரமோ யித்து விழ [விழ
அப்போதடித்துப் புலம்பி ஆதிசிவன்முன்னேவந்தாள்
யென்னகுற்றம் செய்தோமென்று யெரித்தீரே மன்மதனை
பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படியும் பட்டீரே
கல்லடியும் வில்லடியும் கனமா படவில்லையா
அப்படிக்கு மன்மதரு மடித்ததுண்டோ ஒந்தனையும்
அப்போதுயென்தகப்பா அக்கினிக்கண்யெங்கேயே தான்
மார்க்கண்டனுக்கு வயது பதினாறு கொடுத்தீர்
அவர்பூக்குடலைகையெடுத்து ஒம்மைபுசிக்கவந்ததினால்
அவருக்கென்றும் பதினாரென்றெடுத்துரைத்தீ ரென்தகப்பா
வில்லாலடித்தானே விஜயனவன்பார்த்திபனும்
அப்போது இந்த அக்கினிக் கண் இல்லையா
அவர்களைப்போலென்புருஷனும்மை அடித்ததுண்டாசொல்
ஐந்துவிதபுஷ்பத்தாலும்மை அர்ச்சித்தாரென்புருஷன் [வீரே
சப்த்தமலரெடுத்து சாற்றினாரென் புருஷன்
அவர் யென்னகுற்றம் செய்தாரென்றெறித்தீரோ மன்மதனை
அவர் யென்னகுற்றம் செய்தாரேயென் பழியையேற்றிடுவீர்
வீணாக இவ்வுலகில் வினைனந்தம் செய்தாரே

தெய்வசிரையைமன்மதராஜன் திரமாயிழுத்ததுண்டோ
வானவர் சிரையை மருவி யிழுத்ததுண்டோ
ஆரோக்கிய புறத்திலமர்ந்திருந்த மன்மதரை
தூதர்களை விட்டு துருசாய் அழைத்ததுவும்
மன்றாடி கொண்டுவந்து வகைமோசம் செய்தீர்கள்
காமனை அழைத்து வந்து கணலா யெறித்தீரே
இந்த அநியாயம் செய்தது அடுக்குமோ ஒங்களுக்கு
மருமகனென்று சொல்லி மனதிறங்கிப் பாராமல்
சற்றும் இரங்காமல் தணலா யெரித்தீரே
யென்ன மதியாலே யெரித்தீர்காண்மன்மதரை
பித்து பிடித்ததோ யென்புருஷன் தனையெரிக்க
பெற்ற மகளருத்துவிழ பொருப்பாரோ வய்யகத்தில்
ஒன்மதிதானும் கெட்டுதோ மன்மதனை தனையெரிக்க
ஆலவிஷமுண்டதிரு லரிவழிந்து போனீரோ
மாயவனுரென் மாமன் மகிழ்ந்திருந்து பார்த்தாரோ
அந்தை அலமேலும் அகமகிழ்ந்து பார்த்தாளோ
அந்த கோபாலன்வம்மிஷத்தில் கொடுங்கபடு மெத்தவுண்டு
பெருமாள் தன் வம்மிஷத்தில்பெருங்கபடு மெத்தவுண்டு
தன்னுடையபிள்ளையென்று சற்றும் வைத்துபாராமல்
காட்டி கொடுத்தார்கள் கடக்கப்போய் நின்றார்கள்
ஒப்பிகொடுத்தார்கள் ஒதுங்கிபோய் நின்றார்கள்
நான் போகவேண்டாமென்று புலம்பி தவித்தேனே
கேளாமல் போயி கிணத்தில் விழுந்தாரே
கிணத்தில் விழுந்தவரை கரையேற்றிவைய்யும் அய்யா
நெருப்பாயெரிந்தவரை யெந்தகப்பாயீஸ்பரனே நீர் எழுப்பிதர [வேணும்
திருநீறாய்போனவரை ஆதிசிவனே திஷ்டிக்கவேணுமய்யா
பித்தநய்யாயென்புருஷன் ஈஸ்பரனே நீரும்பிழைபொருக்க [வேணுமய்யா
கங்கைநதியாட நான்பாவிசண்டாளி கிளிமொழியாள்போக

ஆற்றங்கரைக்கி நானருங்கிளியால் போகயிலே
வைகைநதியாடயிலே நான்பாவி வாரியிட்டேன் தர்மமதை
தீர்த்தநதி ஆடையிலேநான் பாவிசண்டாளி தீர்த்துவிட்டேன்
[தர்மமதை
இப்போதர்மமும் பொய்யாச்சியென் தலைவிதியுமெய்யாச்சி
காலைஒன்முகம்பார்த்தால் யென்கவலைதீர்ந்துவிடும்[விருக்கும்
அந்திமுகம்பார்த்தால் யென்துரையே அமுர்தமுண்டாப்போ
நான் தேடித்திரிந்தாலும் என்ராஜதுரையேஒன் திருமுகத்தை
[காண்பதெப்போ
ஓடித்திரிந்தாலும் ஒம்முடைய உத்தமுகம் காண்பதெப்போ
கண்ணாலேகண்டவர்கள் காயாம்புமேனியே கலங்குவாரா
[யிரம்பேர்
முன்னழகைக்கண்டவர்கள்மாயன்மகனே மோகிப்பாராயிரம்
[பேர்
பின்னழகைகண்டவர்கள் என்காமக்களஞ்சியமேபின்
[தொடர்வாராயிரம்பேர்
மார்பழகைக்கண்டவர்கள்என் காமதுரையேமயங்கிடுவாரா
[யிரம்பேர்
தோளழகைக்கண்டவர்கள் யென்கணவாமன்மதனே
[தொடருவாராயிரம்பேர்
முகத்தழகைக் கண்டவர்கள் யென்கணவாயென் துரையே
[மோகிப்பாராயிரம்பேர்
அழகுடனே வருவீரென்று நான்பாவிசண்டாளி அனேகமா
[யெண்ணேனே
ஒம்முடையவடி வழகைபார்ப்ப மென்றுமனமகிழ்ந்து நானி
[ருந்தேன்
நீர்சாரிபுரப்படையில்யென் துரையேமன்மதரேநான் தூங்கி
[விட்டேன்
திரும்பிவருவீரென்று திருமால்மகனே திசைபார்த்துநானிருந்
யிந்தபடி யாரதிதேவி இனிப்புலம்பும் வேளையிலே [தேன்
அம்புபட்டமானதுபோல்ரதிதேவிநாயகியாள் அலரிவிழுந்தாள்
யிடி விழுந்தநாகம்போல்ரதிதேவி நாயகியாள் ஏங்கினாளன்னே
அழகில்மிகுந்தவர்கள் ராஜதுரையே ஆகாதுவைய்யகத் [ரம்
யென்நாயகனைக் காணாமல்நல்ல உயிர்போகுதிப்போ [தில்

யென்மன்மதனை காணுமல்மதிமயக்கம் கொள்ளுதிப்போ
யென் அரசுகிளிபோன வுடன் அவதி மெத்தநோனுதிப்போ
நான் யேதுகுற்றம் செய்தேனென்று யெமலோகம் சேர்ந்திரே
யென்னை மருவியிருந்தவரே மாயவனுர் தன் மகனே
யென்னை கூடியிருந்தவரே கோபாலன் தன்மகனே
யென்னை சேர்ந்து பிரிந்தவனே சிவனுர் மருமகனே
யெங்கே ஒளித்திரோ யென்சாமி மன்மதனே
அடியாளை இங்கே வைத்துஆனழகாயெங்கொளித்தீர்
அழுதாள் யெழுந்திருந்து ஆனழகன்முன்னே வந்தாள்
அன்றுகட்டிக்கொடுத்த தென்னயின்றுகண்ணு லெறித்ததென்ன
யென்புருஷன்தனையிழந்துபோவேனே யென்தகப்பா
நான் மன்மதனைதானிழந்து மரப்பேனே யென் தகப்பா
யென் பத்தாவைதானிழந்து பரதவித்து நிற்பேனே
தாலி பரிகொடுத்த மகாபாபி யென்பாருலகில்
மங்கலியம் பரிகொடுத்த மகாபாபி யென்பார்கள்
யென்மன்மதனையெரித்த கண்ணுலென்னையும் யெரித்துவிடும்
யென்புருஷன்யெரித்தகண்ணுலுன் பெண்ணையுமெரித்துவிடும்
யென்வயித்தெரிசல்பட்டு நீர்வாடி மயங்கிடுவீர்
பெண்பழியும் வாருமலென்புருஷனையெழுப்பு மய்யா
யிந்தபடியாய் ரதிதேவியும் புலம்பலுற்றுளன்னேரம்
அப்போபரமசிவனருகில் பார்வதியைப்பார்த்தாள் காண்
பார்வதியைக்கண்டவுன் ரதிகிளியாள்பதரி அழுதாளே
தாயென்றுநானிருந்தேன் யென்தாயேயீஸ்பரியேதாயாதிநீயடி
மாதாவென்றெண்ணினனே மாபாவிசண்டாளிமதிகேடியாநீயே
யென்பெற்றவளென்றிருந்தேன் பிழைவந்துநேர்ந்ததடி
உலகத்து பெண்களுக்கு உன்னைப்போலதாயுமில்லை
பழிகாரி உன்முகத்தைபார்க்கெனக்கு நீதியுண்டோ
யென் புருஷனைக்கொன்றவள் நீ உன்பெண்ணையுமெரித்துவிடு
யிருவரையுங்கொன்றுவிட்டு யிருங்களடி நீ சுகமாய்
அப்போதேவர்களைக்கண்டு தேன்மொழியாளேதுசொல்வாள்

அனைவரையும் கண்டு அருங்கிளியாளேது சொல்வாள்
நீங்கள்திரமாக வார்த்தைசொல்லிதென்பாய் அழைத்துவந்து
தென்பா அழைத்து வந்து தீம்பாயெரித்துவைத்தீர்
நான்சிந்தைகலங்குவது ஒங்களுக்கு தீம்பாமுடியாதோ
நான் மங்கை கலங்குவது ஒங்கள் மனதிலிடிக்காதோ
புண்ணியனூர்பழியேற்றீர் பெண்பழியை வாங்குமென்றாள்
வருந்தி அழைத்துவந்து மடிப்பாகக்கொன்றீரே
இப்போது நான் வந்தேன்யென்பழியை வாங்குமென்றாள்
இந்தபடியா ரதிதேவி யெடுத்துரைக்கும் வேளையிலே
அப்போது பார்வதியும் ஆத்திரமா ஓடிவந்து
வாரியெடுத்து ரதிகிளியை மாரோடணைந்தாளே
தூக்கியெடுத்து திரேகமெல்லாம் தான் துடைத்து
உனக்கென்ன குரச்சலடியென் குழந்தைநாயகி
நீ ஒன்றுக்கும் அஞ்சாதே உத்தமியே யென்மகளே
நீ ஆங்காரத்தாலே அழுதால் வருவாரோ
கோபத்தினாலேபெண்மயிலேஎன்மகளே [கோபென்றழாதே
புலம்பினதினாலேஎன்மகளேஉத்தமியே ஒன்புருன்வருவா
நீஅழுததினாலேஅன்னகிளியாளேஒன் அரசன்வருவாரோ [ரோ
ஆதிசிவனிடத்தில் நீ அபயமிட்டழுது நின்றாளே
மனமிரங்கும்படியாய் மங்கயரே சேதிசொன்னாள்
ஒன்புருஷனை யெழுப்பிடுவார்பெண்ணரசே பெற்றிடுவாய்
இந்தபடியாய் ரதிதேவிநாயகியும் யிருக்குமந்தவேளையிலே
அப்பொழுது ரதியாளும் ஆரணங்குயேது சொல்வாள்
ஆதிசிவனிடத்தி லன்பாக போயினின்று
அப்பொழுது தேவர்களு பரமனிடத்தில் வந்தார்கள்
மூக்கண்படைத்த மூர்த்தியே போற்றி யென்றார்
யெல்லோரும்கூடி யேது சொல்வார் யீஸ்பரற்கு
மான்மழுவை தரித்த மகாதேவா தஞ்சமய்யா
காளைவாகனமேரும் கடவுளே தஞ்சமய்யா
மாட்டுமேலேரிவரும் மகாதேவா தஞ்சமய்யா

யெமனை உதைத்த யீஸ்பரனே தஞ்சமய்யா
உம்மைவிட தெய்வம் உலகத்தில் வேரேஇல்லை
ஆகையினுலே அன்பாக சொல்லுகுரேம்
காமன் செயல் போனுல் காண்பதே உலகமில்லை
மன்மதன் செயல்போனுல் மைந்தரைபெருவதுண்டோ
உலகம் பெருகவைக்கும் உத்தமனே மன்மதனும்
மன்மத நில்லாமல் மானிலம் பெருகுமோதான்
ஆசையென்ற மன்மத னாலாகும் அகிலமது
ரதிதேவி கலக்கமதை நாதனே தீருமய்யா
அவள் கலக்கமதைதீருமய்யா கயிலாசமூர்த்தியென்ருர்
அப்பொழுது ரதிதேவி ஆரணங்குயேதுசொல்வாள்
யெந்தன் புருஷனையே யெரித்தீரீஸ்பரனே
கொஞ்ச வயதில்யென் கொற்றவரைதாநெரித்தீர்
யேது மரியார்காண் இன்னம் சிறுவயது
நாலுரெண்டுபெத்ததுண்டோ உங்கள் ரதிதேவிநாயகியும்
வயதாச்சோயெந்தனுக்குவையகத்தில்நான்போக
கொஞ்சவயதிலென் கொற்றவரை தாநெரித்தீர்
காய்க்கும் பிருயத்தில் கணவனை பரிகொடுத்தேன்
பூக்கும் பிருயத்தில் புருஷனை பரிகொடுத்தேன்
போதுமய்யாஇந்த மட்டும்யென் புருஷனையெழுப்புமைய்யா
அப்போது யீஸ்பரனுர் அன்பாகயேது சொல்வார்
மன்மதனை யெரித்தேனென்று மனஸ்தாபம் படுகாதே
மாயன் குலத்தினிலே மாண்டவர்கள் வந்ததுண்டோ
ஆயன்குலத்தில் அழிந்தவர்கள் வந்ததுண்டோ
திருமால் குலத்தில் செத்தவர்கள் வந்ததுண்டோ
இப்போயெழுப்புகுரேன் யென் மகளே நீ கேளு
செத்தவர்கள்வந்தாலோ சிறிப்பாருலகமதில்
மாண்டவர்கள் வந்தாலோ வய்யகமும் தாங்காதே
சாம்பலாய் போனவனும்தான் பிழைத்தானென்ருர்கள்
யென்மேலேகுற்றமில்லை யென்பெருமாள் செய்தகுற்றம்

நளராஜனைக் கொன்றுநடுகளத்தில் தலையருத்தீர்
யிறணியனைக்கொன்று இடச்சியையும் கைபிடித்தார்
தன் பிள்ளையென்று சற்றும்வைத்துப் பாராமல்
யென்மேலே குற்றமில்லையென்று சொன்னாரீஸ்பரரும்
யிஸ்பரரை பார்த்து யேதுசொல்வாளன்னேரம்
சிவனேஒன் தஞ்சமென்று சிந்தை கலங்கலுற்றாள்
அரனே ஒன்தஞ்சமென்று அபயமிட்டேதுசொல்வாள்
சீறாளனை கொன்று திரும்பி உயிரளித்தீர்
பிள்ளையை அருத்துண்டு பின்னேயெழிப்பினீரே
யிப்போயெழுப்புமய்யா யென்புருஷன் மன்மதரை
யேழைபங்காளா யென்புருஷனை யெழுப்புமய்யா
ஆதிமுதற்பொருளே அரனேதஞ்சமென்றாள்
அப்போது ஆதிசிவன் மகளுக்கு ஆதரவு சொன்னார்காண்
பெருமாள் தனக்கினி ஒன்புருஷனையும்தெரியாது
ஒனக்குத் தெரியுமம்மா ஒன் புருஷனடையாளம்
ஒன்புருஷனும் நீயும் பிரியாமல் வாழ்ந்திருப்பாய்
வைபோகமாக மகிழ்ச்சியாய் வாழ்ந்திருப்பாய்
சங்கரனரப்போது சாம்பலதை தான்குவித்து
தெண்டாயுதத்தாலே திஷ்ட்டித்தார் மன்மதரை
தண்ணீர்தெளித்து ஜல்தியில்யெழுப்பிவிட்டார்
பொற்பிரம்பினால்தட்ட பிழைத்தாரே மன்மதனும்
வாய்வுபகவான்போல் வடிவானார் மன்மதரும்
புலம்பின ரதிதேவி புருஷனைக்கண்டாளே
சந்தோஷமாக தன்தகப்பனை தெண்டனிட்டாள்
அப்போதுதேவர்கள் அரகிடத்திலோடிவந்தார்
முப்பத்திமுக்கோடி முனிவர்கள்போற்றிசெய்தார்
அப்போ ரதிதேவி ஆரணங்குயேதுசொல்வாள்
என்தகப்பா யிஸ்பரனே என்புருஷன் பேருபெற்றார்
புகழ்பெற்றமன்மதன் கதையைபூலோக மானிடர்கள்
வருஷமொருக்கால் மன்மதனை உண்டுபண்ணி

பதினைந்துநாள் வரை பண்டிகையும் கொண்டாடி
தேங்காயிளநீரவலும் சீனிபலா கற்கண்டும்
பலகாரம் நீர்மோரும் பயர்கடலை தான்படைத்து
அனங்கனுட பண்டிகையை அன்பாய்கொண்டாடினர்
மக்கள் உறவினர்கள் மகிழ்ச்சியாய் வாழ்ந்திருப்பார்
மாய்ந்தவர் பெருவாழ்வு மானிலத்தில் தான்பெருகும்
அவரவர்கள் நினைத்தவரம் அரனுரே நீ கொடுப்பீர்
அந்தபடியே அரன் கொடுக்க அருளடைந்தாள்
பெற்றவரங்களினால் பிரியம்வைத்தாள் ரதியும்
மன்மதனும் தானும் மகிழ்ச்சியாய் வாழ்ந்திருந்தார்
கேட்டவர்களெல்லோரும் கிளைபோலே வாழ்ந்திடுவார்
ஆலுபோல் தழைத்து அரசுபோல் வேரோடி
மூங்கல்போல் சுற்றி முறியாமல் வாழ்ந்திருப்பார்
ஆதிசிவனருளால் அனைவர்களும் தான்வாழி
வாழி வாழியென்று வாழ்த்தினேம் உலகமதை

மன்மதன் பூர்வகதை முற்றிற்று.


திரிசிரபுரம் மங்களதாஸ் அவர்களியற்றிய

**நவீன நவரத்தின**

# மதன ரதி ஒப்பாரி

இதில் காமனுக்கும் ரதிக்கும் வாக்குவாதமும் இரதி தேவியின் புலம்பல் ஒப்பாரியும் **ஸ்ரீமான் துரைசாமி நாவலர்** அவர்கள் இயற்றிய எரிந்த கட்சி பாடல்களும் காமன் எரிந்தான் எரியவில்லை என்ற சந்தேகநிவர்த்தியும் அச்சிடப் பெற்றிருக்கின்றது. இதன் விலை 75-நயா பைசா

**87**-நயா பைசா ஸ்டாம்பு அனுப்பினல் இப்புத்தகம் புக்போஸ்டில் அனுப்பப்படும்.



*கலைமகள் அச்சகம் காலாடிப்பேட்டை சென்னை 19.*

33-படங்கள் அடங்கிய

## ஸ்திரீ புருஷர்

# ரேகைசாஸ்திரம்

வி. ஏ. தியாகராஜன் எழுதியது.



அநேகப்படங்கள் அடங்கிய ரேகைசாஸ்திரம் வசனநூலறிவினால் ஆயுள், விவாகம், லாபம், குணம், பக்தி, அதிர்ஷ்டம், மரணம், இல்லறசுகம், சௌக்கியம், காரியசித்தி, பேரின்பம், வஞ்சம், அபாயம், வியாதி, ஜயம், அபஜெயம், கெண்டம், ஐஸ்வரியம் முதலிய விஷயங்களடங்கியுள்ளன இதை ஸ்திரீ புருஷர் தாமாகவே அவரவர்கள் கையிலுள்ள ரேகையை பார்த்து பலாபலன்களை தெரிந்துக்கொள்ளலாம். அன்றியும் விதியின் பலனையும், வாழ்க்கையின் இரகசியங்களையும் வெளிப்படுத்துகிற தோழனாக இருக்கும். அன்பர்கள் ஒருமுறை வாங்கிபடித்தால்தான் தெரியும் அனேகமாக பெண்களுக்கு ரேகையினுடைய பலன்களை தெரியப்படுத்தும் நூல் வெளிவந்ததில்லை எமது ஸ்திரீபுருஷர் ரேகை சாஸ்திரத்தில் இருவருக்கும் கையிலுள்ள ரேகையினுடைய பலனை தெரியப்படுத்தி இருக்கிறோம்

*தபால் செலவு ரூ. பை. 75,* விலை 1-50

கிடைக்குமிடம்:—

ஜோதி புத்தகசாலை,

நெ-2, எழுத்துக்காரன் தெரு, காலடிப்பேட்டை, சென்னை-19

சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார்

பாடிய

# காவடிச் சிந்து


பதிப்பாசிரியர்:

கு. அழகிரிசாமி



சக்தி காரியாலயம்

ஆயிரம் விளக்கு : : சென்னை-6

முதற் பதிப்பு—ஏப்ரல், 1960

(C) காபிரைட் உரிமை

வை. கோவிந்தன் சக்தி காரியாலயம் சென்னை -6

விலை ரூ. 1-75
நூல் நிலையப் பதிப்பு ரூ. 2-50
(தபால் செலவு தனி)

சென்னை, மயிலாப்பூர், முத்தமிழ் அரசி அச்சகத்தில்
அச்சிடப்பெற்றது

# பதிப்புரை

இந்தப் புத்தகத்தின் கையெழுத்துப் பிரதி என்னிடம் வந்து பத்து வருடங்களாகின்றன. பலப்பல காரணங்களால் இப்பொழுதுதான் என்னால் வெளியிட முடிகிறது.

நண்பர்கள் பலர், 'காவடிச் சிந்து' எப்பொழுது வெளிவரும் என்று கேட்டுக்கொண்டே இருந்தனர். அவர்களுக்கும், புதுமை இலக்கியத்தில் ரசனையுள்ளவர்களுக்கும் இந்தப் புத்தகம் ஓர் நல் விருந்து ஆகும்.

பத்து வருடங்களுக்கு முன்பே இந்த நூலின் கையெழுத்துப் பிரதியை நகல் எடுக்கும் முன்பாக, காலஞ் சென்ற பேரறிஞர் ராவ்சாகிப் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் இதனைப் பார்வையிட்டுத் தந்தார்கள். அவர்களுக்கு என் அன்புடைய நன்றி உரித்தாகுக.

இந்தக் காவடிச் சிந்து நூலைப் பதிப்பிக்க வேண்டுமென்பது திரு கு. அழகிரிசாமியின் நீண்ட நாளைய ஆசை. அந்த ஆசையால் பெரும் சிரமம் எடுத்துக் கழுகுமலைப் பகுதிகளில் வெகுநாட்கள் சுற்றி, காவடிச் சிந்துப் பாடல்களைப் பாடக் கேட்டும், ஏடுகளை வாங்கிப் பார்த்தும் இந்த நூலை பதிப்பித்திருக்கிறார். இந்தப் பதிப்பை அவர் சிரத்தை எடுத்துப் பதிப்பித்தது தமிழ் அன்பர்களின் அதிர்ஷ்டமென்றுதான் சொல்ல வேண்டும்.

இத்தனை வருடங்கள் பெட்டியில் பூட்டிவைத்திருந்த இந்த அரிய பொக்கிஷத்தை இப்பொழுதாவது வெளியிட முடிந்ததே என்று பெருமையடைகிறேன்.

**வை. கோவிந்தன்**

பதிப்பாளர்

# கு. அழகிரிசாமியின் பிற நூல்கள்

**பதிப்பித்தவை :**

| | |
|---|---|
| *கம்பராமாயணம் (1)* | |
| *—பால காண்டம்* | |
| *—அயோத்தியா காண்டம்* | 2-00 |
| *ஷை உயர்ந்த பதிப்பு* | 5-00 |
| *கம்பராமாயணம் (2)* | |
| *—ஆரணிய காண்டம்* | |
| *—கிஷ்கிந்தா காண்டம்* | 2-00 |
| *ஷை உயர்ந்த பதிப்பு* | 5-00 |

**எழுதியவை :**

கதைத் தொகுதிகள் :

| | |
|---|---|
| *அழகிரிசாமி கதைகள்* | 3-75 |
| *சிரிக்கவில்லை* | 2-00 |
| *தவப்பயன்* | 2-00 |
| *காலகண்டி* | 2-00 |

கட்டுரைத் தொகுதிகள் :

| | |
|---|---|
| *இலக்கியச் சுவை* | 2-25 |
| *இலக்கியத் தேன்* | 2-25 |
| *இலக்கிய அமுதம்* | 2-25 |
| *இலக்கிய விருந்து* | 2-25 |

தபால் செலவு தனி.

**இந்நூல்கள் யாவும் சக்தி காரியாலயம் சென்னை-6-ல் கிடைக்கும்**

# அறிஞர்கள் கூறியவை

அண்ணாமலை ரெட்டியாரைத் தமிழர்கள் காவடிச் சிந்து பாடிய புலவன் என்றுதான் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அந்தச் சிந்துப் பாட்டுக்கள் அவனுக்கு ஒரு இம்மி மாத்திரம்; அவன் ஒரு பெரிய "ஜீனியஸ்" (மேதை) என்பதைத் தமிழர்கள் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. யமகம் திரிபாகவே அவன் கவிதைகள் எழுதிக் குவித்தாலும் உண்மையான கவிதையின் சாயல் அவனுடைய பாட்டுக்களில் நிரம்ப இருக்கு.

—முதுபெரும்புலவர்
வெ. ப. சுப்பிரமணிய முதலியார்
(ரெட்டியாரின் நண்பர்)

பாடுகிற காவடிப் பாட்டெல்லாம் கழுகுமலை முருகன் மேல்த்தான். இப்பொழுது வழங்கும் காவடிச் சிந்தைப் பாடியவர் அண்ணாமலை ரெட்டியார். காவடிப் பாட்டைக் கேட்க வேண்டுமானால், பம்பை, மேளம், ஆட்டம் எல்லாவற்றோடும் கேட்டால்த்தான் ரஸமும் சக்தியும் தெரியும்...... கழுகுமலையிலே கடைசிச் சுக்கிரவாரந்தோறும் காவடியாட்டமும் காவடிப் பாட்டும் வேண்டியமட்டும் உண்டு; அனுபவிக்கலாம்.

—ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார்

முருகக் கடவுளின் சரித்திரங்களை பாரதத்திலும், வடமொழியில் வால்மீகி இராமாயணத்திலும், குமாரசம்பவத்திலும் காணலாம். தமிழில் பரிபாடல், முருகாற்றுப்படை, தேவாரம், திருப்புகழ், கந்தபுராணம் முதலியவற்றில் விரிவாகக் கூறப்படுகின்றன. காவடிச் சிந்தில் இவருடைய வரலாறு மிகவும் ரசபாவத்துடன் காணப்படுகிறது.

—பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை

இவர் பாடிய காவடிச் சிந்தைத் தெரியாத தமிழர் இல்லை. இந்தக் காவடிச் சிந்து வெறும் அர்த்தமற்ற சொல்லடுக்கு அல்ல. உயிரும் உணர்வும் நிறைந்த செஞ்சொற்களால் ஆக்கப்பட்டவையாகும். 'கரும்புபோல் இனித்து மருந்துபோல் வடித்த' சொற்கள் என்று கூடச் சொல்லலாம்.

—அறிஞர் தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

# உள்ளுறை


| எண் | பொருள்—சிந்து முதற் குறிப்பு | | பக்கம் |
|---|---|---|---|
| | முன்னுரை | ... | 9 |
| 1. | விநாயகர் துதி (திருவுற் றிலகுகங்க வரையில்) | ... | 37 |
| 2. | முருகன் துதி (சீர்வளர் பசுந்தோகை மயிலான்) | ... | 38 |
| 3. | கழுகுமலை நகர் (தெள்ளுதமி ழுக்குதவு சிலன்) | ... | 40 |
| 4. | கோயில் வளம் (சென்னி குளநகர் வாசன்) | | 42 |
| 5. | கழுகுமலை வளம் (பொன்னுலவு சென்னிகுள நன்னகர்) | ... | 44 |
| 6. | வாவி வளம் (புள்ளிக் கலாபமயில் பாகன்) | ... | 47 |
| 7. | துதி (மரகத விகசித ஒளிதவழ் இருசிறை) | ... | 49 |
| 8. | துதி (பவணக் கிரியதனுள் தானே) | ... | 50 |
| 9. | துதி (செந்தில் மாநகர்வாழ் கந்த நாதன்இரு) | ... | 52 |
| 10. | சுரம் போக்கு–நற்றாயிரங்கல் (பாதிராத்திரி வேளையில் வீட்டு) | ... | 55 |
| 11. | தலைவி இரங்கல் (நேம மாய்ப்பணியண் ணமலைக்குதவு) | ... | 58 |
| 12. | தலைவியின் ஊடல் (ஆறுமுக வடி வேலவனே) | ... | 59 |

13. பாங்கி தலைவி நிலை கூறித் தலைவனை அழைத்தல்
(கண்ணு யிரம்படைத்த விண்ணூ ரிடம்தரித்த) 61

14. தலைவி பாங்கியைத் தூது விடுதல்
(பூமி மெச்சிடும் அண்ணுமலைக்கோர்) ... 63

15. பாங்கி தலைவியின் அவயவத்தருமை சாற்றல்
(சந்தவரை வந்தகுக நாதா) ... 64

16. தலைவன் வருத்தம் சாற்றல்
(வன்னத் தினைமாவைத் தெள்ளியே) ... 69

17. தலைவனைக் கலந்தமை தலைவி பாங்கிக்குக் கூறல்
(செந்தில் மாநகரம்தனில் மேவிய) ... 70

18. துதி
(கன்னல் சூழ்பழ னம்புடை சூழ்) ... 72

19. தலைவியின் ஊடல்
(செந்தூர் வளர்முருக நாதா) ... 73

20. தலைவி வருந்தல்
(பாளைவாய் கமுகில்வந்தூர் வாளைபாய்) 76

21. நற்ருய் இரங்கல்
(என்னடி நான்பெற்ற மங்கை) ... 77

22. காலம் நீடத் தலைவி வருந்தல்
(மஞ்சுநிகர் குந்தள மின்னே) ... 80

23. பாலனைப் பழித்தல்
(அங்கத்தில் பசப் பாச்சே) ... 82

24. தலைவனிடம் செவிலித்தாய் கூறுவது
(கந்தம்சேர் தருபொழில் திகழ்) ... 85

25. அனுபந்தங்கள் ... 88

# முன்னுரை

"காவடிச் சிந்து" என்பது, முருகன் கோவிலுக்கு நேர்த்திக்கடனாக ஒருவர் காவடி எடுக்கும்போது பாடும் பாட்டாகும். சிந்து என்னும் ஒருவகைப் பாட்டு, பல்லவி, அனுபல்லவி, மூன்று சரணங்கள் முதலிய ஐந்து உறுப்புக்களுடன் அமைந்திருக்கும். ஆனால், காவடிச் சிந்து அவ்வாறின்றிக் கண்ணிகளாகவே அமைந்துள்ளது. முதன் முதலில் காவடிச் சிந்தை இயற்றியவர் சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார்தான். "காவடிச் சிந்தின் முறை ஏற்பட்டது இவராலேதான்" என்று மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரும் தெரிவித்திருக்கிறார்.

**காவடி**

காவடியைப் பார்க்காத தமிழர்கள் இருக்கமாட்டார்கள். இந்துக்களில் எல்லா வகுப்பினருமே முருகன் கோவிலுக்குக் காவடி எடுப்பது உண்டு. "எனக்கு ஏற்பட்ட இந்த நோய் நீங்கிவிட்டால், நான் முருகனுக்குக் காவடி எடுத்து விடுகிறேன்" என்று நேர்ந்துகொண்டு, அவ்வாறு நேர்ந்துகொண்டவன் குறிப்பிட்ட ஒரு முருகன் கோவிலுக்குக் காவடி எடுத்துச் செல்லுவான். அவன் காவடியைத் தோளில் தூக்கி வைத்து, சாமியாடிக் கொண்டே பல வீடுகளுக்கும் பல ஊர்களுக்கும் போய் வீட்டுக்கு அரை ரூபாய், ஒரு ரூபாய் என்று பண வசூல் செய்து, அந்தப் பணத்தையே செலவுக்கு வைத்துக்கொண்டு, சுற்றத்தார் புடைசூழக் கோவிலுக்குப் போவான். காவடி எடுப்பவனுக்குத் துணையாக இடும்பன்சாமி என்று ஒருவன் ஆடிக்கொண்டே செல்லுவான். கோவிலுக்குப் போய் உரிய சம்பிரதாயப்படி காவடியை இறக்கி, சுவாமிக்குச் செய்ய வேண்டிய பூஜை முதலியவற்றைச் செய்துவிட்டு ஊர் திரும்புவார்கள்.

தோளில் காவடியைத் தூக்கி வைப்பதை "முத்திரை தரித்தல்" என்றும், கோவிலுக்கு வந்து காவடியை இறக்கி

வைத்துத் தன் நேர்த்திக்கடனைச் செலுத்தி முடிப்பதை "செல்லக் கட்டுதல்" என்றும் சொல்லுவார்கள். காவடி எடுப்பவன் காவி உடையே அணிந்திருப்பான். ஒரு சிலர், தாம் நேர்ந்துகொண்டபடி வாயில் வெள்ளியினுல் செய்த ஒரு சிறு வேலாயுதத்தைக் குத்திக் கொண்டு காவடி எடுப்பார்கள். இது "வாய்ப் பூட்டு" என்று சொல்லப்படும். வாய்ப் பூட்டுப் போட்டவன் கைஜாடை செய்துதான் எதையும் தெரிவிக்க முடியுமே யொழிய வாயினுல் பேச முடியாது. பாலைத் தவிர வேறு எந்த உணவுப் பதார்த்தத்தையும் உட்கொள்ள முடியாது. காவடி எடுத்துச் சாமியாடும்போது, "வேல் வேல்!" "வேலாயுதம் வேலாயுதம்!" என்று அங்கே நிற்பவர்கள் முழங்குவார்கள். பம்பை, பறை, மேளம் முதலியனவும் முழங்கும். மேளம் முடிந்ததும் காவடிச் சிந்து பாடுகிறவர்கள் மிருதங்கம், ஆர்மோனியம் முதலிய பக்க ஜமாக்களுடன் பாடத் தொடங்குவார்கள். காவடிப் பாட்டுப் பாடுகிறவர்கள் என்றே ஊருக்கு ஒன்றிரண்டு பேர் இருப்பார்கள். இவர்கள் ஊர் ஊராகக் காவடியுடன் சென்று பாடுவார்கள். இவர்களுக்குக் காவடி தூக்குகிறவர்கள் தக்க சன்மானங்கள் செய்வது வழக்கம்.

சாதாரணமாக மயிலிறகுகளால் அலங்கரிக்கப்பட்ட காவடிகளும், அக்கினிக் காவடிகளும், பாம்புக் காவடிகளும், செம்பு நிறையப் பால் நிரப்பித் தொங்கவிடப் பட்ட பால்காவடிகளும், சந்தனம் கட்டித் தொங்கவிடப் பட்ட சந்தனக் காவடிகளும், ஜரிகைத் தாளினுல் அலங்கரிக்கப்பட்ட வர்ணக் காவடிகளுமாகக் காவடிகளில் பலவகை உண்டு.

மேற்கண்ட விஷயங்கள் யாவும் நான் நேரில் பார்த்தவை அல்லது கேள்விப்பட்டவை. ஆனுல், ஒரு புத்தகத்தில் வேறு விதமான விவரங்களும் காணப்படுகின்றன. விக்கிரஹ அபிஷேகத்திற்காகவோ, அல்லது குழந்தைகளுக்கு வழங்குவதற்காகவோ, பால்காவடிக்காரர்கள் வீட்டுக்கு வீடு போய்ப் பால் வாங்குவது உண்டென்றும், அதனுல்தான் அந்தக் காவடிகளுக்குப் பால்காவடி என்னும் பெயர் உண்டானதென்றும், அன்னக்காவடிக்காரர்கள் அது

போன்று சோறு வாங்குவார்கள் என்றும் கூறப்பட்டிருக் கின்றன. இம்மாதிரிப் பழக்கங்கள் திருநெல்வேலி ஜில்லா வில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. வேறிடங்களில் இருந்துவரக்கூடும்.

சத்திரத்திலோ மடத்திலோ உள்ள சில பண்டாரங் களுக்காக, ஒரு குறிப்பிட்ட பண்டாரம் மணியோசை செய்து கொண்டே வந்து, "அன்னக் காவடி, தர்மம் தாயே!" என்று சோறு கேட்டு வாங்கிச் செல்லுவது உண்டு. இந்தக் காவடியைத்தான் பாரதியார்,

> **"என்னும் முன்னே 'அன்னக் காவடி பிச்சை' என்**
> **றேங்கிடுவான் குரலும்"**

என்று தம் கவிதையொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

காவடியைத் தோளின்மேல் வைத்துச் சில விளை யாட்டுக்களும் செய்து காட்டுவார்கள். கைளால் பிடிக்கா மலும் தொடாமலும் உடம்பை அசைப்பதன் மூலம் அதைச் சுழற்றியும், உன்னி எழும்புவதன் மூலம் அதை முதுகி லிருந்து தோளுக்கும், தோளிலிருந்து முதுகுக்கும், தலையி லிருந்து தோளுக்குமாக மாற்றியும் விளையாடுவார்கள். ஆனால், காவடி கீழே தவறி விழாது.

முருகன் கோவில் உள்ள ஊர்களில் வசிக்கும் சில பண்டாரங்களே இவ்விதக் காவடிகள் செய்து வைத் திருப்பார்கள்; உரிய காலங்களில் அவற்றை வாடகைக் குக் கொடுத்து வாங்குவார்கள். பழனி, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர் முதலிய முக்கியமான முருகன் கோவில் களுக்கு ஆயிரக் கணக்கான காவடிகள் வருவதுண்டு.

யாதொரு ஜீவேஜியும் இல்லாதவனை 'வெறும் காவடி' என்றும், 'அன்னக் காவடி' என்றும் இழித்துக் கூறுவார்கள். இழித்துக் கூறும் இந்தச் சொற்கள் காவடி எடுப்பதை யொட்டி எழுந்தவையே. காவடி எடுத்து வருகிறவர்களுக்கு, அயலூர்களிலுள்ள முன்பின் தெரி யாதவர்கள்கூடப் பணம் கொடுப்பது உண்டு. ஆனால், நாளடைவில் பலர் ஜீவனோபாயத்தை மட்டும் உத்தேசித்து

நினைத்த போதெல்லாம் காவடி தூக்குவது என்று ஆரம்பித்து விடவே, இப்பொழுது உண்மைக் காவடிகளுக்குக்கூடப் பணம் வசூலாவது அருமையினும் அருமையாகி விட்டது. பஞ்ச காலத்தில் சிலர் காவடி எடுத்துப் பிழைத்தார்கள் என்பதை, 80 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த வில்லியப்பபிள்ளை என்ற புலவர், ''பஞ்ச லட்சணத் திருமுக விலாசம்'' என்னும் நூலில் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்:

**பாங்குபழ னிக்குரிய பாற்கா வடியெனவும்**
**தாங்கிவூர் தோறும் தவித்தலைந்து - வாங்குபதைக்**

**காலங் கடத்திக் கடம்பனைக்கொண் டாடிநல்ல**
**வேலையெனக் கொண்டார் வெகுபேர்கள்** (532, 533)

காவடி எடுப்பவர்களின் தொகை இப்போது நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. சில வருஷங்களுக்கு முன்வரையில் கூட, காவடி—நேர்த்திக்கடனைத் தவருது செலுத்த வேண்டும் என்றும், ஒரு தலைமுறையில் ஒருவர் நேர்த்திக்கடனைச் செலுத்துமுன் அகால மரணம் அடைந்து விட்டால் அடுத்த தலைமுறையில் வாழும் வாரிசுகள் முன்னவருக்குப் பதிலாகச் செலுத்திவிட வேண்டும் என்றும் கருதினார்கள்; அவ்விதமே செய்தும் வந்தார்கள்.

''காவடி'' என்ற சொல் ''காவுதடி'' என்பதன் சுருக்கமாகும். காவுதடி என்பதற்குச் சுமக்கும் தடி என்று பொருள். ஒரு தடியின் இரு நுனிகளிலும் பொருள்களைக் கட்டித் தோளில் தூக்கிச் செல்லும் வழக்கம் மிகப் பழங்காலந் தொட்டே தமிழ் நாட்டிலுண்டு என்பது இலக்கியங்களால் தெரிய வருகிறது. இவ்வாறு எடுத்துச் செல்லுதலைக் 'காவுதல்' என்பர். புறநானூற்றில் உள்ள ஔவையார் பாடல் ஒன்றில்,

**காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை** (206)

என வந்துள்ளது. திருக்குறள் காமத்துப் பாலில் வரும்,

**காமமும் நாணும் உயிர்காவாத் தூங்கும்என்**
**நோனா உடம்பின் அகத்து** (திருக்குறள்: 1163)

என்ற குறளிலும் காவுதல் வந்துள்ளது. காம நோயும் நாணமும் தம்மைத் தாங்கும் வலியில்லாத என்னுடம்பினிடத்தில் உயிரைக் காத்தண்டாகக்கொண்டு தொங்குகின்றன என்பது இக்குறளின் கருத்து. இங்கே உடம்பினகத்து உயிரைக் காத்தண்டாகவும், காமம், நாணம் என்ற இரண்டும் காவப்படும் பொருள்களாகவும் குறிப்பிட்டுள்ளமை காணலாம். இங்ஙனம் காத்தண்டின் இரு புறத்தும் பொருளைத் தாங்கிச் செல்லுவோர் 'காவாளர்' என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். சிலப்பதிகாரத்தில், இடையர்கள் பொருள்களைத் தூக்கிக்கொண்டு செல்வதைக் குறிக்குமிடத்தில்,

**மறித்தோள் நவியத்து உறிக்கா வாளரொடு**

(அடைக்கலக்காதை : 205)

எனக் கூறுதல் கவனிக்கத்தக்கது. இந்த அடிக்கு, 'ஆட்டு மறியையும் கோடரியையுமுடைய தோளிலே உறிகட்டின காவையுடைய இடையருடனே' என அடியார்க்கு நல்லார் உரை வகுத்துள்ளார். சென்னை சர்வகலாசாலைத் தமிழ்ப் பேரகராதியில் 'காவாளர்' என்பதற்குக் 'காவடி சுமப்போர்' எனப் பொருள் தந்து இங்கே குறித்த சிலப்பதிகார அடியினையே மேற்கோள் காட்டியுள்ளார்கள். ஆகவே, பொருள்களை ஒரு தண்டத்தின் இரு பக்கங்களிலும் இணைத்துக் கட்டித் தோளில் தூக்கிச் செல்லும் வழக்கம் மிகப் புராதனமானது என்பது தெளிவாம். ஆனல், முருகன் கோவிலுக்குக் காவடி தூக்கும் பழக்கம் முதன் முதலில் எப்பொழுது ஏற்பட்டது என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை. தமிழிலக்கியங்களில், குறிப்பாக முருகனுக்கே உரிய "திருமுருகாற்றுப்படை" போன்ற நூல்களில்கூட, முருகன் கோவிலுக்குக் காவடி எடுப்பதுபற்றிய பிரஸ்தாபம் இல்லை. எனவே இவ்வழக்கம் சமீப காலத்தில் ஏற்பட்டது என்றே கருத வேண்டும். காவடி எப்பொழுது, எவ்விதம் தோன்றியது என்பதற்கு ஒரு கதை சொல்லப்படுகிறது:

ஒரு சமயம் சிவபெருமான் அகத்தியரைத் தென்னுட்டுக்கு அனுப்பியபோது அவர் பூஜை செய்வதற்காக இரண்டு குன்றுகளைக் கொடுத்தனுப்பினுராம்; ஒரு குன்

றைத் தம்முடைய ஸ்தானத்திலும் மற்ருென்றைத் தம் பத்தினியாகிய உமாதேவியின் ஸ்தானத்திலும் வைத்துத் தொழுது வரும்படி கூறினுராம். அந்த இரண்டு குன்றுகளையும் எடுத்துக்கொண்டு அகத்தியர் தெற்கு நோக்கி வரும்போது, ஒரு காட்டுப் பிரதேசத்தில் அவற்றை இறக்கி வைத்துவிட்டுத் தென்னுட்டுக்கு வந்துவிட்டார். மற்ருெரு முறை அவர் அந்தக் குன்றுகளை எடுத்து வருவதற்காக வடக்கே புறப்பட்டுக்கொண்டிருந்தார். ''அவற்றை நான் தூக்கிக்கொண்டு வருகிறேன்'' என்று அகத்தியரின் சீடனை இடும்பன் முன்வந்தான். அவனுடைய விருப்பத்துக்கு இணங்க அகத்தியர் அவனை அனுப்பி வைத்தார். இடும்பன் வடக்கேயுள்ள அந்தக் காட்டுப் பிரதேசத்திற்கு வந்து குன்றுகளைத் தூக்க முயன்ருன். ஆனுல், இரண்டையும் ஒரே சமயத்தில் எடுத்துவருவது எப்படி என்று தெரியாமல் அவன் திகைத்துக் கொண்டே ஏறிட்டுப் பார்க்கும்போது பிரமதண்டம் (பிரமனுடைய தடி) திடீரென்று குன்றுகளின் மேலே காட்சியளித்தது. பாம்புகள் பல வந்து தம் உடம்பால் குன்றுகளையும் தண்டத்தையும் சேர்த்துக் கயிறு கொண்டு கட்டியது போலக் கட்டின. குன்றுகளும் பிரமதண்டமும் சேர்ந்து காவடி மாதிரி ஆகிவிட்டன.

அப்புறம் இடும்பன் குன்றுகளை எளிதாகத் தூக்கிக் கொண்டு தெற்கு நோக்கி வந்தான். பழனிக் காட்டுக்கு வந்ததும் அந்தக் குன்றுக்காவடியைக்கீழே இறக்கிவைத்துச் சிறிது இளைப்பாறினுன். அப்புறம் அதைத் தூக்க அவன் எவ்வளவோ முயன்றும் முடியாது போய்விட்டது. குன்றுகளைத் தரையிலிருந்து பெயர்க்கவே முடியவில்லை. இதன் காரணம் புரியாமல் அவன் குன்றின் உச்சியை ஏறிட்டுப் பார்க்கும் போது, கையில் ஒரு கழியை வைத்துக் கொண்டு கௌபீனதாரியாகக் காட்சியளிக்கும் ஓர் இளைஞனை— தண்டாயுதபாணியை-பார்த்தான். இளைஞன், ''குன்றுகள் என்னுடையவை'' என்று உரிமை கொண்டாடினுன். உடனே இடும்பனுக்குக் கோபம் வந்து விட்டது. அதன் பலனுக இருவருக்கும் பலத்த சண்டை ஏற்பட்டு, முடிவில் இடும்பனே தோற்றுப்போய் மூர்ச்சித்து விழுந்தான்.

மூர்ச்சை தெளிந்த பிறகு, கோவணாண்டியாக நிற்கும் அந்தச் சிறுவன் சுப்பிரமணியக் கடவுளே என்பதை அறிந்து இடும்பன் வணங்கினான்; அவனிடம் ஒரு வரமும் கேட்டான். அதாவது, தான் குன்றுகளைக் காவடியாகத் தூக்கி வந்ததைப் போல, முருகன் சன்னதிக்குக் காவடி தூக்கி வருகிறவர்களுக்கு அருள் செய்து அவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களை நீக்கிப் பரிபாலிக்க வேண்டும் என்று இடும்பன் வேண்டினான். முருகனும் அவ்வாறே வரம் கொடுத்து விட்டான். அன்று முதல் முருகன் அருள் பெறுவதற்காகக் காவடி தூக்குவது என்ற வழக்கம் ஏற்பட்டது.*

## காவடிச் சிந்து

"சிந்து" என்பது ஒரு வகை இசைப்பாட்டு. இது கவிதையினின்றும் வேறுபட்டது என்பதற்கு, 'சிந்து படிக்கக் கவி படிக்க' என்று பழந்தமிழ்ப் புலவர் ஒருவர் இரண்டையும் வேறுபடுத்திக் கூறியிருப்பதாலும் அறியலாம். இசையின்பமும், சொல்லழகும், தாளக் கட்டும், பிராச லக்ஷணமும், எளிய நடையுமே சிந்துக்கு அழகும் உயிரும் கொடுப்பவை. இதில் பிரமாதமான தத்துவக் கருத்துக்களோ, சமயக் கருத்துக்களோ, கவிதை அழகோ நிறைந்திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை; நிறைந்திருந்தால் சிந்து ஈடு இணையில்லாமல் இருக்கும்.

சிந்துப் பாடல்கள், நாட்டுப் பாடல்களையும், தெம்மாங்குப் பாடல்களையும் அடிப்படையாகக் கொண்டு, சிற்சில மாறுதல்களோடு கூடிய உருவங்களிலும், மெட்டுக்களிலும் இயற்றப்பட்ட பாடல்களாகவே தோன்றுகின்றன. இராம நாடகம், நந்தன் சரித்திரம், பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகம், பதினெண் சித்தர் பாடல்கள் முதலிய நூல்களில் அநேக பாட்டுக்கள் நாட்டுப் பாடல்களின் சாயலிலேயே இருப்பதைக் காணலாம். அண்ணாமலை ரெட்டியார் காவடிச் சிந்தின் அமைப்பைக் கவனித்தால் இதுவும் நாட்டுப் பாடல்களின்றும் சற்றே மாறுபட்ட

*See "South Indian Customs" by P. V. Jagadisa Ayyar, PP. 137, 138.

ஒருவகைப் புதுச் சிந்து என்றே சொல்லத் தோன்றுகிறது. இன்று மலையாளத்தில் நாட்டுப்பாடல்களைப் பெரும்பாலும் காவடிச் சிந்து மெட்டிலேயே பாடுகிறார்கள். காவடிச் சிந்துகளையும் பெரும்பாலும் நாடோடி மெட்டுக்களில்தான் கிராமத்தார்கள் பாடுவார்களேயொழிய, சுத்தமான கர்நாடக ராகங்களில் பாடுவதென்பது எங்கோ இரண்டோர் இடங்களில் அபூர்வமாக நடைபெறும் காரியம்தான்.

அண்ணாமலை ரெட்டியாரின் காலத்திலும் அதற்குப் பிறகும் அவருடைய காவடிச் சிந்தின் மெட்டுக்களில் இயற்றப்பட்ட சிந்துகள் கணக்கிட்டுக் கூறமுடியாதபடி அவ்வளவு அதிகமாக இருக்கின்றன. கோவில்பட்டியை அடுத்துள்ள ஐயநேரிக் கிராமத்தில் வாழ்ந்த சீனி ஆச்சாரி என்னும் தச்சுவேலை செய்யும் மரபினர் ஒருவர் அண்ணாமலை ரெட்டியாரின் காலத்திலேயே அவருடைய காவடிச் சிந்துகளை முன்மாதிரியாக வைத்துக்கொண்டு, கழுகுமலை முருகன் பேரில் காவடிச் சிந்துகள் பல இயற்றியிருக்கிறார். சீனி ஆச்சாரியின் காலம் 1852–1902 என்று சொல்லுகிறார்கள். இவர் இயற்றிய காவடிச் சிந்துகள் சிலவற்றையும் கும்மி ஒன்றையும் பார்த்திருக்கிறேன். அந்தக் காவடிச் சிந்துகளில் காமச் சுவை மட்டுக்குமீறியிருக்கும். இவரைத் தவிரக் கரிவலம்வந்தநல்லூரில் வாழ்ந்த உத்தண்டம் பிள்ளை என்பவரும் ரெட்டியார் காலத்தில் காவடிச் சிந்துகளை இயற்றினார் என்று கூறுவார்கள்.

அந்தக் காலத்தில், ஒருவருடைய புலமையைச் சோதிப்பதற்கு, "அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து மாதிரி உம்மால் பாட முடியுமா?" என்றே கேட்பார்களாம். இதனால் காவடிச் சிந்துக்கு எவ்வளவு மதிப்பு இருந்து வந்தது என்பதை அறியலாம். "அவ்வாறு பாடவும் முடியும்" என்று கூறி, பிரபல தமிழறிஞரான பாலவநத்தம் ஜமீன்தார் பாண்டித்துரைத் தேவர் பல காவடிச் சிந்துகள் பாடினாராம். அவை அச்சாகவில்லை. பாரதியாரும் இந்தச் சவாலை ஏற்றுக்கொண்டுதான் காவடிச் சிந்து மெட்டுக்களில் சில பாடல்கள் இயற்றினார்.

இந்துக்களுக்குக் காவடிச் சிந்து இருப்பதுபோல, முஸ்லீம்களுக்கும் ஒரு சிந்து வேண்டும் என்று பூவடிச்

சிந்தை இயற்றினர் திருநெல்வேலி மேலப்பாளையத்தைச் சேர்ந்த காளை அசன் அலிப் புலவர். முகமது நபி, ஞானி முகையிதீன், ஞானி மீரான் சாகிபு ஆகியோரைத் துதிக்கும் இந்தப் பூவடிச் சிந்தின் இறுதிச் சிந்து நூலாசிரியரின் ஆசிரியரான செய்யிது முகமது சாகிபைப் போற்றுகிறது. அதில், பூவடிச் சிந்து இயற்றப்பட்டதன் காரணமும் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது:

**காவடிச்சிந் தாவலுற்றோர் பூவடிச்சிந் தேவமுத்தக்**
**காளையரம் அசனலிசொற் சிந்தையே — எந்த**
**வேளையும் மகிழ்ந்துரைப்போர் நிந்தையே**

பூவடிச் சிந்தின் மெட்டுக்கள் யாவும் செட்டியாருடைய காவடிச் சிந்தின் மெட்டுக்களே.

அக்காலத்தில் சில தமிழ்ப் புலவர்கள் கும்மிப்பாட்டையும்கூட ஏறக்குறையக் காவடிச் சிந்தின் மெட்டை அனுசரித்தே இயற்றியிருக்கிறார்கள் என்பதற்குப் பல சான்றுகள் உண்டு.

கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் காவடிச் சிந்து மெட்டுக்களில் இயற்றியிருப்பவற்றில் இன்று சகஜமாகப் பாடப்படும் அற்புதமான பாட்டாகிய "தோன்று நிகழ்ந்ததனைத்தும் உணர்ந்திடும்" என்பதும் ஒன்று. இது "ஆறுமுக வடிவேலவனே" என்ற காவடிச் சிந்தின் மெட்டில் இயற்றப்பட்டதாகும். இதே மெட்டில் "முன்னை இலங்கை அரக்கர் அழிய ... ..." என்ற மற்றொரு பாட்டையும் பாரதியார் இயற்றியுள்ளார். "காலமாம் வனத்தில் அண்டக் கோலமா மரத்தின்மீது" என்ற அவரது காவடிச் சிந்து பொருட்செறிவிலும் அழகிலும் சிறந்து விளங்குகிறது.

காவடிச் சிந்தின் மெட்டில் மற்றவர்கள் பாடியுள்ள சிந்துகள் இங்கே குறிப்பிட்டுக் கூறத்தக்கவாறு அவ்வளவு சிறப்புடையனவாக இல்லை.

## அண்ணாமலை ரெட்டியார்[1]

*திருநெல்வேலி ஜில்லாவில் சங்கர நயினார் கோவிலுக்குச் சுமார் ஆறு மைல் வடக்கே இருக்கும் சென்னிகுளம் என்ற கிராமத்தில் 1865-ம் வருஷம் சென்னவ ரெட்டியார் ஓவு அம்மாள் என்ற தம்பதிகளின் ஆறுவது (கடைக் குட்டிப்) பிள்ளையாகப் பிறந்தார் அண்ணாமலை ரெட்டியார். இவருக்கு மூத்தவர்கள் ஐவரும் பெண்கள். பிள்ளைப் பிராயத்தில், சிவகிரி சுப்பிரமணிய பிள்ளை என்பவர் சென்னிகுளத்தில் நடத்தி வந்த ஒரு திண்ணைப் பள்ளிக் கூடத்தில் 'ராஜ கோபால மாலை', 'திருக்கருவை அந்தாதி', 'மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்', 'திருப்புகழ்', 'நிகண்டு' முதலியன படித்தார். அந்த இளம் வயதிலேயே இவருக்கு இருந்த அபாரமான ஞாபக சக்தியைப் பற்றிக் கூறும் செய்தி ஒன்று வழங்கி வருகிறது. அதாவது, ரெட்டியார் பள்ளிப் பாடங்களைக் கவனித்துக் கேட்காமலும் ஒழுங்காகப் படிக்காமலும் விளையாடிக்கொண்டிருந்தாராம். இதற்காக வாத்தியார் இவரைக் கண்டித்தாராம். பாடங்களை ஒருமுறை வாசித்துக் காட்டினால், தாம் அவற்றை உடனே ஒப்பிக்கத் தயார் என்று இவர் வாத்தியாரிடம் தெரிவித்தாராம். வாத்தியார் 'வாக்குண்டாம்' பாடல்கள் முழுவதையும் ஒருமுறை வாசித்தாராம். வாசிக்கும்போது நன்றாக மனத்தில் வாங்கிக் கொண்டு சிறிது நேரத்தில் அவை முழுவதையும் ரெட்டியார் ஒப்பித்து விட்டாராம்.*[2]

*இதன் பிறகு சேற்றூர் சமஸ்தானப் புலவர் ராமசாமிக் கவிராயர் என்பவரிடம் இவர் தமிழ்ப்பாடம் கேட்*

---

1. அண்ணாமலை ரெட்டியாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதுவதற்கு ஆதாரங்களாகப் பயன்பட்டவை: ஸ்ரீ ஆர். சென்னப்ப ரெட்டியார் 1913-ல் பதிப்பித்த "சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் நினைவு மலர்"; ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதிய "காவடிச் சிந்து அண்ணாமலை ரெட்டியார்"; "ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டு"; ஸ்ரீ உ. வே. சாமிநாதையரின் "என் சரித்திரம்"; கோவில்பட்டித் தாலுகாவிலுள்ள சில கிராம வாசிகள் கூறிய செய்திகள்.

2. ஏறக்குறைய இதுபோன்ற ஒரு செய்தி பழனி மாம்பழக் கவிராயரைப் பற்றியும் வழங்குகிறது.

டார். அப்போது ரெட்டியாருக்கு இலக்கண நூல்களில் மனம் செல்லவில்லை. இலக்கியத்திலேயே மிகவும் ஈடு பட்டவராக இருந்தார்.

வீட்டு வேலைகளையும் இவர் கவனிக்கவில்லை. தகப்பனார் ஒருநாள் இவரைத் தோட்டத்திற்குப் போய்ப் பாத்திகளுக்குத் தண்ணீர் விலகிவிட்டு வரும்படி சொல்லி அனுப்பினார். ஆனால் ரெட்டியாரோ அந்த வேலையைச் செய்யவில்லை. ஆகவே, சாயங்காலமானதும் வீட்டுக்குச் செல்லப் பயமாகிவிட்டது. வீட்டுக்குப் போவதற்குப் பதிலாகப் பக்கத்தில் உள்ள சேற்றூர் ஜமீன்தாரின் அரண்மனைக்குப் போய்விட்டார். அங்கு ஜமீன்தாராக இருந்த சுந்தரதாஸ் பாண்டியன் இவரை வரவேற்று உபசரித்தார். ஒருநாள், "அரண்மனையில் சாப்பாட்டு வசதிகளை ஒழுங்காகச் செய்து வருகிறார்களா?" என்று ஜமீன்தார் ரெட்டியாரைக் கேட்டார். அன்று சாப்பிட்ட கீரைக் குழம்பு மோசமாக இருந்தது போலிருக்கிறது. அதனால் ரெட்டியார் பின்வரும் விருத்தத்தைப் பாடி ஜமீன்தாருக்கு விடையளித்தார்:

**வாரையணி முலைமடவார்**
**மாரன்என ஆசைகொள**
**வந்த ரூபா!**
**சேரைநகர் ஆளவந்த**
**சுந்தரா ஸேந்திரமன்னு!**
**செப்பக் கேண்மோ!***

---

* (பாட பேதம்) வாரையணி முலைமடவார்
அனுதினமும் மகிழவரு
மகிபா! பூமா!
சேரைநகர் ஆளவரும்
சுந்தரே சச்சுகுணு!
செப்பக் கேளு!
... ... ... ...
ஆரை நொந்து கொள்வதினி
... ... ... ...

கீரைஎனும் குழம்பதனுல்
மனம்குழம்பிச் செமியாமல்
கிலேச முற்றேன்.
ஆரைஇனி நோவதையா?
உலகிலிலே இதுவும்என்றன்
அதிர்ஷ்டம் தானே!

அண்ணுமலை ரெட்டியார் இவ்வாறு கூறவே, அன்று முதல் அவருக்கு நல்ல முறையில் கவனித்து உணவிடும் படி உத்தரவு பிறந்ததாம்.

இதன்பின் இவருக்கு முகவூர் மீனுட்சிசுந்தரக் கவிரா யரின் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அவர் சேற்றூர் வாசி. ரெட்டியாரைவிடச் சுமார் மூன்று வயது மூத்தவர்; ரெட்டியாருக்கு ஆசிரியருங்கூட. எட்டயபுரத்தில் சமஸ் தான வித்வானுகவும் இருந்திருக்கிருர். அவர் சில பிரபந்தங் களும் தனிப்பாடல்களும் இயற்றியிருப்பதுடன், எட்டயபுர அரண்மனையின் ஆதரவில் 1895-ல் சங்கர நாராயண சாஸ்திரிகளால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட குவலயா னந்தம் என்ற வடமொழி அணி இலக்கணத்திற்கு, சுலோகங்களின் மொழிபெயர்ப்புக்கு இசைந்த உதாரணச் செய்யுட்களும் இயற்றியுள்ளார்.

மீனுட்சிசுந்தரக் கவிராயருடன் அண்ணுமலை ரெட்டி யார் தமிழ் கற்பதற்காகத் திருவாவடுதுறைக்குப் புறப் பட்டார். அப்பொழுது, இருபதுக்கும் குறைந்த அந்த இளவயதிலேயே, இவர் யமகம், திரிபு முதலிய கடினமான அமைப்புக்களுடன் கூடிய செய்யுட்களை அதிவிரைவில் இயற்றக்கூடியவராக இருந்தார். ஆனுல், சங்கீத ஞானம் சிறிதும் இல்லை. குரலும் இனிமையற்றிருந்தது. திருவாவடு துறையில் அந்தக் காலத்தில் பண்டார சந்நிதியாக இருந்த வர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர். திரிசிரபுரம் மகா வித்துவான் ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையும் அன்னுரின் மாணுக்கராகிய ஸ்ரீ உ. வே. சாமிநாதையரும் அப்போது திருவாவடுதுறையிலேயே இருந்து வந்தனர். பண்டார சந்நிதியாகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர், ரெட்டியாருக் குப் பாடம் சொல்லும்படி அவரை ஸ்ரீ உ.வே. சாமிநாதைய

ரிடம் ஒப்புவித்தார். ஸ்ரீ சாமிநாதையர் நன்னூலும் மாயூரப் புராணமும் பாடம் சொல்லி வந்தார். அப்பொழுதும் ரெட்டியாருக்கு இலக்கணத்தில் மனம் செல்லவில்லை.. சிறிதுகாலம் அங்கிருந்துவிட்டு ஊருக்குத் திரும்பி விட்டார். திருவாவடுதுறையில் ரெட்டியார் தங்கியிருந்த காலம் இரண்டு மாதங்கள் என்றும் ஒரு வருஷமென்றும் இரண்டு விதமாகச் சொல்லப்படுகின்றன.

திருவாவடுதுறையிலிருந்து திரும்பிவந்தபோது ரெட்டியார் சங்கீத ஞானத்தையும் சம்பாதித்துக்கொண்டு வந்தார். அறிஞர்களிடம் தம்முடைய பாடல்களைப் பற்பல ராகங்களில் பாடிக் காட்டினார். ஊருக்கு வந்தபின், இவருக்கு ஊற்றுமலை ஜமீன்தார் இருதயாலய மருதப்பத்தேவர், வள்ளல் என்று புகழப்பட்ட ராஜவல்லிபுரம் முத்துசாமி பிள்ளை, கவிராஜர் என்ற பட்டம் பெற்ற திருநெல்வேலி நெல்லையப்ப பிள்ளை ஆகியோரின் நட்பைச் சம்பாதித்தார். ஊற்றுமலை ஜமீன்தாரின் வாசஸ்தலம் தென்காசித் தாலுகாவிலுள்ள வீரகேரளம்புதூராகும். அங்கே பற்பல புலவர்களும் வந்து பாடி அரண்மனையில் சன்மானம் பெற்றுத் திரும்புவார்கள். ரெட்டியாரை அங்கு அழைத்துச் சென்றவர் சென்னிகுளம் சுந்தரப் பரதேசியார் என்பவராம். ஜமீன்தாருக்கும் ரெட்டியாருக்கும் இடையே நெருங்கிய நட்பு இருந்ததாகவே தெரிய வருகிறது. ஜமீன்தார்மீது சிருங்கார ரசம் மிகுந்த முந்நூற்றுக்கு மேற்பட்ட பாடல்களை ரெட்டியார் இயற்றியிருக்கிறார். அவை அச்சாகியுள்ளன. ஊற்றுமலை ஜமீன்தார், முத்துசாமி பிள்ளை, நெல்லையப்ப பிள்ளை ஆகியவர்களைக் கண்டு பாடி, சன்மானம் பெற்று ஜீவித்து வந்தார் ரெட்டியார். பிறகு, திரும்பவும் ஒருமுறை திருவாவடுதுறைக்குச் சென்று பண்டார சந்நிதியைப் பார்த்துவிட்டு வந்தார். அப்போது அவர் பண்டார சந்நிதியின்மீது பின் வரும் விருத்தத்தைப் பாடினார்:

அரசனகர் ஆதியர்முன் போற்றவட<br>
வாலமர்ந்த அமலா! தென்பால்<br>
அரசனக ராவைவென்ற விடைமதிச்செஞ்<br>
சடைகரந்திவ் வவனி போற்ற

**அரசனக [1]ரார்ந்தொளிர்கப் பிரமணிய**
**குருமணியே! [2]அடிமையேன் நான்**
**[3]அரசனக ராகமல க்கடைக்கட்**
**கருணைபுரிந் தாளு வாயே!**

இந்தப் பாட்டின் கடைசி அடியில் வரும் '[4]அரசன்' என்னும் சொல்லுக்குப் பொருள் தெரியாமல் எல்லோரும் திகைத்தார்கள். அதற்கு 'ரசமில்லாதவன்' என்று ரெட்டியார் பொருள் கூறவே, பண்டார சந்நிதி அவரை மெச்சி, ''நீர் ஜாதியிலும் ரெட்டி; புத்தியிலும் ரெட்டி'' என்று புகழ்ந்தார்.

ரெட்டியார் தாசி லோலராக இருந்து உடல் நலம் இழப்பதைக் கண்ட அவருடைய தந்தையார் அவருக்குக் 'குருவம்மாள்' என்ற பெண்ணைக் கல்யாணம் செய்து வைத்தார். அப்போது ரெட்டியாருக்கு வயது இருபத்து நான்கு. ரெட்டியார் தம் மனைவியுடன் ஊற்றுமலைக்குச் சென்று சுமார் இரண்டு வருஷ காலம் வசித்து வந்தார். அப்போது இவருக்கு க்ஷயரோகமும் வந்துவிட்டது. ஜமீன்தார் உடனே தம்முடைய மூடுபல்லக்கிலேயே வைத்து ரெட்டியாரைச் சென்னிகுளத்திற்கு அனுப்பி வைத்தார். 1891-ம் வருஷத்தில், தமது இருபத்தாறுவது வயதில், தை அமாவாசையன்று அண்ணாமலை ரெட்டியார் காலமானார்.

தவறான நடத்தைதான் ரெட்டியாரை அதிக காலம் உயிரோடு வாழ விடாமல் செய்துவிட்டது என்று கருதுகிறார்கள். தமக்கு அரையாப்பு நோய் வந்ததைப் பற்றி ஊற்றுமலை ஜமீன்தாருக்கு இவர் எழுதிய பாடல் பின் வருமாறு:

**ஆதிஇலக் கணப்படியே[5] உதித்திரண்டிற் கடங்காத்துன்**
**பாக்கி மூன்றை**

---

(பாட பேதம்) 1. ரார்ந்தொளி சுப். 2. அடியேன் சண்டோர். 3. அரசனக ராகமலக் கடைக்கணருட் கருணைபுரிந் தாளுவாயே.

4. இரட்டிப்புப் புத்தியுடையவர் என்று அர்த்தம்.

5. ஆதி இலக்கணம் ஐந்து: எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி அல்லது அலங்காரம் ஆகியவை.

**மேதினியில் பலவிதமாச் செலவுசெயு மாறுபுரி**
**வித்த [1]நாவில்**
**பாதியினுல் யான்பட்ட பாடுசொல முடியாது**
**பஞ்ச மென்ப**
**[2]தேதுமில்லை யோதுமில்லை உகந்துதெரு உலவுதற்கும்**
**ஏது வில்லை.**

*[இதன் பொருட் சுருக்கம்: முதல் இலக்கணமாகிய எழுத்தின்படி (அதாவது தலை எழுத்தின்படி) உண்டாகி, இரண்டாவதாகிய சொல்லுக்கடங்காத் துன்பம் தந்து, மூன்றுவதாகிய பொருள் செலவு செய்து, நாலாவது இலக்கணமாகிய யாப்பில் பாதியினுல் (அரையாப்பினுல்) நான் பட்டபாட்டைச் சொல்லி முடியாது. ஐந்தாவது இலக்கணமாகிய அலங்காரம் என்பது எதுவும் கிடையாது. தெரு வழியே உலாவவும் வகையில்லை.]*

*சங்கர நயினர் கோவிலில் ஆடி மாதம் நடக்கும் தபசு உற்சவத்தின்போது ஊற்றுமலை ஜமீன்தாரின் கைங்கரியத்தால் விழா நடை பெற்று வந்தது. அதற்கு ரெட்டியாரும் போயிருந்தார். அங்கே ஜமீன்தாரைக் கண்டு சில பாடல்களைப் பாடினர். ஜமீன்தார் அவற்றைப் பெரிதும் பாராட்டினர். விழா முடிந்து ரெட்டியார் தமது சொந்த ஊராகிய சென்னிகுளத்திற்குத் திரும்பிய பின்னரே அவருக்கு அரையாப்பு வந்தது. நோயினுல் பலம் குறைந்து உடம்பு மெலிந்து விட்டது. ஆறு மாத காலம் இந்த நோயினுல் கஷ்டப்பட்டார்; பிறகு ஜுரம் வந்து இரண்டு மாதங்கள் வருந்தினர். நோயினுல் இவர் வருந்திய சமயம் ஊற்றுமலைக்குக் கடிதங்கள் எழுதுவதும், ஜமீன்தாரிடமிருந்து இவருக்குக் கடிதங்கள் வருவதுமாக இருந்தன. இந்தச் செய்திகள் யாவும் ரெட்டியாரின் சீட்டுக் கவிகளில் காணப்படுகின்றன. வீட்டுச் செலவுக்காக இவர் ஜமீன்தாரிடம் பணம் வாங்கி வந்த செய்தி, "எனது இல் செலவுக்காகவே நூறு ரூபாயும் எனக்கு அளிப்பாய் மனக்களிப்பாய்*

---

(பாட பேதம்) 1. நான்கில். 2. தேதுமிலை யோதுமிலை இகந்துதெரு உலவுதற்கும் ஏதுமில்லை.

விரும்பித்தானே'' என்று முடியும் ஒரு சீட்டுக்கவியிலும், ''என் அகத்துக்குப் பணம் தந்திடக் கருணை முழுதினும் வைத்து இரட்சிப்பாயே'' என முடியும் மற்றொரு சீட்டுக் கவியிலும் காணப்படுகிறது.

## சில செய்திகள்

ரெட்டியாருக்கு மிகவும் பிடித்த கவிஞர்கள் கவிச்சக்கரவர்த்தி கம்பர், கலிங்கத்துப் பரணி ஆசிரியரான செயங்கொண்டார் ஆகியோராவர். இவர் தம் சீட்டுக் கவிகளில் கவிச்சக்கரவர்த்தியை வானளாவப் புகழ்ந்திருக்கிறார்.* அகத்தியரையும் சிறப்பித்திருக்கிறார். பேரிலக்கியங்களுள் கம்பராமாயணம் போலச் சிற்றிலக்கியங்களில் கலிங்கத்துப் பரணி சிறந்தது என்று ரெட்டியார் ஒரு முறை வெள்ளகால் ஸ்ரீ ப. சுப்பிரமணிய முதலியாரிடம் கூறியிருக்கிறார். ரெட்டியார் பாடிய பிற நூல்கள் வீரைத்தலபுராணம், வீரை நவநீத கிருஷ்ணசாமி பதிகம், வீரை அந்தாதி, வீரைச் சிலேடை வெண்பா, வீரைப் பிள்ளைத் தமிழ், கோமதி அந்தாதி ஆகியவையாகும். இந்த நூல்கள் அச்சிடப் பெற்றதாகத் தெரியவில்லை. வீரை என்பது வீரகேரளம் புதூர்.

ரெட்டியார், பார்க்க அழகாக இருப்பாராம். கம்பீரமும் சுதந்திர புத்தியும் உடையவராகவும் இருந்தார். இரண்டு பொருள்படச் சாதுரியமாகப் பேசுவதில் எப்பொழுதும் இவருக்கு விருப்பம் அதிகம். ஒரு முறை இவர் யாரோ ஒருவருடன் உலாவச் சென்றிருந்தாராம். உலாவிவிட்டுத் திரும்பும் போது ரெட்டியார் நடுவழியிலே சற்றுப் பின் தங்கி விட்டார். முன்னால் வந்தவர், ரெட்டியார் எங்கே என்று திரும்பிப்பார்த்தார். ''ஏன் தாமதம்?'' என்று அவர் கேட்டதற்கு, ''முட்டாளுடன் வந்துவிட்டதால் தாமதமாகி விட்டது!'' என்றாராம் ரெட்டியார். கூட உலாவச் சென்றவருக்குத் திகைப்பாகிவிட்டது. அவர் ஒருவர்தான் ரெட்டியாருடன்

---

* ''பரமரசம் கக்கந்தக் கவினளினத் தாரைபெய் கம்பன்'' (ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டு, 291). ''கல்விப் பழக்கந் தனில் கம்பன் சிரக்கம்பம் செய உணர்ந்த மேலோன்.''
(ஊ. த. தி. 300.)

உலாவச் சென்றவர். தம்மை "முட்டாள்" என்று ரெட்டியார் எந்த அர்த்தத்தில் கூறுகிறார் என்று தெரியாமல் அவர் நிற்கும்போது, "ஆம், முள் தாளுடன் (காலோடு) வந்து விட்டதால் தாமதமாகி விட்டது" என்று பதம் பிரித்துப் பொருள் விளங்கும்படி சொன்னாராம் ரெட்டியார். கூட வந்தவர் பெரிதும் சந்தோஷப்பட்டாராம்.

மற்றொரு சமயம் ஓர் அரண்மனையில் பொன்னிற மான சிவந்திப் பூக்களைத் தட்டில் வைத்துக் கொண்டு முன் பின் தெரியாத ஒரு பெண் வர, அவளைப்பார்த்து, "தங்கச்சி வந்தியா?" என்று கேட்டுவிட்டாராம்! அந்தப் பெண்ணுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை! உடனே ரெட்டியார், "தங்கச் சிவந்தியா?" என்று பதம் பிரித்து அவளுடைய திகைப்பைப் போக்கினாராம். ஆனால், "தங்கச் சிவந்தியா?" என்னும் இந்தச் சாதுரிய வசனத்தைப் பேசியவர் கடிகை முத்துப் புலவர் என்றும் ஒரு கட்டுரையில் கூறப்பட்டிருக்கிறது.[1]

ரெட்டியார் இவ்வாறு இரண்டு பொருள்படப் பேசியவை என்று பற்பல வசனங்களும் வழங்கும்.

### ரெட்டியாரின் கவித்திறம்

காவடிச் சிந்துகளைத் தவிர பிற சிருஷ்டிகளில் இன்று அச்சிடப்பெற்று அகப்படுகின்றவை இவருடைய தனிப் பாடல்களே.[2] இவற்றில் ஏறக்குறைய தொண்ணூற்றொன்பது சதவிகிதம், யமகம் திரிபாக அமைந்தவையே. ஒரு சில பாடல்களைத் தவிரப் பிற யாவும் ஊற்றுமலை ஜமீன்தாரைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டு இயற்றப் பட்ட காமரசப் பாடல்களே. ஒரு விருத்தத்தில் நான்கு எதுகைகளையும் ஒரே மாதிரி வைத்துப் பாடும் சாமர்த்தியத்தை ஒரு காலத்தில் பெரிய கவித்துவமாகக் கருதி

1. "கடிகை முத்துப்புலவரின் கால ஆராய்ச்சி" என்னும் தலைப்பிட்டு, 30-3-1934 'சுதேச மித்திர'னில் எட்டயபுரம் டாக்டர் ஜி. பக்தவத்சலம் எழுதிய கட்டுரை.

2. அண்ணாமலை ரெட்டியாரின் தனிப்பாடல்களில், இந்த முன்னுரையில் மேற்கோளாகக் காட்டப்படும் பாடல்கள் மட்டும் இந்நூலின் அனுபந்தப் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

வந்தார்கள்; அல்லது கருதும்படி புலவர்கள் செய்து வந்தார்கள். ரெட்டியார் பாடிய இம்மாதிரிப் பாடல்கள் அனைத்துமே பாராட்டுக்குரியவை அல்ல.

'ச ரி க ம ப த நி' என்னும் ஏழு ஸ்வரங்கள் சேர்ந்த தொடரையும், சாயாதரங்கிணி, நடநாராயணி, சாவேரி, காம்போதி, மோகனம் என்னும் ராகப் பெயர்களையும்கூட எதுகையாக வைத்து ரெட்டியார் பாடியிருக்கிறார். மேலும், சேற்றூர், சந்திரகிரி, சிவகிரி, ஊர்க்காடு, கடம்பூர், மணியாச்சி, சிங்கம்பட்டி, ஊற்றுவரை (ஊற்றுமலை) ஆகிய ஊர்ப் பெயர்கள் வரும்படியாக ஒரு பாடலும், பரணி, கார்த்திகை, ரோகணி, மிருக சீரிடம், திருவாதிரை, புனர் பூசம், பூசம், ஆயில்யம், மகம் ஆகிய நட்சத்திரங்களின் பெயர்கள் வரும்படியாக ஒரு பாடலும் இயற்றியிருக்கிறார். இவை ரெட்டியாரின் சாமர்த்தியத்தைக் காட்டுகின்றனவே யொழியக் கவித்துவத்தைக் காட்டவில்லை.

'இனி, வெல்லப் பாகும் எனக்கு இனிக்கும்; முன்பு விரக நோயின்போது கசந்தது போல இனிக் கசக்காது' என்னும் பொருளில் அமைந்த "இனிப்பாகும் இனிப் பாகும் எனக்குத்தானே" என்ற வரியும், 'மேகலையும் கலைந்துவிடுமே' என்னும் பொருளில் அமைந்த "மேகலையு மேகலையுமே" என்ற வரியும், இவை போன்ற இன்னும் சில வரிகளும் இவருடைய பாடல்களில் ஆங்காங்கு காணப்படும். இவை படிப்பதற்கு ஓரளவு ரசமாக இருக்கின்றன.

பெரும்பாலும் நாட்டுப் பழக்கமாக வழங்கிவரும் சொற்களையும் வாக்கிய அமைப்புக்களையும் இவர் தம் பாடல்களின் இடையே கையாளுவதும் உண்டு. இது அக் காலத்தில் இவரிடம் சிறப்பாகக் காணப்பட்ட ஒரு தனி இயல்பு என்றுகூடக் கூறிவிடலாம். 'இந்த **லச்சைக்** கென் சொல்வேனே', 'இப்படிக் காசி காஞ்சி டில்லி, எங்கும் பார்த்தாலும் இல்லை **சல்லி**', '**கங்குகரை** இல்லையே', 'தரு **வடை அப்பம்**', '**ரவைரவையாக** அவன் கணை, மின் மெய்யைக் கொய்ய', '**சடைத்தார்** ஆள் ஆயிரம் பேர்', '**வம்புத்தனம்** ஆதலி னால்', 'கால் **தோசையும்** அருந்தாள்', 'இன்று தொடவே

மாட்டேன், வேணுமென்றாலும் போடு கொன்று' என்பன போன்ற தொடர்களில் வரும் சொற்களும் சொற்கோவைகளின் அமைப்பும் பேச்சு வழக்கில் அமைந்திருப்பதைக் காண லாம். இவை போக, பழமொழிகளையும் ஏராளமாகத் தம் பாடல்களில் இவர் எடுத்தாண்டிருக்கிறார்.

காவடிச் சிந்து

ரெட்டியார் இயற்றிய பிறபாடல்கள் அனைத்தினும் சிறந் தவையாக இருப்பவை காவடிச் சிந்துகளே. பண்டித பாமர ரஞ்சிதமாக அமைந்துள்ள இந்தச் சிந்துகளின் சொல்லழ கும், இசையமைதியும் அற்புதமாக இருக்கின்றன. ரெட்டி யார் காவடிச் சிந்து பாடிய வரலாற்றை டாக்டர் உ. வே. சாமிநாதையர் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்:

"இவரிடத்து ஊற்றுமலை ஜமீன்தாராக இருந்த இருத யாலய மருதப்பத் தேவர் என்பவர் ஈடுபட்டுத் தம்மிடம் இருக்கும்படி செய்து மிக்க ஆதரவு அளித்தனர். இவரு ருக்கு அவரால் கொடுக்கப்பட்ட ஆடையாபரணங்கள் மிக அதிகம். அது கண்டு மற்றையோரும் இவருக்கு ஸம்மானம் அதிகம் செய்வாராயினர். மேற்படி ஊற்று மலையார் கழுகுமலைக்குக் காவடி எடுத்துச் சென்ற பொழுது அவருக்குச் சிரமபரிகாரமாக இவரால் பாடப் பட்டதுதான் காவடிச் சிந்து என்பது. காவடிச் சிந்தின் முறை ஏற்பட்டது இவராலேதான்."

இவருடைய காவடிச் சிந்துகளுக்கு வர்ணமெட்டுக் களையோ, ராக தாள அமைப்புக்களையோ தயார் செய்து கொடுத்தவர் கரிவலம்வந்தநல்லூரில் வாழ்ந்த பொன்னம் மாள் என்னும் ஓர் உருத்திர கணிகை என்றும் கூறு வார்கள்.

ரெட்டியார் இயற்றிய காவடிச் சிந்துகளில் இதுவரை யிலும் அச்சேறியிருப்பவை இருபத்திரண்டுதான்; அச் சேறாத பல சிந்துகள் உண்டென்றும் சொல்லுவார்கள். சில அச்சுப்பிரதிகளில் ராகதாள விவரங்களுடன் சிந்துகள் காணப்படுகின்றன. ஆனால், இந்த இசையமைப்பைச் செய்தவர் ரெட்டியாரா, அல்லது ரெட்டியாரின் காலத்தில்

வாழ்ந்த ஓர் இசையறிஞரா, இல்லையெனில் பொன்னம்மாள் தாளு என்பன போன்ற விவரங்கள் நமக்குத் திட்டமாகத் தெரியவில்லை. "பாதிராத்திரி வேளையில்" என்று தொடங்கும் சிந்து, பைரவி ராகம் என்று சில அச்சுப் பிரதிகளில் காணப்படுகிறது. ரெட்டியாரும் அதைப் பைரவி ராகத்திலேயே ஒருமுறை ஸ்ரீ வெ. ப. சுப்பிரமணிய முதலியாரிடம் பாடிக்காட்டியிருக்கிறார். ஆகவே, இந்த ஒரு சிந்தைத் தவிர வேறு சிந்துகளுக்கு ராக தாளங்கள் அமைத்தவர் யார் என்று தெரியவில்லை.

ஏறக்குறைய எல்லா அச்சுப் பிரதிகளிலும் பிழைகள் எண்ணி முடியாதபடி ஏராளமாக உள்ளன. சில பதங்களும் சில வரிகளும் வேண்டுமென்றே திருத்தப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக இன்று தெருவில் விற்கும் ஒரு காவடிச் சிந்துப் புத்தகத்தை வாங்கிப் படித்தால், சாமான்யத்தில் பொருள் தெரிந்துகொள்ளவோ, இசையோடு பாடவோ இயலாது. தமிழறிஞரான ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரும் இசை அறிஞரான ஸ்ரீ கே.வி. ஸ்ரீநிவாஸ ஐயங்காரும் வெளியிட்டுள்ள நூல்களில் காணப்படும் சில காவடிச் சிந்துகளிலும் பிழைகள் மலிந்திருக்கின்றன. இதிலிருந்து ஓர் உண்மையைத் தெரிந்துகொள்ளுகிறோம். அதாவது, தமிழறிஞர்களும் இசையறிஞர்களும்கூட ஊகித்துக் கண்டுபிடிக்க இயலாதவாறு சிந்துகள் ஏராளமான பிழைகளுடன் முன்பு அச்சிடப்பட்டிருக்கின்றன.

ரெட்டியார் காலத்திலேயே காவடிச்சிந்துகள் தமிழ்நாடெங்கும் பரவிவிட்டன. இவ்வளவு விரைவில் பரவிய நூல்கள் மிகமிகச் சொற்பம். எவரையும் ஆட்கொள்ளும் வண்ணம் காவடிச் சிந்துகள் அமைந்திருந்தமையே இதற்குக் காரணம். பிற்காலத்தில், படித்த கூட்டத்தாரில் பலர் காவடிச் சிந்துகளின் நயத்தை அனுபவிக்கத் தெரியாத காரணத்தால் அவற்றைக் கவனிக்காமல் விட்டுவிட்டார்கள். இந்த அலட்சிய புத்தியினால்தான் காவடிச் சிந்து நூல் இன்றுவரை பொது மக்களிடையே பிரபலம் அடையாமல் மூலையில் ஒதுங்கிக் கிடக்கும்படி ஆகிவிட்டது. இன்று வரை சுத்தமான ஓர் அழகிய பதிப்பு வெளிவராமல் போன

தற்குக் காரணமும் இந்த அலட்சிய புத்தியே. ஆனாலும். ஸ்ரீமான்கள் வெ. ப. சுப்பிரமணிய முதலியார், டி. கே. சிதம்பரநாத முதலியார், தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், சுத்தானந்த பாரதியார் போன்ற தமிழறிஞர்கள் காவடிச்சிந்தின் பெருமையைத் தங்கள் எழுத்துக்கள் மூலம் அவ்வப்போது எடுத்துக் காட்டி வந்திருக்கிறார்கள். சங்கீத வித்வான் ஸ்ரீ கே. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் 1928-ல் தாம் வெளியிட்ட "ஸங்கீத சில்லறைக் கோவை" என்ற நூலில் காவடிச் சிந்தின் இசையழகைப் பாராட்டிப் பின் வருமாறு கூறியிருக்கிறார்:

"......சிறந்த ஸங்கீத வித்வான்கள் இச் சிந்துகளைப் பொருள் விளங்கும்படியும் இராகங்களின் வனப்புக்கள் சிறக்கும்படியும் பாடக் கேட்பவர்கள் மனம் பரமானந்தக் கடலில் மூழ்கிவிடுமென்று உறுதியாய்ச் சொல்லலாம்."

மேற்கண்டவாறு புகழ்ந்துவிட்டுப் பன்னிரண்டு சிந்துகளை ராகதாளங்களில் அமைத்து ஸ்வரப்படுத்தியிருக்கிறார். காவடிச் சிந்தின் பெருமையை எடுத்துக்கூறிய மேற்கண்ட அறிஞர்கள் அனைவரும் தமிழகத்தின் பாராட்டுக்குரியவர்கள்.

இலக்கிய உலகிலும் காவடிச் சிந்துக்கு ஒரு முக்கியமான இடம் உண்டு. ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் பிறப்பதற்குமுன் தமிழ்க் கவிதை உலகில் ஒரு மறுமலர்ச்சியை உண்டுபண்ணியவர்களில் அண்ணாமலை ரெட்டியாரும் ஒருவர். 'தெய்வச் சிலையார் விறலிவிடு தூது' பாடிய குமார சுவாமி அவதானி, 'குற்றாலக் குறவஞ்சி' பாடிய திரிகூட ராசப்பக்கவிராயர், 'முக்கூடற் பள்'ளின் ஆசிரியர், 'வருண குலாதித்தன் மடல்' இயற்றிய புலவர், 'திருவருட்பா' பாடிய ராமலிங்க சுவாமிகள், 'காவடிச் சிந்து' பாடிய அண்ணாமலை ரெட்டியார் ஆகியோர் சம்பிரதாயமான செய்யுள் நடையை விட்டுவிட்டும், சில இடங்களில் புது அம்சங்களைப் புகுத்தியும் புதுவிதமான நூல்களை இயற்றினர். இவர்கள் கவிச் சக்கரவர்த்தி கம்பருக்கும் பின்னும், பாரதியாருக்கு முன்னும் தமிழ்ப் பாட்டு நடைக்குப் புத்துணர்ச்சியும் புத்துயிரும் ஊட்டி, தமிழைப் பழகு தமிழாக்கி, தமிழ்க் கவிதையுலகில் மறுமலர்ச்சியை உண்டுபண்ணிய

வர்கள். இவர்களுக்கெல்லாம் பிறகு தோன்றிய சி. சுப்பிரமணிய பாரதியார் தலைசிறந்த கவிஞராக இருந்த காரணத்தால், முன்னால் தொடங்கிய மறுமலர்ச்சிக்குப் பரிபூரணத்துவத்தைக் கொடுத்தருளினார். அந்த மறுமலர்ச்சியை முதலில் உண்டுபண்ணிய பிரம்மாக்களில் ரெட்டியாரும் ஒருவர் என்ற உண்மையை இன்று வரையிலும் அநேகர் தெரிந்து கொள்ளாமலிருப்பது வருந்தத்தக்க விஷயமே. இந்த மறுமலர்ச்சிப் பிரம்மா பழமையின் அஸ்திவாரத்திலேயே புதிய சிருஷ்டி செய்திருப்பது போற்றுதற்குரியது. பழைய திணையிலக்கணத்துக்கு இசைய இவர் இயற்றிய சில சிந்துகளை இந்த நூலில் காணலாம். உதாரணமாக, 'பாதிராத்திரி வேளையில்' என்னும் சிந்து பாலைத்திணைக்கும், 'நேமமாய்ப் பணி' என்பது நெய்தலுக்கும், 'செந்தில்மா நகரந்தனில் மேவிய' என்பது குறிஞ்சிக்கும், 'செந்தூர் வளர் முருகநாதா' என்பது மருதத்துக்கும் உரிய சிந்துகள். மற்றொரு திணையாகிய முல்லைத்திணைக்குரிய சிந்துமட்டும் காவடிச் சிந்து நூலில் இல்லை. இந்தக் காவடிச் சிந்துகளில் கடவுள் வணக்கமாகவும் நகர் வளமாகவும் உள்ளவை தவிரப் பிற யாவும் நாயக - நாயகி பாவத்தில் பாடப்பட்டவை.

## கழுகுமலை

காவடிச் சிந்துக்குக் கழுகுமலை முருகனே பாட்டுடைத் தலைவன். அதனால் கழுகுமலையைப் பற்றிய இரண்டொரு முக்கியமான விவரங்களை இங்கே தெரிவிப்பது பொருந்தும். இந்த ஊர் திருநெல்வேலி ஜில்லாவில் கோவில்பட்டிக்குத் தென்மேற்கே 12-வது மைலில் உள்ளது. இதற்கு மேற்கே சுமார் 15 மைல் தூரத்துக்கு அப்பால் இருக்கிறது ரெட்டியாரின் சொந்த ஊராகிய சென்னிகுளம். கழுகுமலை, நகர வசதிகள் அமைந்த ஒரு பெரிய கிராமம். இவ்வூரில் மிக உயரமான ஒரு குன்று இருக்கிறது. அதில் ஓரளவு குடைந்தெடுத்து அதனுள் முருகனைப் பிரதிஷ்டை செய்து, கோவிலும் கட்டியிருக்கிறார்கள். கழுகுமலை பழைமையான ஊர் என்பதில் சந்தேகமில்லை. ஜைனமத சம்பந்தமான சாசனங்களும் சிற்பங்களும் இவ்வூரில் உள்ளன.

மலையின் அடிவாரத்தில் ஜைனதீர்த்தங்கரர்களின் சிற்பவடிவங்கள் காணப்படுகின்றன. குன்றின் வடபுறத்தில் மகாபலிபுரம் பஞ்ச ரதங்களைப் போன்ற அமைப்பில் ஒரு பாறையே கோவிலாகச் செதுக்கப்பட்டிருக்கிறது. அதிலுள்ள சிற்பங்கள் தலைசிறந்தவை. அந்தக் கோவிலுக்கு, 'வெட்டுவான் கோவில்' என்று ஜனங்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். அம்மாதிரி பெயரிட்டதற்குக் காரணம் இதுவே என்று ஒரு கதை சொல்லுவார்கள். விரிவஞ்சி அந்தக் கதையை நான் இங்கே கூறவில்லை. கௌதம புத்தர் தம் கொள்கைகளைப் பிரசாரம் செய்வதற்காகக் கழுகுமலை வரையில் வந்திருக்க வேண்டும் என்று ஸ்ரீ து. அ. கோபிநாதராவ் என்ற சரித்திர ஆராய்ச்சியாளர் அபிப்பிராயப்படுகிறாராம்.*

லயனல் டி. பார்னெட் எழுதிய ஒரு நூலில் (Lionel D. Barnett's Antiquities of India, 1913) கழுகுமலைச் சிற்பங்களைப் பற்றிப் பின்வரும் குறிப்பு காணப்படுகிறது:

("கல்லாலும் மண்ணாலும்) கட்டப்பட்ட கோவில்களைப் போல, பாறைகளைக் குடைந்து கோவில்கள் மாதிரி செதுக்கி உருவாக்குவதில் ஜைனர்கள் பெருவிருப்பம் கொண்டவர்கள். இம்மாதிரி செதுக்கப்பட்டவற்றுள் முக்கியமானவை எல்லோராக் குகைகளிலுள்ள இந்திர சபை, ஜகந்நாத் சபை முதலியவையாகும். அவை ஆரம்ப காலத்துத் திராவிடபாணியில் அமைந்துள்ளன. அவற்றின் காலம் கி. பி. 800-க்கும் 1100-க்கும் இடைப்பட்டதாகும். இந்த வகையைச் சேர்ந்த பாறைக் கோவில் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள கழுகுமலையிலும் காணப்படுகிறது. அது செதுக்கப்பட்ட காலம் பத்தாம் நூற்றாண்டாகவோ பதினோராம் நூற்றாண்டாகவோ இருக்கலாம்."

ஒரு காலத்தில் கழுகுமலை ஜைனர்களின் முக்கியமான வாசஸ்தலங்களில் ஒன்றாக இருந்திருக்க வேண்டுமென்றே கருதப்படுகிறது. இவ்விதமாக 10-ம் நூற்றாண்டுவரையிலும் கழுகுமலை ஊரைப்பற்றிய வரலாறு தெரிகிறது.

---

*See "A Short History of Tinnevelly District" by V. S. Padmanabha Ayyar of Vilathikulam, printed in 1933.

ஆனால், அங்குள்ள முருகன் கோவில், ஊரைப்போல அவ்வளவு புராதனமானதாகத் தெரியவில்லை. அருணகிரி நாதர் கழுகுமலை முருகனைத் துதித்துப் பாடியிருக்கிறார். அதற்குமுன் இந்தக் கோவிலைப் பற்றி இயற்றப்பட்டதாக யாதொரு பாடலும் அகப்படவில்லை. அருணகிரி நாதருக்குப் பின் பலரும் பல சிறு பிரபந்தங்கள் இயற்றியிருக்கின்றனர். அவற்றுள் ஒன்று திருப்புகழ் முருகதாச சுவாமிகள் என்பவரும், 1892-ல் காலமானவருமான தண்டபாணி சுவாமிகளின் மாணுக்கா ராமகிருஷ்ண பிள்ளை இயற்றிய 'கழுகாசலப் பிரபந்தங்கள்'. ராமகிருஷ்ண பிள்ளை கழுகுமலை ஊரினர். இவருடைய பிரபந்தங்கள் அச்சிடப்பட வில்லை. கையெழுத்துப் பிரதிகளில், ஆசிரியர் 'முதலாவது புத்தகம்' என்று தலைப்புக் கொடுத்துள்ள ஒரு பிரதியை மட்டுமே நான் பார்த்தேன். அருணகிரிநாதரின் திருப்புகழைப்போல இவர் இயற்றிய திருப்புகழ்ப் பாட்டுக்கள் மொத்தம் 122 இந்தப் பிரதியில் அடங்கியிருந்தன. இவற்றிற்கு ஆசிரியர் 'சந்தப் புகழ்' என்று பெயர் கொடுத்திருக்கிறார்.

'கழுகுமலைத் திரிபந்தாதி' என்னும் நூலை அண்ணுமலை ரெட்டியாரின் ஆசிரியரும் நண்பருமான மீனுட்சி சுந்தரக் கவிராயரும், 'கழுகுமலைப் பிள்ளைத் தமிழ்' என்ற நூலை சிதம்பரக் கவிராயரும், 'கழுகுமலைக் கும்மி'யை ஐயநேரி சீனி ஆச்சாரியும் இயற்றியிருக்கிறார்கள்.

எட்டயபுரம் கடிகை நமசிவாயப் புலவர் கழுகுமலை முருகனைத் தலைவனுகக் கொண்டு 'வல்லிபரதம்' என்ற ஒரு நாடகம் இயற்றியிருக்கிறார். சிறந்த இசைப்பாடல்களைக் கொண்ட அந்த நாடகம் 1880-ல் அச்சிடப்பெற்றிருக்கிறது. எட்டயபுரம் கடிகை முத்துசாமிப் புலவரின் மாணுக்கரும், கந்தசாமிக் கவிஞரின் புதல்வருமான முத்து வீரக்கவிஞர் 'வள்ளியம்மை நாடக'த்தை இயற்றியுள்ளார். இது 1902-ல் அச்சாகியிருக்கிறது. இவைபோக, பற்பல புலவர்களால் பாடப்பட்ட தனிப்பாடல்களும், செவக்குளம் கந்தசாமிக் கவிராயர், முத்துசாமி தீக்ஷிதர் முதலியவர்களால் இயற்றப்பட்ட கீர்த்தனைகளும் உண்டு. அவற்றுள் சில அச்சாகியிருக்கின்றன.

கழுகுமலைக் கோவிலில் வைகாசி விசாகத்தன்று நடக்கும் உற்சவம், பிரதான உற்சவங்களில் ஒன்றாகும். வைகாசி விசாகத்துக்குத்தான் அங்கே காவடிகள் வரும். இந்தக் காவடிச் சிந்தில் முருகனை "விசாகன்'' என்றும் அண்ணாமலை ரெட்டியார் குறிப்பிட்டிருக்கிறார்.

## இந்த நூல்

பிழையில்லாத அச்சுப் பிரதியாக இன்று காவடிச் சிந்துப் புத்தகம் கிடைப்பது அரிதாகப் போய்விட்டது. இலக்கிய ஆர்வம் கொண்டவர்கள் விரும்பித் தேடினாலும் சுத்தமான பதிப்புக் கிடைப்பதில்லை. அநேகர் காவடிச் சிந்து ஓர் இலக்கிய நூல் என்பதையே மறந்துவிட்டார்கள். ஒரு காலத்தில் காவடி எடுக்கும்போது மட்டுமன்றி, பாட்டுக் கச்சேரி, நாட்டியம், நாடகம், பஜனை, நலங்கு முதலிய பல நிகழ்ச்சிகளிலும் இந்தச் சிந்துகள் முழங்கிக் கொண்டிருந்தன. ஆனால், இன்று இவற்றைப் பாடும் வழக்கம் அநேகமாக நின்றுவிட்டது. பழைய கிராமபோன் இசைத்தட்டுக்கள் வாயிலாகவும் ஏகதேசமாக ரேடியோ வாயிலாகவுமே காவடிச் சிந்தின் இசை அழகைக் கேட்டு அனுபவிக்க முடிகிறது. இயல்தமிழ்ச் செல்வர்களும், இசைத்தமிழ்ச் செல்வர்களும் அநேகமாக மறந்துவிட்ட காவடிச் சிந்து நூலைச் சுத்தமான முறையில் அச்சிட்டு வெளியிட வேண்டும் என்று சுமார் ஆறு வருஷங்களுக்குமுன் தீர்மானித்தேன். உடனே பல கிராமங்களுக்கும் சென்று அண்ணாமலை ரெட்டியாரைப் பற்றியும் காவடிச்சிந்துகளைப் பற்றியும் குறிப்புக்கள் சேகரிக்கத் தொடங்கினேன். காவடிப்பாட்டுப் பாடுகிறவர்களைச் சந்தித்துடன் அவர்கள் ஞாபகத்திலுள்ள சிந்துகளைப் பாடச் சொல்லிக் கேட்டேன். அச்சுப் பிரதிகளிலிருந்து வேறுபடக்கூடிய பாடங்களைக் குறித்து வைத்துக் கொண்டேன். கோவில்பட்டித் தாலுகாவில் குருமலையை அடுத்துள்ள கிராமம் ஒன்றில் ஓர் ஏட்டுப் பிரதி இருந்தது. அந்த ஏட்டுப் பிரதி வைத்திருந்தவர் தம் வீட்டிலேயே அமர்ந்து ஏடுகளைப் படித்துப் பார்ப்பதற்கு மட்டுமே எனக்கு அனுமதியளித்தார்.

அங்கேயே உட்கார்ந்து படித்து, சில பாடபேதங்களைக் குறித்துக் கொண்டேன். நான் பார்த்த ஓலை ஏட்டுப் பிரதி இது ஒன்றுதான். இதில் காணப்பட்ட ஒரு சிந்து தான் இந்தப் புத்தகத்தின் கடைசியில் காணப்படுவதும் "கந்தம் சேர்தரு பொழில்" என்று தொடங்குவதுமான சிந்து. அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்துகளும் மற்றோரின் காவடிச் சிந்துகளும் அடங்கிய அந்த ஏட்டுப் பிரதியில் 'அண்ணாமலை' என்ற சொல் விரவிவரும் இந்தச் சிந்தும் காணப்பட்டதால், இதை அண்ணாமலை ரெட்டியாரின் சிந்து என்றே தாம் கருதியிருப்பதாக ஏட்டுப் பிரதியின் சொந்தக்காரர் சொன்னார். அது உண்மை யானால் 'அண்ணாமலை' என்னும் சொல் ரெட்டியாரின் முத்திரையாகவே இருக்க வேண்டும். இந்தச் சிந்து ரெட்டியார் பாடியதுதானா இல்லையா என்பது குறித்து இப்பொழுது நம்மால் திட்டமாக எதுவும் கூற இயலவில்லை. சந்தேக நிலையில் இருந்தாலும், ஏட்டுப் பிரதிக்காரரின் அபிப்பிராயத்தையும், 'அண்ணாமலை' என்ற 'முத்திரை' யையும், அந்தச் சிந்து கழுகுமலை முருகனைப் பற்றியதாக இருப்பதையும் உத்தேசித்து அதைப் புத்தகத்தின் இறுதியில் சேர்த்திருக்கிறேன். இந்தச் சிந்தின் தலைப்பு பாட்டின் பொருளை நோக்கி என்னால் கொடுக்கப்பட்டதே.

இதே நூலில் 23-வது சிந்தாக உள்ளதும், "அங்கத்தில் பசப்பாச்சே" என்று தொடங்குவதுமான சிந்து இது வரையிலும் வெளி வந்துள்ள காவடிச் சிந்து நூல்களில் காணப்படவில்லை. கழுகுமலையை அடுத்துள்ள குருவிகுளம் ஊரினரான குருபரன் கவிராயர் என்பவரிடம் இந்தச் சிந்தை முதன்முதலில் கேட்டறிந்தேன். அவர் தம் ஞாபகத்திலிருந்தே இதை எழுதிக் கொடுத்தார். அதன் பின், "சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் நினைவு மலர்" என்னும் ஒரு சிறு பிரசுரம் கிடைத்தது. அது சென்னிகுளம் கிராமத்தில் 4-2-1943-ல் அண்ணாமலை ரெட்டியார் தினம் கொண்டாடப்பட்டபோது வெளியிடப் பெற்ற மலராகும். அதைப் பதிப்பித்தவர் சென்னிகுளம் வாசியும், ரெட்டியாரின் ஞாபகார்த்தமாக விளங்கும் ஸ்ரீ அண்ணாமலை ஆரம்பப் பாடசாலையின் மானேஜரு

மான ஸ்ரீ ஆர். சென்னப்ப ரெட்டியார். விழாவில் ரெட்டியாரின் நண்பரான ஸ்ரீ வெ. ப. சுப்பிரமணிய முதலியார், ஸ்ரீ தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் முதலியோர் பங்கெடுத்துக்கொண்டனர். மேற்கண்ட மலரில் ''அச் சேருத பாடல்'' என்ற தலைப்பின் கீழ், ''அங்கத்தில் பசப் பாச்சே'' என்னும் இந்தச் சிந்து வெளியிடப்பட்டிருந்தது. ஆனால், குருபரன் கவிராயர் எழுதிக் கொடுத்த சிந்துக்கும் இதற்கும் சில பாடபேதங்கள் இருந்தன. அத்துடன் மலரில் வெளியிடப்பட்ட சிந்தில் ''சாமம் நாலினும் பிரியான்'' என் றும் ''காமம் மீறுதென் றழுவான்'' என்றும் தொடங்கும் இரண்டு கண்ணிகள் காணப்படவில்லை. குருபரன் கவி ராயர் கொடுத்த பாடத்தையும் மலரில் கண்ட பாடத்தை யும் ஒப்பு நோக்கி இங்கே வெளியிட்டிருக்கிறேன். பாட பேதங்களை அடிக்குறிப்பில் கொடுத்திருக்கிறேன்.

மேலே குறிப்பிட்ட இரண்டு சிந்துகளைத் தவிர மற்ற 22 சிந்துகளும் ஏற்கெனவே அச்சில் வெளிவந்திருக்கின் றன. ரெட்டியாரின் காலத்திலேயே முதல் பதிப்பாகக் காவடிச் சிந்து அச்சாகியிருக்கிறது. அச்சிடுவதற்குப் பொருளுதவி செய்தவர் ஊற்றுமலை ஜமீன்தார் இருதயா லய மருதப்பத் தேவர். அச்சிடப் பெற்றது திருநெல் வேலி நெல்லையப்பக் கவிராஜர் நிறுவிய அச்சுக் கூடத்தில். இந்த விவரங்களை உள்ளடக்கி ரெட்டியார் ஐந்து விருத்தங் கள் பாடியிருக்கிறார். அவை ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டில் 329, 330, 331, 332, 333-ம் பாடல்களாகக் காணப் படுகின்றன.

இன்று அகப்படும் அச்சுப் பிரதிகளில் வேண்டு மென்றே திருத்தப்பட்டவையாகக் காணப்படும் பகுதிகளை ஒதுக்கிவிட்டு, மீதிப் பகுதிகளில் பொருள் முடிவு உள்ள வையும் பிரதிக்குப் பிரதி வேறுபடுபவையுமான பாடங்களை மட்டும் அடிக்குறிப்பில் கொடுத்திருக்கிறேன். 1, 2, 3 என்று பாடபேதக் குறிப்புக்களுக்காகச் சிந்தின் நடுவே இலக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இலக்கத்தின் வலது புறத்திலுள்ள சொல்லுக்கோ, சொல்-தொடருக்கோ தான் கீழே பாடபேதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன

பொருள் எளிதில் விளங்குவதற்காகச் சிந்துகளைச் சந்தி பிரித்து வெளியிட்டிருக்கிறேன். சந்தத்தின் அமைப்பையோ அழகையோ கெடுத்துவிடக்கூடும் என்று தோன்றும் இடங்களில் மட்டும் சந்திபிரிக்காமல் அப்படியே வெளியிட்டிருக்கிறேன். ஏடு கொடுத்தும், காவடிச் சிந்துகளைப் பாடிக் காண்பித்தும், அண்ணாமலை ரெட்டியாரைப் பற்றிய தகவல்களைத் தெரிவித்தும் உதவிய எல்லோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். என் சிற்றறிவாலும் கவனக் குறைவாலும் இந் நூலில் எங்காவது பிழைகள் காணப்பட்டால் அவற்றை எடுத்துக் காட்டும்படி அறிஞர்களைப் பெரிதும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சென்னை,<br>13-11-50

கு. அழகிரிசாமி

# காவடிச் சிந்து

## 1. விநாயகர் துதி

திருவுற் றிலகுகங்க வரையில் புகழ்மிகுந்து
　　திகழத் தினம்உறைந்த வாசனை,—மிகு
　　மகிமைச் சுகிர்ததொண்டர் நேசனை,—பல
　தீயபாதக காரராகிய சூரர்யாவரும் மாளவேசெய்து
　　சிகரக் கிரிபிளந்த வேலனை,—உமை
　　தகரக் குழல்கொள்வஞ்சி பாலனை,

மருவுற் றிணர்விரிந்து மதுபக் குலம்முழங்க
　　மதுமொய்த் திழிகடம்ப ஆரனை,—விக-
　　சிதசித்ர சிகிஉந்து வீரனை,—எழில்
　மாகநாககு மாரியாகிய மாதிேனாடுகி ராதநாயகி
　　மருவப் புளகரும்பு தோளனை,—எனை
　　அருமைப் பணிகொளுந்த யாளனை,

தெரிதற் கரியமந்தி ரமதைத் தனதுதந்தை
　　செவியில் புகமொழிந்த வாயனை,—இள
　　ரவியில் கதிர்சிறந்த காயனை,—அகல்

---

கங்கவரை - கழுகுமலை. சுகிர்த-சன்மார்க்கம் கைக்கொண்ட. சிகரக்கிரி - சிகரம் உள்ள மலை. உமை - உமாதேவி. தகரக் குழல் கொள் வஞ்சி-தகரம் எனப்படும் ஒருவகை மயிர்ச்சாந்து தடவிய கூந்தலுடையவளும் வஞ்சிக்கொடிபோன்றவளுமான பெண்; (இங்கே பார்வதி). மரு- வர்சம். இணர் -பூங்கொத்து. மதுபக்குலம் - வண்டுகளின் கூட்டம். மது -தேன். இழி - வழி கின்ற. கடம்ப ஆரன் - கடப்பம் பூ மாலை அணிந்தவன். விகசித சித்ரசிகி உந்து-பிரகாசிக்கின்ற அழகிய மயில் வாகனத்தில் ஏறிச் செல்லுகின்ற. எழில் - அழகிய. மாக நாக குமாரி - தேவருலகத்துக் குமாரி; தெய்வானை. கிராத நாயகி - வேடர் தலைவி; வள்ளி மருவப் புளகரும்பு - தழுவியதும் புளகாங்கிதம் அடையும். தோளனை - தோளை உடையவனை. தெரிதற்கரிய மந்திரமதை-தெரிந்துகொள்ளுதற்கு அரியதாக உள்ள பிரணவ மந்திரத்தை. இளரவியில் கதிர் சிறந்த காயனை - பாலசூரியனை விடப் பிரகாசம் உள்ள திருமேனி உடையவனை.

தேவநாடுகெ டாதுநீடிய சேனைகாவல னாகவேவரு
திறலுற்ற சிவகந்த நாதனை,—விரி
*மரையத் தொளிருகின்ற பாதனை,
மருளற் றிடகினைந்து மனதிற் களிசிறந்து
மதுரக் கனிவுவந்து கூடவே,—பல
விதமுற் றிலகுசிந்து பாடவே,—விரி
வாரிநீரினை வாரிமேல்வரு மாரிநேர்தரு மாமதாசல
வதனப் பரன்இரண்டு தாளையே—நயம்
உதவப் பணிவம்இந்த வேளையே.

## 2. முருகன் துதி

சீர்வளர் பசுந்தோகை மயிலான்,—வள்ளி
செவ்விதழ் அலாதினிய தெள்ளமுதும் அயிலான்,
போர்வள்ர் தடங்கைஉறும் அயிலான்—விமல
பொன்னடியை இன்னலற உன்னுதல்செய் வாமே.
குஞ்சர வணங்குஆவல் வீடா—தபடி
கொஞ்சிமரு வும்சரச ரஞ்சிதவி சேடா!

---

(பா—ம்) *மறை

திறல் - சக்தி. விரிமரையத்து ஒளிருகின்ற பாதனை - மலர்ந்த தாமரைப்பூவைப் போல் பிரகாசித்துக்கொண்டிருக்கும் திருப் பாதங்களையுடையவனை.

மருள் - (மன)மயக்கம். மதுரக் கனிவு - இனிமை ஏறிய முதிர்ச்சி. வாரி நீர்-சமுத்திர நீர். வாரி - அள்ளி. மாரி நேர்தரு - மழைபோல் பொழியும். மதாசல வதனப் பரன் - மதம் பொழியும் மலைபோன்ற யானைமுகம் உள்ள கடவுள் தாளையே -திருப் பாதங்களையே. பணிவம் - வணங்குவோம்.

அயிலான் - சாப்பிட மாட்டான். தடங்கை - பெரிய கை. தடங்கை உறும் அயிலான் - கையிலே பொருந்திய வேலை உடையவன். குஞ்சர அணங்கு - தெய்வானை. ஆவல் வீடாத படி - ஆசை அழியாதபடி. சரச ரஞ்சித விசேடா - வேடிக்கை விளையாட்டுக்களோடு இன்பம் தரும் சிறப்பியல்புடையவனே.

*பைஞ்சர வணம்காவல் வீடா—வளரும்*
*பாலன்என மாலையொடு காலைநினை வாமே.*

*வல்அவுணர் வழியாதும் விட்டு,—வெருள*
*வன்சமர்செய் கந்தனிடம் வழியடிமைப் பட்டு,*
*நல்லஉணர் வழியாது மட்டு—மிஞ்சு*
*ஞானபர மானந்த மோனம்அடை வாமே.*

*ஒருதந்த மாதங்க முகத்தான்,—மகிழ*
*உத்தம கனிட்டன்என உற்றிடு மகத்தான்,*
*வருதந்த மாதங்க முகத்தான்—எவரும்*
*வாழ்த்துகுக நாயகனை ஏத்துதல்செய் வாமே.*

---

சரவணம் - சரவணப் பொய்கை. காவல் வீடா - காவல் உடைய வீடாக.

வல்அவுணர் - வலிமை பொருந்திய அரக்கர்கள். வன்சமர் - கடும்போர். ஒரு தந்த மாதங்க முகத்தான் - ஒற்றைக் கொம்புள்ள யானை முகத்தையுடைய விநாயகர். கனிட்டன் - பின்றோன்; தம்பி. மகத்தான் - பெருமையை யுடையவன். வருதந்த மாதங்க முகத்தான் - வந்து சேர்ந்த மாதை (பார்வதியை) சரீரத்தில் ஒரு பகுதியாக ஏற்றுக் கொண்டவன் என்று பொருள் கூறி, அப்படி ஏற்றுக் கொண்ட சிவன் முதல் யாவரும் வாழ்த்துகின்ற குகநாயகனை ஏத்துதல் செய்வோம் என்று முடிக்கலாம். கல்குளம் குப்புசாமி முதலியார் பி. ஏ. பதிப்பித்த காவடிச் சிந்தில் (1902) 'ஒரு தந்த மாதங்க முகத்தான்' என்று தொடங்கும் இக்கண்ணியின் 3-ம் அடிக்கு அவர் தந்துள்ள உரைக் குறிப்பால் (ஆதங்கம் - துன்பம்) 'வருதந்தம் ஆதங்க முகத்தான்' என்று பிரித்தல் வேண்டும் என்பது அவர் கருத்தாதல் தெளிவாம். இதற்கு, 'சம்பவித்த தத்தமக் குரிய துன்பம் காரணமாக' என்று பொருள். இறைவன் நினைவு துன்பக் காலத்தே அதிகமாகத் தோன்றும் என்பதை முன்னோர் வாக்குகளால் உணரலாம். ஔவையார், 'நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின், ஈசன் கழலருமை வெவ்வினையில் காண்மின்' எனப் பாடியுள்ளமை இங்கு ஒப்பிடத் தக்கது. ஆதங்கம் என்பதற்கு நோய் என்றும் அச்சம் என்றும் பொருளுண்டு. இவையும் இவ்விடத்திற்குப் பொருத்தமானவையே.

## 3. கழுகுமலை நகர்

*தெள்ளுதமி ழுக்குதவு சீலன்,—துதி*
*செப்பணும லைக்கும்அனு கூலன்—வளர்*
*செழிய புகழ்விளைத்த கழுகு மலைவளத்தை*
*தேனே! சொல்லு வேனே.*

*வெள்ளிமலை யொத்தபல மேடை,—முடி*
*மீதினிலே கட்டுகொடி யாடை,—அந்த*
*வெய்யவன் நடத்திவரு துய்யஇர தப்பரியும்*
*விலகும் படி இலகும்.*

*வீதிதொறும் ஆதிமறை வேதம்,—சிவ*
*வேதியர்கள் ஓதுசாம கீதம்—அதை*
*மின்னுமலர்க் காவதனில் துன்னுமடப் பூவையுடன்*
*விள்ளும், கிள்ளைப் புள்ளும்.*

[1]*சீதள முகிற்குவமை கூறும்—நிறச்*
*சிந்துரங்கள் சிந்துமதத் தாறும்,—உயிர்ச்*
*சித்திரம் நிகர்த்தமின்னார் குத்துமுலைக் குங்குமச்செஞ்*
*சேறும் [2]காதம் நாறும்.*

---

மேடை - வீட்டு மாடி. வெய்யவன் - சூரியன். சூரியன் நடத்தி வரும் தேரை வழி மறிக்கின்றன வீட்டு மாடிகளில் கட்டிய கொடிகள். அதனால் சூரியனுடைய ரதம் விலகும்படி நேருகிறது. கழுகுமலையில் உயரமான மாடிவீடுகள் உண்டு என்று சொல்ல வந்தவர் இவ்வாறு சிறப்பித்துக் கூறுகிறார்.
சாமகீதம் - சாமவேத இசைப்பாடல். மலர்க்கா - மலர் பூத்திருக்கும் சோலை. மடப்பூவை - அழகிய நாகணவாய்ப்புள் (மைனா). விள்ளும் - சொல்லும். கிள்ளைப்புள் - கிளி என்னும் பறவை. சீதளமுகில் - குளிர்ச்சியான மேகம். சிந்துரம் - யானை. மதத்தாறு - மத நீராகிய நதி. காதம்—சுமார் பத்து மைல் தூரம். நாறும் - மணக்கும்.

(பா—ம்) 1. பிழைகளுடன் பின் கண்டவாறு ஒரு பாடம் ஏட்டுப் பிரதியில் காணப்பட்டது.

சீதளக் கயக்கிடத் தாரும்—மிக்கச்
செம்மைதரு மும்மதமா யாறும்

2. மலர்.

சித்தகித்த மும்கணவ ரோடும்—காம
லீலையில் பிணங்கிமனம் வாடும்—கரு
நீலவிழி யார்வெறுத்த கோலமணி மாலைரத்னம்
நெருங்கும் எந்த மருங்கும்.

கத்துகட லொத்தகடை வீதி—முன்பு
கட்டுதர ளப்பந்தலின் சோதி—எங்கும்
காட்டுவதால் ஈரிரண்டு கோட்டுமத யானையிற்பல்
களிறும் நிறம் வெளிறும்.

முத்தமிழ்சேர் வித்வசனக் கூட்டம்—கலை
முற்றிலும் உணர்ந்திடும்கொண் டாட்டம்—நெஞ்சில்
முன்னுகின்ற போதுதொறும் தென்மலையில் மேவுகுறு
முனிக்கும் அச்சம் சனிக்கும்.

எத்திசையும் போற்றமரர் ஊரும்,—அதில்
இந்திரன் கொலுவிருக்கும் சீரும்,—மெச்சும்
இந்தநக ரம்தனை அடைந்தவர்க் கதுவும்வெறுத்
திருக்கும்; அரு வருக்கும்.

துள்ளிஎழும் 'வெள்ளையலை அடங்கும்—படி
சுற்றிலும் வளைந்தஅகழ்க் கிடங்கும்,—பல

---

பிணங்கி - கோபித்து. மருங்கு - பக்கம். தரளப்பந்தர் - முத்துப் பந்தல். ஈரிரண்டு கோட்டு மத யானை - நான்கு கோடுள்ள, அதாவது நான்கு தந்தம் உள்ள மதயானை; வெள்ளை நிறமான ஐராதவதம். களிறு - ஆண் யானை. முத்துப் பந்தலின் சோதியால் யானைகள் நிறம் மாறி வெள்ளை நிறமான ஐராவதம் போல் காட்சியளிக்கின்றன.

முத்தமிழ் - இயல், இசை, நாடகம். வித்வ சனக் கூட்டம்-புலவர் கூட்டம். முன்னுகின்ற போது தொறும் - நினைக்கும் போதெல்லாம். தென்மலை - பொதிகைமலை. குறுமுனி - அகத்தியர். அச்சம் சனிக்கும் - பயம் பிறக்கும். அமரர் ஊர் - அமராவதி; தேவேந்திர பட்டணம். கழுகுமலையைப் பார்த்தவர்களுக்குத் தேவேந்திர பட்டணமும் வெறுத்துப் போய்விடும்; அருவருப்பைக் கொடுக்கவும் ஆரம்பித்துவிடும்.

*சொன்னமலை போல்மதிலும் மின்னுவதி ஞலேபுகழ்*
*தோன்றும் லோகம் மூன்றும்.*

*கள்ளவிழ் கடப்பமலர் வாகன்,—குறக்*
*கன்னியை அணைக்கும்அதி மோகன்—வளர்*
*கழுகுமலை நகரின்வள முழுமையும்என் நாவில்அடங்-*
*காதே! மட மாதே!*

## 4. கோயில் வளம்

*சென்னி குளநகர் வாசன்,—தமிழ்*
*தேறும் அண்ணுமலை தாசன்—செப்பும்*
*செகமெச்சிய மதுரக்கவி யதனைப்புய வரையில்புனை*
*தீரன்; அயில் வீரன்.*

*வன்ன மயில்முரு கேசன்,—குற*
*வள்ளி பதம்பணி நேசன்—உரை*
*வரமேதரு கழுகாசல பதிகோயிலின் வளம்நான் மற-*
*வாதே சொல்வன் மாதே!*

*கோபுரத் துத்தங்கத் தூவி,—தேவர்*
*கோபுரத் துக்கப்பால் மேவி,—கண்கள்*
*கூசப்பிர காசத்தொளி மாசற்று விலாசத்தொடு*
*குலவும் புவி பலவும்.*

---

சொன்னமலை - ஸ்வர்ணமலை; மேருமலை. கள்ளவிழ் - தேன் வெளிப்படுகின்ற. வாகன் - அழகன், தோளை உடையவன்.
(பா—ம்) 1. வெள்ளிமலை

செகம் - உலகம். புயவரையில் புனை-(மாலையைப்போல) புஜம் என்ற மலையில் சூடிக்கொள்ளும். வன்னம் - வர்ணம். பதம் - பாதம். கழுகாசலபதி-கழுகுமலைத் தலைவனுன முருகன். தங்கத் தூவி - தங்கஸ்தூபி. தேவர் கோ புரம் - தேவராஜனுகிய இந்திரனுடைய ஊர். மேவி - மேலே சென்று. விலாசம் - அழகு.

*நூபுரத் துத்தொனி வெடிக்கும்—பத*
*நுண்ணிடை மாதர்கள் நடிக்கும்—அங்கே*
*நுழைவாரிடு முழவோசைகள் திசைமாசுணம்*
*இடியோஎன*
*நோக்கும் படி தாக்கும்.*

*சந்நிதி யில்*[1] *துஜஸ் தம்பம்,—விண்ணில்*
*தாவி வருகின்ற கும்பம்—எனும்*
[2]*சலராசியை வடிவார்பல கொடிசூடிய முடிமீதிலே*
*தாங்கும்; உயர்ந் தோங்கும்.*

*உன்னத மாகிய இஞ்சி,—பொன்னாட்டு*
*உம்பர் நகருக்கு மிஞ்சி—மிக*
*உயர்வானது பெறலால், அதில் அதிசீதள புயல்சாலவும்*
*உறங்கும்; மின்னிக் கறங்கும்.*

*அருணகிரி நாவில் பழக்கம்—தரும்*
*அந்தத் திருப்புகழ் முழக்கம்,—பல*

---

நூபுரம் - சிலம்பு. நடிக்கும் - நடனமிடும். முழவோசைகள் - மத்தள ஓசைகள். திசை மாசுணம் - எட்டுத்திக்குகளிலுள்ள பாம்புகள். அவையாவன: வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன். பெண்கள் காலில் அணிந்துள்ள நூபுரங்கள் உரத்துச் சப்திக்கும்படியாக நாட்டியமாடுகிறார்கள். அங்கே தோல்வாரினால் கட்டிய மத்தள ஓசைகள் இடிபோல் முழங்குகின்றன. இதைக் கேட்டு இடிதானோ என்று எட்டுத்திக்குப்பாம்புகளும் பயந்து பார்க்கும்படி நேருகிறது. துஜஸ்தம்பம் - துவஜ ஸ்தம்பம்; வாசலில் நிறுத்தப்பட்டிருக்கும் கொடியேற்றுவதற்கான கொடிமரம். சலராசி - நீர்த்திரள். வடிவார் - அழகு நிறைந்த.

(பா—ம்) 1. துஜத் தம்பம், துயல் தம்பம்.
2. சரராசியை.

இஞ்சி - கோட்டைச் சுவர். உம்பர் - தேவர்கள். அதிசீதள - மிகவும் குளிர்ந்த. புயல் - மேகம். கறங்கும் - சுழலும். அமராவதி - தேவேந்திர பட்டணம். திருப்புகழ் - முருகனைப் புகழ்ந்து அருணகிரிநாதர் பாடிய பக்திப்பாடல்களின் தொகுதி.

அடியார்கணம் மொழிபோதினில் அமராவதி
இமையோர்செவி
அடைக்கும்; அண்டம் உடைக்கும்.
கருணை முருகனைப் போற்றித்—தங்கக்
காவடி தோளின்மேல் ஏற்றிக்—கொழும்
கனல்ஏறிய மெழுகாய்வரு பவர்ஏவரும் இகமேகதி
காண்பார்; இன்பம் பூண்பார்.

## 5. கழுகுமலை வளம்

பொன்னுலவு சென்னிகுள நன்னகர்அண் ணுமலைதன்
புந்தியில் மகிழ்ந்துநித்தம் நின்றவன்—முந்தி
வெந்திறல் அரக்கர்களை வென்றவன்—மயில்
[1]போலஏனலின் மீதுலாவுகி ராதமாதுமுன் ஏகியே,
" அடி
பூவையே! உனதுதஞ்சம்" என்றவன்—அவள்
ஈயும்மாவினையும்மென்று தின்றவன்.

மின்னுலவு சொன்னமுடி சென்னியணி விண்ணவர்தே-
வேந்திரனும் சித்தர்களும் துன்னியே,—கதி
வேண்டியே அகத்தில்அன்பு மன்னியே—பணி
வேலவன்கிரு பாகரன்குகன் மேவிடும்கழு காசலம்தனில்
மிஞ்சிய வளங்களைநான் உன்னியே—சொல்ல,
ரஞ்சிதமாக் கேளடிவிற் பன்னியே!

---

கனல் ஏறிய மெழுகாய் வருபவர் ஏவரும் இகமே கதி காண்பார் - நெருப்பிலிட்ட மெழுகு போல் (பக்தியினால்) உருகி வருகிறவர்கள் யாவரும் இந்த மண்ணுலக வாழ்க்கையிலேயே கதி மோக்ஷத்தை அடைவார்கள்.

புந்தி - புத்தி. ஏனல் - தினை. மா - தினைமா. சொன்னமுடி - ஸ்வர்ணமுடி; தங்கக் கிரீடம். சென்னியணி - தலையில் அணியும். துன்னியே - நெருங்கியே. மன்னியே - நிரம்பியே. உன்னியே - எண்ணியே. விற்பன்னியே - கெட்டிக்காரியே.

(பா—ம்) 1. போன ஏனலின்.

மூசுவண்டு வாசமண்டு காவில்மொண்டு தேனை உண்டு
மோகன முகாரிராகம் பாடுமே;—மைய-
லாகவே [1]பெடையுடனே கூடுமே.—அலை
மோதுவாரிதி நீரைவாரிவிண் மீதுலாவிய சீதளாகர
முகில்பெருஞ் சிகரமுற்றும் மூடுமே;—கண்டு
மயிலினம் சிறகைவிரித் தாடுமே.

தேசுகொண்ட பாரதந்த வீரதும்பி ராசிஅண்டர்
தேவதாரு வைக்கரத்தால் பிடிக்குமே;—சுற்றும்
மேவிய கிளையைவளைத் தொடிக்குமே.—ஒளிர்
சேயசந்திர னோடுரிஞ்சுப லாமரங்களி லேநெருங்கிய
தீங்கனி,ம துரசத்தை வடிக்குமே,—மந்தி
பாங்கில்நின் றதனையள்ளிக் குடிக்குமே.

அந்தரம் உருவிவளர்ந் திந்திரன் உலகுகடந்-
தப்புறம்போய் நின்றசையும் சந்தன—மரம்,
தப்பிதமி லாதுகையால் வந்தனம்—எங்கள்
ஆறுமாமுக நாதனுக்கிடு மாறுபோல,'விசாலமுற்றகொம்-
பத்தனையும் நின்றுதலை சாய்க்குமே;—அண்டப்
பித்திகை தனிலும்சென்று தேய்க்குமே.

---

மூசுவண்டு - மொய்க்கும் வண்டு. வாசமண்டு - வாசனை நிறைந்த. பெடை - பெண் (வண்டு.) வாரிதி கடல். தேசு - பிரகாசம். பாரதந்த - பெரிய தந்தங்கள் உள்ள. தும்பி-யானை. ராசி - கூட்டம். அண்டர் - வானோர். தேவதாரு - தேவதரு; தெய்வலோகத்து மரம்; கற்பக விருக்ஷம். சேய சந்திரன் - தூரத்திலுள்ள நிலா. உரிஞ்சு-உரசுகின்ற. மந்தி - பெண்குரங்கு. பாங்கில் - பக்கத்தில்.

(பா—ம்) 1. பேடையுடனே

அந்தரம் - ஆகாயம். கொம்பத்தனையும் - எல்லா மரக்கிளைகளும். அண்டப்பித்திகை - பூலோகத்தைச் சுற்றி உள்ளதாகக் கருதப் படும் சுவர். இதுவே அண்டகடாகம் எனப்படும்.

*கந்தரம் தொறும்கிடந்து கந்தரம் பயந்தொதுங்கக்*
*கர்ச்சனை புரியும்திறல் சிங்கமே;—நெஞ்சில்*
*அச்சமுற விண்ணுறைமா தங்கமே—தடங்*
*காவிலேசில தாவிலேவளர் மாவிருல்நடு வேகிராதர்கள்*
*கார்முகம் [1]எயும்கணைகள் ஏறுமே;—அதில்*
*வார்மதுவால் வாரிஉவர் மாறுமே.*

*காலவடி வேல்,நெடிய வாள்,கொடிய நாகம்உமிழ்*
*காரி,பிணை, வாரி,கணை, பானலே—அன்ன*
*கூர்நயன வேடமின்னர் ஏனலே—காக்கும்*
*காலேமேலெறி போதுவார்கவ ணோடுமாமணி தேசு வீசவே*
*கதிரவன் தனதுமுகம் சுழிக்குமே;—அவன்*
*குதிரையும்கண் ணைச்சுருக்கி விழிக்குமே.*

*ஓலமலி கோலநீல வேலேசூழும் ஞாலமீதில்*
*உற்றவர்இன் பத்துடனே வானமே—செல்ல*
*வைத்தபல சித்திரசோ பானமே—என்ன*

---

கந்தரம் தொறும்-குகைகள் தோறும். கந்தரம்-மேகம் போன்ற யானை. விண்ணுறை மாதங்கம் - தெய்வலோகத்தில் வசிக்கும் யானை; ஐராவதம். தடங்கா -விசாலமான வனம். தாவிலே - ஒதுக்கிடத்திலே. மாஇருல் - பெரிய தேன் கூடு. கார்முகம்-வில். எயும் - எய்யும். கணைகள்-அம்புகள். வார் மதுவால் - சிந்துகின்ற தேனுல். வாரி உவர்–சமுத்திரத்தின் உப்புச் சுவை.

(பா—ம்) 1. ஏயும்

காலவடிவேல் - சம்ஹாரம் செய்யும் வடிவேல். காரி - நஞ்சு. பிணை - மான். வாரி - கடல். கணை - அம்பு. பானல் - கருங் குவளைப் பூ. அன்ன - போன்ற. கூர்நயனம் - கூரியவிழிகள். காக்கும்காலே - காக்கும்போது. வார்கவண் - தோல் வாரினல் செய்த கல்லெறி கருவி. வேலே - கடல். ஞாலம் - உலகம். உற்றவர் - வசிப்பவர். சித்திர சோபானம் - அழகான படிகள்.

ஓங்குகோங்ககில் நாங்கிலாங்கலி பாங்குநீங்கரு
வேங்கைபூங்கழை
ஒன்றொடொன்று வம்புகொண்டு நீளுமே—கோள்கள்
சென்றுசென்று நின்றுநின்று மீளுமே.

## 6. வாவி வளம்

புள்ளிக் கலாபமயில் பாகன்;—சத்தி
புதல்வ ஞானகன யோகன்;—மலை
போலத் தான்திரண்ட கோலப் பன்னிரண்டு
வாகன்; நல்வி வேகன்.
வள்ளிக் கிசைந்தமுரு கேசன்;—அண்ணா-
மலைக்கவி ராசன்மகிழ் நேசன்—என்றும்
வாழுங் கழுகுமலை வாவிவளம் சொல்வேன்
மாதே! கேள் இப் போதே.

வெள்ளை நாரைகொத்தும் வேளை,—தப்பி
மேற்கொண்டு எழுந்துசின வாளை—கதி
மீறிப் பாயும்தொறும் சீறிச் சாயும்தென்னம்
பாளை யுடன் தாழை.

---

கோங்கு - கோங்கு மரம். அகில், நாங்கு - மரவகைகள். இலாங்கலி - தென்னை. பாங்கு - பக்கத்தில். வேங்கை-வேங்கை என்னும் மரம். கழை - மூங்கில். வம்பு கொண்டு - வம்பு பண்ணிக்கொண்டு; போட்டிபோட்டு. நீளுமே – உயரமாகுமே. கோள்கள் – கிரகங்கள். மீளுமே – திரும்பிவிடுமே.

கலாபம்-தோகை. சத்தி-சக்தி; பார்வதி. வாகன்-தோளை உடையவன் (வாகு-தோள்). வாவி - குளம். வாளை - வாளை மீன். தாழை - தென்னை மரம். வாளைமீன் பாய்ந்ததும், தென்னை மரமும் தென்னம் பாளையும் ஒருங்கே சாயும்.

தெள்ளும் பிள்ளையன்னப் பேடும் — இளம்
சேவ லானதுவும் ஊடும்; — பின்பு
தேமலர்த் தவிசில் காமம் முற்றவந்து
கூடும்; உற வாடும்.

மின்னிக் குலவிமதி மானும் — வரி
வெள்ளைப் பணிலராசி தானும், — மட
மின்னார் விழிகளென்ன மன்னு கெண்டைமுத்தம்
ஈனும் மட மானும்.

வன்னத் தாமரையைக் கண்டு — வாயில்
மதுர ராகம்பாடிக் கொண்டு — மதி
மயங்கிப் பேட்டினுடன் முயங்கியே கிடக்கும்
வண்டு, கள்ளை உண்டு.

அந்த ரத்துமின்போல் கூடிக், — கொங்கை-
யாலே நீந்திவிளை யாடிச், — செல்லும்
[1]அந்நல் லார்நடக்கும் நன்ன டைக்குருகி
அன்னம் செல்லும் பின்னம்.

மந்த மேதிஉள்ளே எட்டும் — சினை
[2]வராலும் மேலெழுந்து முட்டும் — போது
மடிசு ரந்துகன்று தனைநினைந்துகண்ட
மட்டும் பாலைக் கொட்டும்.

---

பிள்ளையன்னப்பேடு-யௌவனமான பெண் அன்னம். இளம் சேவல் - வாலிபமாக உள்ள ஆண் அன்னம். ஊடும் - பொய்ச் சண்டை போட்டுக் கோபித்துக் கொள்ளும். தேமலர்த் தவிசில் - தேனுள்ள மலராசனத்தில். மதிமானும் - சந்திரனை நிகர்க்கும். வெள்ளைப் பணில ராசி - வெண்சங்குக் கூட்டம். கெண்டை - கெண்டை மீன். முத்தம் - முத்து. முயங்கியே - கூடியே. கள்ளை — தேனை. அந்நல்லார் — அந்த அழகிய பெண்கள். உருகி — கிடைக்காதா என்று மனம் உருகி. பின்னம் — பின்னும். மேதி — எருமை. சினை — முட்டை. வரால் — வரால் மீன். மடி சுரந்து — மடியில் பால் சுரந்து. கண்டமட்டும் — ஒரேயடியாக; ஏராளமாக.

(பா—ம்) 1. அந்ந லார் நடக்கும். 2. வரிவ ராலெழுந்து முட்டும், வராலும் எழுந்துமே.

# 7. துதி

*மரகத விகசித ஒளிதவழ் இருசிறை*
*மருவிய மயில்மிசை அனுதினம் உறைதரு*
*வாசன், பவ நாசன்.*

*குரகத சுகமணி வளிரதம் நடவிய*
*குவலய சரதரன் எனும்மத னனும்மகிழ்*
*கோலன், பரை பாலன்.*

*பரிபுர அணிகல கலவென ஒலிபுரி*
*பரிதிஉ தயமதில் அவிழ்மரை மலர்நிகர்*
*பாதன், குக நாதன்.*

*திரிபுர மவைஒரு நொடிதனில் எரிகொடு*
*சிதைவுற நகைபுரி சிவன்மன மகிழ்உப-*
*தேசன், முரு கேசன்.*

*பதும நிதியொடு பணில நிதியும்எழில்*
*பரவிய சுரபியும் உறுசுர புரன்மகள்*
*பாகன், கன யோகன்.*

**சிறைமருவிய** – சிறகுகளையுடைய. **உறைதரு** – வீற்றிருக்கும். **பவநாசன்** – பாவத்தை நாசம் செய்யக் கூடியவன். **குரகதம்**– குதிரை. **சுகம்** – கிளி; மன்மதனுக்குக் கிளிதான் குதிரை. **மணிவளிரதம்**–அழகிய தென்றல் ரதம். **வளி**–காற்று. **குவலய சரதரன்** – குவளை மலரை அம்பாக உடையவன்; மன்மதன். **பரிபுரம்** – கால் சிலம்பு. **பரிதி உதயம்** –சூரியோதயம். **மரை** – தாமரை. **திரிபுர.....உபதேசன்** – சிரிப்பினால் ஒரே நொடியில் திரிபுரத்தை எரித்த சிவன் மகிழும்படி அவனுக்கு மந்திரத்தை உபதேசித்தவன்.

**பணில நிதி**–சங்கநிதி. சங்கநிதியும் பதுமநிதியும் இரண்டு பெருஞ் செல்வங்கள். **எழில் பரவிய சுரபி** – அழகு நிரம்பிய (காமதேனு என்னும்) பசு. **சுரபுரன்மகள்** – அமரர் ஊரினனாகிய இந்திரனின் மகள்; தெய்வானை. **பாகன்** – கணவன். **சததள நளின தவிசு மிசை வதி** –தாமரைப் பீடத்தின்மீது வசிக்கும். **சதுர் முகவிதி**- நான்கு முகங்களை உடைய பிரமன்.

*சததள நளினத விசுமிசை [1]வதிஒரு*
*[2]சதுர்முக விதிசிறை யதிலுற நிறுவுவி-*
*சாகன், தட வாகன்.*

*குரைதிரை வரைநிரை புரைதர உலவிய*
*குரவையின் [3]நடுவுற நிருதரை முடுகிய*
*கோபன், கமழ் நீபன்.*

*பரைசிவை பகவதி உதவிய சரவண-*
*பவன்அறு முககுகன் மிசைமது ரிதகவி*
*பாடும்; சுகம் நாடும்.*

## 8. துதி

*பவணக் கிரியதனுள் தானே*
*மன்னு வானே!—பல*
*பாழிலேஅலை யாமல்இன்புற*
*நாளுமேயருள் மேவுகண்கொடு*
*பாராய்! இன்னல் தீராய்!*

*அவுணப் பகையைமுடித் தோனே!*
*புண்ய வானே!—கதி*
*யாருமேதரு வாருமிங்கிலை*

---

விசாகன் – முருகன். தட ஆகன் – அகன்ற மார்பினன். ஒரு சமயம் பிரமனை முருகன் சிறையிலிட்டான் என்பது புராணக் கதை. குரைதிரை -சப்திக்கும் அலை. வரைநிரை–மலை வரிசை. புரைதர – போல. குரவை–கடல். நடுஉற – நடுவில் போய்ச் சேர. நிருதரை–அரக்கர்களை. நீபன் – கடப்பமாலை அணிந்தவன். பரை, சிவை, பகவதி – பார்வதியின் பெயர்கள். உதவிய –பெற்றெடுத்த பாடும்; சுகம் நாடும் – பாடுங்கள்; சுகத்தை நாடுங்கள.

(பா-ம்) 1. உறை ஒரு. 2. சதுமுக 3. நடுவுறை. பவணக்கிரி – கழுகுமலை. மன்னுவானே – நிலைபெற்றிருப்பவனே. அவுணப் பகை – அரக்கர் பகையை. கதி யாருமே தருவாரும் இங்கிலை – புகல் அளிப்பவர்கள் யாருமே இங்கு இல்லை.

யாதலால்அருள் வாய்,இனம்புரி-
யாதே பண்ணும் சூதே.

விரகப் பெருவிதனத் தாலே
மண்ணின் மேலே—மனம்
வீணிலேஉழ லாதுகந்தவி-
சாகனேபுரி, நீயும்வஞ்சம்என்
மீதே எண்ணி டாதே.

நரகச் சமன்வருமப் போதே,
பின்நில் லாதே. பல
நாளுமேமற வாதுநின்சிறு
பாதமாகிய சீதபங்கயம்
நானே உன்னி னேனே.

நிமலப் பெருமிதச்செவ் வேளே!
கன்னல் வேளே—தொடு
நீடுபாணம தால்மருண்டிடை
[1]வாடுமாதரி டங்கொடாவகை
நீயே [2]பண்ணு வாயே.

குமரிக் கதிகபரல் கானே
நண்ணி னோனே!—இகழ்

---

இனம் புரியாதே – இன்னும் செய்யாதே
விரகப் பெரு விதனம் –பிரிவு காரணமாக அடையும் பெரு வேதனை. நரகச் சமன் – நரகத்தின் எமன். சமன் - எமன். பின் நில்லாதே – தயங்கி நிற்கமாட்டான். சீத பங்கயம் - குளிர்ச்சி பொருந்திய தாமரை.
நிமல – நிர்மல; அழுக்கற்ற. செவ்வேள் – முருகன். கன்னல் வேள் – கரும்புவில் ஏந்திய மன்மதன். தொடு – தொடுக்கும். மருண்டு – பயந்து. குமரிக் கதிக பரல் கானே நண்ணினோனே – குமரிப் பெண்ணுக்காக (வள்ளிக்காக) அதிகப் பரற்கற்கள் நிறைந்த காட்டுக்குப் போனவனே.
(பா–ம்) 1. வாடுமாதரிடங் கெடாவகை, வாடுமாதர் குழாமகன்றிட. 2. எண்ணுவாயே.

கோதிலாதத போபலம்பெறு
நீதர்பால்அக லாதுறைந்தருள்
கோவே! என்னுள் வாவே!

கடல்சூற் றியஉலகப் பாலே
மின்னல் போலே—வரு
காயமாகிய தீயவன்பிணி
மேவியேதவி யாமல்அன்பொடு
காவே! என் ஐயாவே!

திடமற் றவனினுடைச் சேயே,
என்னை நீயே—திவ்ய
சேவையேசெயும் ஞானபண்டிதர்
[1]நாவினூடுஇனி தாவினைந்திடு
தேனே! பொன்னனே!

## 9. துதி

செந்தில் மாநகர்வாழ் கந்த நாதன் இரு
செய்யபாத கஞ்சமே—நமக்கு
உய்யமேவு தஞ்சமே—இன்று
செப்புவது கொஞ்சமே—கேட்கத்

---

கோதிலாத—குற்றமில்லாத. நீதர்—நீதமான உள்ளம் படைத்தவர். கோவே—அரசனே. வாவே—வருவாயே.

உலகப் பாலே—உலகின்பால்; உலகத்தில். காயமாகிய தீய வன்பிணி—உடம்பாகிய கெட்ட நோய். காவே—காப்பாற்றுவாயே. திடமற்றவ.....என்னை நீயே (திடமற்றவன் நினுடைச் சேயே, என் ஐ நீயே)-திடமில்லாதவன் (நான்) உன்னுடைய குழந்தை, நீ என்னுடைய தகப்பன். பொன்னனே—(பொன் அனே) பொன்னைப் போன்றவனே.

(பா—ம்) 1. நாவினூடுஇனி தாயுறைந்திடு.

செய்ய பாத கஞ்சமே—சிவந்த பாத தாமரையே. உய்யமேவு தஞ்சமே—உய்வதன் பொருட்டு மேவக்கூடிய புகலிடமே.

தீய பாதக¹வி ரோகம் மாயவிட்டுத்
திரும்பு வாயே நெஞ்சமே!

பந்த பாசம்இதை எந்த வேளையினும்
பார்க்கும்போது தொல்லையே—அல்லால்
ஆர்க்கும்ஆவது இல்லையே—ஒரு
பாரமேரு வில்லையே,—கையில்
பற்று நாதன்மாது பெற்ற நீதன்மீது
பனுவல் சூடு வல்லையே.

'மங்கை மார்கள்இரு கொங்கை துங்கமத
வாரணங்கொள் கும்பமே,—முகம்
[2]பூர்ணசந்த்ர விம்பமே,—பட
மாசுணம்நி தம்பமே,—[3]தொடை
மார வேள்அரசு மண்ட பத்தருகில்
வைத்த ரண்டு கம்பமே.

'செங்கை சூரியோத யங்கு லாவமலர்
சீதபத்ம தளமே,—வாயில்

---

விரோகம் மாய விட்டு – பாவக்குழி அழியும்படி விட்டுவிட்டு. விரோகம் – பொந்து, குழி. ஆவது இல்லையே – ஆகக் கூடிய நல்ல காரியம் எதுவும் இல்லையே. பாரமேரு வில்லையே பற்று நாதன் மாது – பாரமான மேருமலையையே வில்லாகப் பிடித்திருக்கிற சிவனுடைய மனைவி; பார்வதி. பனுவல் – பாமாலை. வல்லையே – விரைவாகவே.

(பா-ம்) 1. விரோதம் மாயவிட்டு, விரோத மாயம் விட்டு. மத வாரணம் கொள் கும்பமே – மத யானையின் மத்தகமே. விம்பமே – பிம்பமே. பட மாசுணம் – படம் விரிக்கும் பாம்பு. நிதம்பமே–அல்குலே. மாரவேள் அரசு மண்டபம்–மன்மதனின் அரண்மனை மண்டபம். வைத்த ரண்டு கம்பமே – வைத்த இரண்டு (வாழைத்) தூண்கள். செங்கை – சிவந்த கை. சூரியோதயங் குலாவ மலர்–சூரியோதயம் ஆனதும் மலருகிற. பத்ம தளமே – தாமரை இதழே.

(பா-ம்) 2. பூரண சந்திர. 3. துடை.

ஓதுசொற்கள் குளமே,—இதழ்
திவ்யபொற்ப வளமே,'—என்று
சிந்தித் தால்குமரன் கந்தப் பாதமலர்
சேர்வ தெவ்வா றுளமே?

வன்ன மானவிழி மின்ன வேகடையில்
வக்ர தந்த சங்கமே—கொண்ட
உக்ர துங்க சிங்கமே—என்ன
மறலிதூதர் பொங்கமே—உற்று
வந்த வேளைநெஞ்சே கந்த வேளைநினை,
மருவுறுது பங்கமே.

சென்னி மாநகரண் ணுமலைக் கவிஞன்
தேசம்எங்கும் இசையே—பெறப்
பேசுசந்த மிசையே—சற்றும்
தீர்ந்திடாத நசையே—வைத்துச்
சேவலாளிபதம் ஆவலோடுபணி
தினமும் நூறு விசையே.

---

ஓது சொற் கள் குளமே — பேசுகிற பேச்சு கள்ளின் குளம்; அதாவது தேன் குளம். ஓது சொற்கள் குளம் எனப் பிரித்து, பேசும் பேச்சு சர்க்கரை என்றும் பொருள் கூறலாம். குளம் — சர்க்கரை. கந்தப் பாதமலர் — வாசனை பொருந்திய திருவடி மலர்கள்.

வக்ர தந்தம்—வளைந்த பல். மறலி தூதர் — எமதூதர். பொங்கம்—எழுச்சி. மருவுறுது பங்கமே—ஆபத்து பக்கத்தில் நெருங்காது. அல்லது, "தழுவிக்கொள்; ஆபத்து பக்கத்தில் நெருங்காது", என்றும் பொருள் கூறலாம். இதற்கு, மருவு உறுது பங்கமே எனப் பிரிக்க வேண்டும். இசை — புகழ். சந்தமிசை - சந்தப் பாட்டின் மீது. நசை - ஆசை. சேவலாளி — சேவற்கொடியோன்; முருகன். விசை - தடவை.

## 10. சுரம் போக்கு—நற்றாய் இரங்கல்

*பாதிராத்திரி வேளையில் வீட்டுப்*
*பக்கத்தில் வந்து மேவிப்—பஞ்ச*
*பாதகன் ஒரு பாவி—சிறு*
*பாவையை மெள்ளக் கூவிக்—கையைப்*
*பற்றிக் கூட்டிக்கொண் டோடினான்;பதை*
*பாதைக்குதே என்றன் ஆவி.*

*சோதனைப்பிர காரமாய் என்னைத்*
*தொடர்ந்ததே பெருந் தோஷம்!—எவர்*
*சூதினால் வந்த மோசம்?—இனித்*
*தொலையுமோ பிள்ளைப் பாசம்?—இதைச்*
*சுற்றத் தார்அறிந் தால்எனக் குமுன்*
*சொல்வரே, பரி காசம்.*

*தேன் இலங்கிய காவனம் திகழ்*
*சென்னிமா நகர் வாசன்,—துதி*
*செய்அண்ணா மலை தாசன்—செப்பும்*
*செந்தமிழ்க் கருள் நேசன்,—தினம்*
*சிந்தனை செய்யும் தொண்டர் தீவினை*
*தீர்த்திடும் முரு கேசன்.*

---

சுரம் - பாலைவனம். நற்றாய் - பெற்ற தாய். தலைவனும் தலைவியும் ரகசியமாக ஊரைவிட்டு ஓடி பாலைவன மார்க்கத்தில் நடந்து செல்லுவர். இது சுரம் போக்கு எனப்படும். 'உடன் போக்கு' என்றும் இதனைச் சொல்வதுண்டு. பஞ்ச பாதகன் - பஞ்சமாபாதகம் செய்தோன். பஞ்சமா பாதங்கள், கொலை, பொய், களவு, கள்ளுண், குருநிந்தை என்றும், காமம், சூது, கள்ளுண்ணல், பொய்மொழிதல், கொடுப்பதைத்தடுத்தல் என்றும் இருவிதமாகக் கூறப்படும். சிறு பாவையை - சிறு பெண்ணை. சூதினால் - தந்திரத்தினால். பாசம் - அன்பு.

நானிலம்புகழ் கழுகு மாமலை
 நாயகன் பாண்டி நாட்டில்,—நெஞ்சில்
 நாணம் விட்டுத்தன் பாட்டில்,—வெப்பம்
 நண்ணிய பாலைக் காட்டில்—மகள்
நடக்க வேண்டிமுன் அடக்க மாய்த்தெய்வம்
 [1]லபித்ததோ மண்டை ஓட்டில்?

மையல்கொண்டொரு பையல் பின்செல
 வயது மீறின மாதோ?—இந்த
 மார்க்கம் தோன்றின தேதோ?—சென்ம
 வாசனைப் பலன் ஈதோ?—ஐயோ!
மாதம் பத்தும் சுமந்து பெற்றஎன்
 [2]வயிறும்தான் எரி யாதோ?

செய்யபஞ்சணை யும்பொ றுது
 சிவந்து கொப்பளம் ஆகும்—நெரிஞ்-
 சிப்பழம் என்று நோகும்—அவள்
 [3]சீரடி கஞம் வேகும்—படி
தீயும் கானலில் காயும் வேனிலாம்
 தீயில் எப்படிப் போகும்?

---

நானிலம் புகழ் கழுகுமாமலை நாயகன்-நாலுதிசைகளிலும் உள்ள வர்கள் புகழ்கின்ற கழுகுமலைத் தலைவன்; முருகன். தன் பாட்டில் - தானகை. அடக்கமாய்த் தெய்வம் லபித்ததோ-யாரும் அறியாத வண்ணம் கடவுள் தலையில் எழுதிவிட்டாரா? வயது மீறின மாதோ?-வயது மீறிய பெண்ணே? சின்னஞ்சிறு வயதிலேயே ஒரு வாலிபனின் பின்னுல் போய்விட்டதாகக் கூறித் தாய் வருந்துகிருள்.

(பா-ம்) 1. லிபித்ததோ, லிபித்ததே. 2. வயிறுதான்.

செய்ய பஞ்சணை - மிக அருமையான பஞ்சு மெத்தை. காதலன் பின்னே சென்றவளுடைய பாதங்களுக்குப் பஞ்சு மெத்தையும் கூட மிருதுவாக இல்லாமல் நெரிஞ்சிமுள் போல இருக்கும். அவளுக்கு அவ்வளவு மிருதுவான பாதங்கள். பஞ்சு மெத்தையில் மிதித்தே கொப்பளமாகி விட்ட அந்த மெல்லிய பாதங்கள் வேனில் வெயில் காய்கின்ற பாலைவனத்தீயில் எப்படிப்போகும்?

(பா-ம்) 3. சீரடி ரெண்டும், சீறடி ரண்டும்.

*தேடினும்கிடை யாத தாகிய*
*திரவியக் கரு கூலம்—போலே*
*செனித்தபெண் ணுக்குச் சீலம்—வேறே*
*திரும்பின தென்ன காலம்?—கொங்கை*
*[1]திரண்டிடாமுன்னம் மருண்டிடற்கெவன்*
*செய்தானோ இந்த்ர சாலம்?*

---

கருகூலம்-புதையல். சீலம் வேறே திரும்பினதென்ன காலம்? - நற்குணம் வேறு மாதிரி மாறிவிட்டது என்ன காலம்? திரண்டிடா முன்னம் - திரளாத முன்னம்; சிறுமிப் பிராயத்தில். மருண்டிடற்கு எவன் செய்தானோ இந்த்ர சாலம்?-புத்திமருளும் படி அவளை மயக்கிய மாயக்காரன் எவனோ? உண்மையில் அவள் அவ்வளவு இளமைப் பருவத்தினள் அல்ல. ஆனால், காதல் வயப்பட்டுவிட்ட ஒரு பெண்ணை இவ்வாறு சின்னஞ் சிறு மதலையென்று நூல்களில் குறிப்பிடுவது உண்டு. இதற்கு உதாரணமாகத் தமிழில் பல பாடல்கள் உள்ளன. சில பாடல் களில், 'அவளுக்கு இன்னும் மழலைகூட முற்றவில்லை; தலை மயிரோ கூட்டி முடிக்கும் அளவுகூட வளரவில்லை,' என்றும், 'பூமாலையை இடுப்பில் கட்டிக்கொண்டு பாவாடையைத் தலையில் கட்டிக்கொள்ளும் விபரம் அறியாத பசலைப் பருவம்' என்றும் கூறப்பட்டுள்ளன. திருக்கோவையாரில் ஒரு பாடல்:

''உருகுதலைச் சென்ற உள்ளத்தும் அம்பலத்தும் ஒளியே
பெருகுதலைச் சென்று நின்றோன் பெருந்துறைப் பிள்ளைகள்ளார்
முருகுதலைச் சென்ற கூழை முடியா முலைபொடியா
ஒருகுதலைச் சின்மழலைக் கென்றோ ஐய ஓதுவதே! '

பெரியாழ்வார் பாசுரம் ஒன்று:

''வாயில் பல்லும் எழுந்தில மயிரும் முடிகூ டிற்றில
சாய்விலாத குறுந்தலைச் சிலபிள்ளைக ளோடிணங்கி
தீயிணக் கிணங்காடி வந்திவள் தன்னன்ன செம்மை சொல்லி
மாயன் மாமணி வண்ணன் மேல்இவள் மாலுறு கின்றாளே!''

தாய்மாரும் தோழியரும் அவளிடத்தில் கொண்டுள்ள அன்பை யும் பரிவையுமே இக் கூற்றுக்கள் எடுத்துக் காட்டுகின்றன.

1. 'தெருண்டிடா' என்றும் பாடம். இந்தப் பாடத்திற்கு, முன்வரியின் முடிவில் 'கொங்கை' என்பதற்குப் பதிலாக 'மங்கை' என்றிருந்தால் பொருத்தமாக இருக்கும். தெருண் டிடா-ருதுவாகாத

காடுசேர்கையில் கரடி வேங்கைகள்
காட்டுமே ஆர வாரம், — அதைக்
காதில் கேட்கவி சாரம்—வைத்துக்
கலங்குவாள்; அந்த நேரம் — என்றன்
காதலி தன்னை ஆதரித் துயிர்
காப்பது வேலன் பாரம்.

## 11. தலைவி இரங்கல்

[1] நேம மாய்ப்பணியண் ணுமலைக்குதவு நீதனைக்
கழுகுமலை நாதனை — நெஞ்சில்
நினைக்க நினைக்கமீறி எனைக்கொல்லுதேகாம வேதனை.
கோம ளக்கடலி லேமி குத்ததிரைக் கூட்டமே!
மன்மதனும்போ ராட்டமே—செய்து
கோரமே விளைத்தால் தீருமோ எனக்கு வாட்டமே?
வெள்ளத் திரையின்மேலே துள்ளித் திரியும்சுறு மீனமே!
இனியும்உண்டோ மானமே?—கொங்கை
வீக்கம் கொண்டதனால் ஏற்கு தில்லைஅன்ன பானமே.
அள்ளற் கழிக்கரையுள் மெள்ளக் குலவிவரும் ஆமையே!
கொடியகாமத் தீமையே—நாளும்
அதிகரித் திடலால் அவமதிக்கு திந்தச் சீமையே.
பொங்கு மதுமலர்கள் எங்கும் பரிமளிக்கும் புன்னையே!
பெற்றுவளர்த்த அன்னையே!—எந்தப்

---

காதலி - மகள். பாரம் - கடமை.

முருகனிடம் காதல் கொண்ட பெண், கடலைப் பார்த்துத் தன் பிரிவுத் துயரைத் தெரிவிக்கிருள். நேமம் - நியமம். நீதன் - நீதிமான். கோமளம் - அழகு. திரைக்கூட்டம் - அலைக்கூட்டம். கோரம் - கொடுமை. அள்ளல் - சேறு. சீமை - தேசம்.

(பா-ம்) 1. நேமமாப்பணி.

புன்னையே-புன்னை மரமே.

போதும் வைதுவைது மோது கிருள்பார்வி என்னையே.

தங்குநித் திலம்புரி இங்கித வலம்புரிச் சங்கமே!
தென்றலும்ஒரு சிங்கமே—போலத்
தாக்கவே மயங்கி ஏக்கமாய் மெலிந்தேன் அங்கமே.

மங்கை மார்கள் அத ரங்கள் சேர்பவள வல்லியே!
'பிரியேன்' என்று சொல்லியே—போன
வாசக் கடம்பன்வர நேசத் துடன்சொல்லுமோபல்லியே?

அங்க யத்தில்நிறை பங்க யத்துள்உறை அன்னமே!
பிரியம்வைத்து முன்னமே—கட்டி
அணைத்த வேல்முருகன் தனைக்கண் காணேன்ஐயோ! இன்னமே.

## 12. தலைவியின் ஊடல்

ஆறுமுக வடி வேலவ னே!கலி-
யாணமும் செய்யவில்லை;—சற்றும்
அச்சம்இல் லாமலே கைச்சர சத்துக்கு
அழைக்கிறாய், என்னதொல்லை?

மீறிய காமம்இல் லாதபெண் ணோடே
விளம்பாதே வீண்பேச்சு.—சும்மா
வெள்ளைத் தனமாகத் துள்ளுகி றாய்;நெஞ்சில்
வெட்கம்எங்கே போச்சு?

நித்திலம் புரி - முத்துக்களை உற்பத்தி செய்யும்.
இங்கிதம் - அழகு, இனிமை. தென்றலும் ........ அங்கமே-
விரகதாபத்தில் தென்றல் சிங்கத்தைப் போல வந்து தாக்கு
கிறது; அதனால், அவளுடைய உடம்பு மெலிந்துவிடுகிறது.
அதரம் - உதடு. வல்லி - கொடி. நேசத்துடன்......பல்லியே -
அன்பாகப் பல்லி குறி சொல்லுமா? அங்கயம் - அழகிய குளம்.
பங்கயம் - தாமரை. இன்னமே - இன்னும்கூட.
ஊடல் - பிணக்கு; பொய்ச் சண்டை கைச்சரசம் - கையால்
செய்யும் விளையாட்டு. வெள்ளைத்தனம் - அப்பாவித்தனம்; அறி
யாமை.

மேட்டிமை என்னிடம் காட்டுகிறாய்; இனி
வேறில்லையோ சோலி?—இதை
வீட்டில்உள்ளார் கொஞ்சம் கேட்டுவிட் டால், அது
மெத்தமெத்தக் கேலி!

தாட்டிகம் சேர்கழு காசல மாநகர்
தங்கும்முரு கோனே!—இந்த்ர
சாலத்தி னால்என்னைக் காலைப் பிடித்தாலும்
சம்மதியேன் நானே.

'அக்கரைக் காரர்க்குப் புத்திகொஞ் சம்'என்பார்
ஆரும்பழ மொழியே.—நீயும்
அப்படி என்னைப் பலாத்காரம் செய்திடில்
ஆச்சுதுபெண் பழியே.

சர்க்கரைக் கட்டிபோல் வள்ளிதெய் வானையாம்
தையல்உனக் கிலையோ?—இரு
தையலரைச் சேரும் மையல் உனக்கென்ன
தானும்ஒரு நிலையோ?

அம்புவி மேல்சிறு பெண்களின் மேல்உனக்கு
ஆசைஏன் காணாதையா?—நீர்
ஆக்கப் பொறுத்தாலும் ஆறப் பொறுதவ-
ராகவேதோணா தையா!

நம்பும்அண் ணாமலை தாசன் பணியும்
நளினமலர்ப் பாதா!—கொஞ்ச
நாளைக்கு மேல்ஒரு வேளைக்கு லீலை
நடத்தினால் ஆகாதா?

---

மேட்டிமை - மேன்மை, தலைமை. சோலி-வேலை. தாட்டிகம்-செல்வாக்கு.

இரு தையலரைச் ..... நிலையோ? - இரண்டு பெண்களோடு உறவு கொண்டுள்ள உன் மோகம் நிலைத்த தன்மை உடையதோ? நளினமலர் - தாமரை மலர்.

## 18. பாங்கி தலைவி நிலைமை கூறித் தலைவனை அழைத்தல்

கண்ணா யிரம்படைத்த விண்ணா ரிடம்தரித்த
கனவயி ரப்படை யவன்மக ளைப்புணர் கத்தனே!-திருக்
கழுகு மலைப்பதி அநுதினம் உற்றிடு சுத்தனே!

அண்ணு மலைக்கிடர்கள் நண்ணு தொழித்துமிக
அகமகி ழத்தன தருளை அளித்திடும் ஐயனே!—திசை
அரவமும் வெட்குற மயிலை நடத்திய துய்யனே!

மின்னோ கமலமலர்ப் பொன்னோ எனப்புகல
விகசித ரத்தின நகைகள் தரித்தொளிர் மெய்யினள்;—கதிர்
விரவிய சித்திர வளையல் அடுக்கிய கையினள்.

எந்நேர மும்மனதில் உன்மீதில் மையல்கொண்டு
எழுதிய சித்திரம் எனமவு னத்தினில் இருக்கிறள்;—வள்ளத்து
இடுகிற புத்தமு தினையும் வெறுத்தரு வருக்கிறள்.

கும்பத் தினைச்சினந்து வம்பைப் பிதிர்த்தெழுந்து
கொடிஇடை முற்றிலும் ஒடிய வளைத்தது கொங்கையே;-மணம்
குலவு கடப்பினில் நினைவது வைத்தனள் மங்கையே.

---

கண்ணாயிரம்.......மகளை – ஆயிரம் கண் படைத்தவனும், விண்ணுலகத்தில் இருப்பவனும், வஜ்ராயுதம் உடையவனும் ஆன இந்திரன் மகள் தெய்வானையை. கத்தனே - கடவுளே. திசை அரவம் - எட்டுத்திக்கிலுமுள்ள பாம்புகள். கமல மலர்ப் பொன் - தாமரையில் வீற்றிருக்கும் லக்ஷ்மி. வள்ளம் - தட்டு. புத்தமுது - அப்போதுதான் கறந்து காய்ச்சிய பால்.
கும்பம் - சிறிய குடம். சினந்து–கோபித்து. வம்பு- மார்க்கச்சு. பிதிர்த்து-துண்டு துண்டாகக் கிழித்து. வளைத்தது-(இடையை) வளைத்து விட்டது.

*செம்பொற் சிலம்புகள் புலம்பப் பெருந்தெருவில்*
*திகழ்தரு சிற்றில்கள் ¹புரிவதை விட்டவள் தியங்கினன்; — உன்றன்*
*திருவழ கைக்கரு விழியுள் இருத்தியே மயங்கினள்.*

*போராடு தற்குரிய கூரார் மலர்க்கணை எய்*
*புகழ்பெறு சித்தச தனுவத னைப்பொரு புருவத்தாள்;— தவம்*
*புரிபவ ரைத்தன தடியில் விழப்புரி பருவத்தாள்.*

*சீராக மெத்தைதனில் நேராக வைத்துன்னது*
*திருவத ரக்கனி ²அமுதை அருத்தியே சேரையா!— இந்தத்*
*தெரிவை உளத்துனை யலது பிடித்தவர் ஆரையா?*

---

கடப்பினில்-கடப்பம் பூ மாலையில். காதலன்மீது ஆசை கொண்டதைக் குறிப்பிடும்போது காதலனுடைய பூமாலையின் மீது ஆசைகொண்டு விட்டாள் என்று குறிப்பிடுவதும் உண்டு. பாண்டியன்மீது காதல் கொண்டுவிட்டாள் என்று சொல்வதற்குப் பதிலாகப் பாண்டியனின் வேப்பமாலைமீது ஆசை கொண்டுவிட்டாள் என்றும், அதேபோலத் திருமாலின் துளபமாலைமீது ஆசைகொண்டு விட்டாள் என்றும் சொல்லுவார்கள். இதற்கு உதாரணமாகத் தமிழில் பல பாடல்கள் உண்டு.

ஓர் உதாரணம்:

''மாப்பைந்தார்க் கல்ல,முத்து வண்ணத்தார்க் கல்ல
வேப்பந்தார்க் காசைகொண்டு விட்டாளே—பூப்பைந்தார்
சேர்ந்திருக்கும் நெல்வேலிச் சீவலமா றுதமிழை
ஆய்ந்திருக்கும் வீரமா று!''

சிற்றில் - விளையாடுவதற்குக் கட்டும் மணல் வீடு. கூரார் - கூர்மை சேர்ந்த. சித்தச தனு - மன்மத வில்; கரும்பு வில். பொரு - போட்டியாக எதிர்க்கின்ற. அருத்தி - ஊட்டி. தெரிவை - நன்றாக வயது வந்த பெண். உளத்துனை யலது பிடித்தவர் - உன்னை யல்லாமல் வேறு பிடித்தமானவர்கள்.

(பா-ம்) 1. புரிவகை. 2. இதழை அழுத்தியே.

# 14. தலைவி பாங்கியைத் தூதுவிடுதல்

பூமிமெச் சிடும்அண் ணுமலைக் கோர்துணை யானவன்,
மயில் வானவன், ஒரு கானவன்—¹எனப்
புனத்தைக் காக்கும் வள்ளி
தனத்தைப் பார்க்க மெல்லப் போனவன்.

சேமமுற் றகமு காசலே சனையே தேடுதே;
மனம் வாடுதே; கால்தள் ளாடுதே;—இரு
செங்கை தங்கி நின்ற
சங்கி னங்கள் கழன் றோடுதே.

தென்ற லானபுலி வந்து கோபமொடு சீறுதே;
தடு மாறுதே; இதழ் ஊறுதே;—மெத்தத்
திமை யாம் இருளில்
காம லா கிரியும் மீறுதே.

குன்ற மானமுலை ²ரண்டும் மார்பில்விம்மிக் கொண்டுதே;
தேமல் மண்டுதே; ³வெப்பும் கண்டுதே;—மலர்க்
கொம்பு போல மென்ம-
ருங்கு லான துந்து வண்டுதே.

உள்ளம் மெல்லமெல்ல லீலை செய்யநினைந் துருகுதே;
முத்தம் கருகுதே; கண்ணீர் பெருகுதே;—என்றன்

---

வானவன் - தேவன். கானவன் - வேடன். சங்கினங்கள் - சங்கு வளையல்கள். தலைவனைப் பிரிந்ததன் காரணமாக உடல் மெலிந்து கைகளும் மெலிந்து விட்டதால், கைகளில் உள்ள வளையல்கள் தாமாகக் கழன்று ஓடுகின்றன என்று கூறுவது கவி மரபு. குன்றமான – குன்றுகள் போலுள்ள. கொண்டுதே - கொள்ளுதே. கண்டுதே - காணுகின்றதே. மென்மருங்குலானது - மெல்லிய இடையானது. துவண்டுதே - துவளுதே.

(பா—ம்) 1. எனற், தினைப். 2. ரெண்டும். 3. வெப்பம்.

முத்தம் - முத்து. பிரிவு நோயால் உடம்பு வெப்பமாகி, அதன் காரணமாக முத்துமாலைகள் கருகுகின்றன.

உச்சிக் கேறிக் காமப்
பித்தம் கிறுகி றென்று வருகுதே.
வள்ளம் மேவும்பசும் பாலும் தேனும்அரு வருக்குதே;
கசந் திருக்குதே; துன்பம் பெருக்குதே;—வன்ன
வாரும் தாறு மாறுய்க்
கிற வே தனமும் பருக்குதே.

பார மானகொங்கை ஓரம் வேடன் அம்பு பாயுதே;
உடல் தேயுதே; மலர் தீயுதே;—கொடும்
பாவி யான மதி
ஆவி சோர வந்து காயுதே.

மார வேளினுலே கோர மானகாம வாதையே
எனும் தீதையே தீரத் தூதையே!—சொல்லி
வாட்டம் தீர் குகனைக்
கூட்டி வாடி யடி கோதையே!

## 15. பாங்கி தலைவியின் அவயவத்தருமை சாற்றல்

சந்தவரை வந்தகுக நாதா!—பரை
அந்தரி மனோன்மணியாம் மாதா—தந்த
சண்முக சடாட்சரவி நோதா!

---

வன்னவார் - வர்ண சிங்காரம் உடைய மார்க்கச்சு.

வேடன் - (இங்கே) மன்மதன். மதி - சந்திரன். ஆவி சோர - உயிர் சோரும்படி. மாரவேள் - மன்மதன். தூதை — தூது செல்லும் பெண்; தூதன் என்பதற்குப் பெண் பால். குகன் — முருகன். கோதை — பூமாலை; இங்கே பூமாலை அணிந்த பெண்.

சந்தவரை-சந்தனமலை. (இது திருச்செந்தூரில் இருக்கிறது.) பரை, அந்தரி, மனோன்மணி — பார்வதியின் பெயர்கள். சடாட்சரம் - ஆறு எழுத்து மந்திரம்; 'சரவணபவ' என்பது. சரவண பவன் - முருகன்.

குழைக் காதா! சூரர் வாதா!—வன
சஞ்சரிவெண் குஞ்சரிச மேதா!

செந்தமிழ்அண் ணாமலையை ஆளாக்—கொண்ட
கந்தஅர விந்தமலர்த் தாளா!—கள்க-
சிந்திடும் கடம்பணியும் தோளா!
நெடு நாளா(ய்) மற வாளா(ய்)—உனைத்
தேடோர்குயில் பேடுருவம் கேளா(ய்)!

சுந்தரம் மிகுந்தகுழல் மேகம்;—அவள்
சொந்தநுதல் இந்துவிலோர் பாகம்;—திருந்-
தும்புருவம் வில்லோடுசி நேகம்;
தவ யோகம் வென்ற நேகம்—வஞ்சம்
துஞ்சுவிழி நஞ்சினிலும் வேகம்.

சந்தம்மலி கின்றமுகம் இந்து;—வள்ளைத்
தண்டுசெவி என்பதுவே தந்து;—கன்னம்
சாணை;நுனி நாசியின்ப சுந்து
மதுச் சிந்து தல்பொ ருந்து—சிறு
சண்பகம்;துப் பாம்இதழ்சி வந்து.

---

குழை - காதில் அணியும் ஆபரணம். வாதா – வதைத்தவனே. வனசஞ்சரி - வனத்தில் சஞ்சரித்த வள்ளி. வெண் குஞ்சரி - வெள்ளை யானை போன்ற தெய்வானை. சமேதா - உடன் -இருப்பவனே. கந்த அரவிந்தம்-வாசனை பொருந்திய தாமரை. தாளா- கால்களையுடையவனே. பொருள் விளக்கத்திற்காக,(ய்) என்று மூன்றிடங்களில் இங்கே நான் சேர்த்திருக்கிறேன். மூலத்தில் 'நாளா' 'வாளா' 'கேளா' என்றே இருக்கிறது.
சுந்தரம் - அழகு. குழல் - கூந்தல். நுதல் - நெற்றி. இந்துவிலோர் பாகம்-பிறைச் சந்திரன். துஞ்சு-தூங்குகின்ற. வேகம்—சக்தி உடையது. வள்ளைத் தண்டு - காதுக்கு உவமானமாகச் சொல்லும் ஒரு வகைத் தண்டு. நுனி நாசி - நுனிமூக்கு. சுந்து—நீர். நாசியின்ப...சண்பகம் - இனிய நீர் போன்ற தேன் சிந்துகின்ற சிறு சண்பகப் பூப்போன்றது மூக்கு. "நுனிநாசி, இன், பசுந்து மதுச் சிந்துதல் பொருந்து சிறு சண்பகம்" எனப் பிரித்து, நுனி மூக்கானது, இனியதும், பசுமையும் பொன்னிறமும் கலந்த நிறத்தில் தேனைச் சிந்துவதுமான சிறு சண்பகப் பூப்போன்றது என்றும் பொருள் கூறலாம். துப்பு - பவளம்.

செங்குமுத புட்பமதை ஒத்து,—மொழித்
தேனுதவும் வாய்நகையோ முத்து;—கண்டம்
சீதரனூர் ஊதுவர நத்து;
சொல்தி தித்துப் பாகைக் கைத்து—விடச்
செய்யும்என உன்னலாம்உ ளத்து.

குங்குமவா கங்குசகோ தண்டம்;—முன்கை
கோமகர யாழ்உவமை விண்டம்;—கையைக்
கோகனக மோனமரு ண்டம்;
ஆழி மண்டங் குலி கண்டம்—நெருங்-
கும்கெளிறு சிறுகிளித் துண்டம்.

கட்டுகதிர் பட்டுமணி வம்பு—கிழி
பட்டுவழி விட்டிடள ழும்பு—கிற
கட்டழகாம் வட்டமுலை, செம்பு,
யானைக் கொம்பு, சிவ சம்பு—குடங்
கைக்கும்வளை யாதபொற்ப றம்பு.

---

நகை - பற்கள். கண்டம் - கழுத்து. சீதரனூர் ஊது - திருமால் ஊதுகிற. வரநத்து - சிறந்த சங்கு. சொல்...செய்யும்-சொல் லினிமைக்குமுன் சர்க்கரைப் பாகு கசந்து தோன்றும். குங்கும வாகு அங்குச கோதண்டம் - குங்குமம் அப்பிய தோளுக்கு அங்குசம், வில் ஆகியவை உவமை. விண்டம் - சொன்னோம். கோகனகம்-தாமரை. மருண்டம் - திகைத்தோம். ஆழிமண்டு அங்குலி -மோதிரங்கள் நிறைந்த விரல். கண்டம் - பார்த்தோம். கெளிறு-கெளிறு மீன்கள். கிளித்துண்டம்-கிளியின் மூக்கு; இது நகத்துக்கு உவமை.

கட்டு...வம்பு-கட்டப்பட்டுள்ள பிரகாசமான பட்டு மார்க்கச்சு. சிவசம்பு-சாம்பசிவன்; சிவபெருமான். குடங்கை - உள்ளங்கை. பறம்பு - சிறியமலை அல்லது பெரிய பாறை. மேருமலையைச் சிவபெருமான் உள்ளங்கையால் பிடித்து வில்லாக வளைத்து விட்டான். ஆனால், - இந்த மலை அவன் கைக்கும் அடங்காத வாறு பெரிதாக உள்ளது. ஸ்தனத்துக்குச் செம்பு, ஏந்தி நிற்கும் யானைத் தந்தம், மலை முதலியன இங்கு உவமானங்களாகச் சொல்லப்பட்டுள்ளன.

மட்டுமிழ் பசுந்துளப மாலே—செங்கண்
வளருகிற தவிசெனும்ஓர் ஆலே—சிறு
வயிறு;மயிர் சிற்றெறும்பு போலே;
விரை வாலே வெள்ளம் மேலே—சுற்றி
வந்தசுழி உந்தி;இடை நூலே.

தரமரவ படமென்அல்குல் உண்டு;—[1]தொடை
தங்கநிறச் செங்கதலித் தண்டு;—முழந்
தாட்குவமை கேட்கில்அவை நண்டு;
சினை கொண்டு வளர் பெண்டு—வரால்
தானேகணைக் கால்எனும்இரண்டு.

பரடு,தராசு உயர்குதி,கந் துகமே;—அணி
பரவுபுற வடியிணை,புத் தகமே;—கடற்
பவளமதி தசவிரல்கள் நகமே;

---

மட்டுமிழ் (மட்டு உமிழ்) - தேன் உமிழ்கின்ற. மால்—விஷ்ணு. கண்வளருகிற - தூங்குகிற.

ஆலே-ஆலமரத்தின் இலையே. வயிறு ஆலிலை போலவும், வயிற்று மயிர் சிற்றெறும்பு ஊர்வது போலவும், கொப்பூழ் தண்ணீர்ச் சுழி போலவும், இடை நூல் போலவும் இருக்கின்றன.

தரம் அரவ படமென் - நல்ல பாம்பின் படமென்று சொல்லத் தக்க. படம் மென் அல்குல் எனப் பிரித்தால், படம் போன்ற மென்மையான அல்குல் என்று பொருள். முழந்தாளுக்குவமை நண்டு. முட்டையிட்டு வளருகின்ற பெண்வரால் மீனைப்போல உள்ளது கணைக்கால். பரடு தராசு - கால் கரண்டை தராசுத் தட்டுப்போல உள்ளது. குதி - குதிகால் கந்துகம் - பந்து; குதி கால் பந்துபோல இருக்கிறது. அணி பரவு-ஆபரணங்கள் நிறைந்த. புறவடி - புறங்கால்; பாதம். பாதங்கள் புத்தகம் போல இருக்கின்றன. தச விரல்கள் - பத்து விரல்கள். கடல் பவளம், மதி, தசவிரல்கள் நகமே - விரல்கள் கடலிலுள்ள பவளக் காம்பு போலவும், நகங்கள் பிறைச் சந்திரனைப் போலவும் உள்ளன.

(பா—ம்) 1. துடை

*அம்போ ருகமே பத யுகமே;—மயில்*
*பண்ணும் இளஞ் சாயல்ஐயா சகமே.*

*மேனகையோ டுருவசிஇந்த் ராணி—செல்வம்*
*மிக்கதிரு முக்யகலை வாணி—இந்த*
*மின்னரசி தன்னுருவம் காணில்*
*நெஞ்சு நாணி மலர்ப் பாணி—தலை*
*மீதுகுவித் துத்தொழுவார் பேணி.*

*சேனையொடு வந்துகருங் காவி—அம்பைச்*
*செய்யகருப் புச்சிலைவைத் தேவி—சண்டை*
*செய்யும்ஒரு மன்மதனும் பாவி*
*எங்கள் தேவி உடல் ஆவி—தனைத்*
*தீர்க்குமுனம் காத்திடுவாய் மேவி.*

---

அம்போருகம் - தாமரை. பதயுகம் - இணையடிகள். பாதங்கள் தாமரை மலருக்கு உவமை. சாயல் மயிலின் சாயல் போல் இருக்கிறது. தனித்தனியாக ஒவ்வொரு உறுப்பையும் வர்ணித்துவிட்டு, கடைசியில் மொத்தமாகப் பார்த்து தலைவியின் சாயல் மயிற் சாயல்போல் இருப்பதாக வர்ணித்து முடிப்பது சிறப்பாக இருக்கிறது.

உருவசி - ஊர்வசி. செல்வம் மிக்க திரு - செல்வம் நிறைந்தவளான லக்ஷ்மி. கலைவாணி - சரஸ்வதி. பாணி - கை. மேனகை முதல் சரஸ்வதி ஈருக உள்ள எல்லாத் தெய்வப் பெண்களும் இந்தத் தலைவியின் உருவழகைக் கண்டால், தங்கள் குறைந்த அழகுக்காக வெட்கப்பட்டு, இவளைக் கையெடுத்துக் கும்பிடுவார்கள். கருங்காவி - கருநீலமாக உள்ள குவளைமலர். செய்ய கருப்புச் சிலை - சிவப்பாக உள்ள கரும்பு வில். மன்மதன் தன் கரும்பு வில்லில் குவளை மலர் என்ற அம்பை வைத்து எய்கிருன். அவன் கையால் தலைவி சாகும் முன்பு வந்து அவளைக் காப்பாற்ற வேண்டும் என்று தோழி முருகனை வேண்டுகிருள்.

# 16. தலைவன் வருத்தும் சாற்றல்

வன்னத் திணைமாவைத் தெள்ளியே--உண்ணும்
வாழ்க்கைக் குறக்குல வள்ளியே!—உயிர்
வாங்கப் பிறந்திட்ட கள்ளியே!—இரு
வடமேருவை நிகராகிய புயமீதணி பலமாமணி
மாலை படீரெனத் துள்ளியே—விழ
வான்மதி வீசும்தி அள்ளியே.

கன்னத் தினில்குயில் சத்தமே—கேட்கக்
கன்றுது பாரென்றன் சித்தமே;—மயக்-
கஞ்செய்யு தேகாமப் பித்தமே;—உடல்
கனலேறிய மெழுகாயின தினியாகிலும் அடிபாதகி!
கட்டி அணைத்தொரு முத்தமே—தந்தால்
கைதொழு வேன்உன்னை நித்தமே.

வாடி யிருப்பது வஞ்சமோ?—பொல்லா
வன்கருங் கல்லோஉன் நெஞ்சமோ?—கொண்ட
மையல் பயித்தியம் கொஞ்சமோ?—சில
மதனுகம முதுகாவியம் அதிலேமொழி சுகலீலையின்
மார்க்கம் உனக்கென்ன நஞ்சமோ?—ஒரு
வார்த்தை உரைக்கவும் பஞ்சமோ?

தேடக் கிடையாத சொன்னமே!—உயிர்ச்
சித்திர மே!மட அன்னமே!—அரோ-
சிக்குது பால்தயிர் அன்னமே.—பொரு

---

கன்னத்தினில் - (கர்ணத்தினில்) காதில். கன்றுது – வருந்துகிறது.

மையல் - காம மயக்கம். மதனுகம முதுகாவியம் - மன்மத சாஸ்திரமாகிய பழைய காவியம். நஞ்சமோ? - வெறுக்கத் தக்க நஞ்சா? சொன்னம் - (ஸ்வர்ணம்) தங்கம். அரோசிக்குது - அருவருப்பாய் இருக்கிறது.

சிலேவேள்கணை கொலைவேலென விரிமார்பினில்
நடுவேதொளை
செய்வது கண்டிலே இன்னமே.—என்ன
செய்தேனோ நான்பழி முன்னமே?

## 17. தலைவனைக் கலந்தமை தலைவி பாங்கிக்குக் கூறல்

செந்தில் மாநகரம்தனில் மேவிய
தேசிகனும்முருகேசன்;—மயில்
வாசியில் ஏறும்உல் லாசன்;—சிறு
திங்களும்பண சங்கமாசுண-
மும்துலங்கிய கங்கையாளொடு
செஞ்சடாடவி மீதணி வார்செவி
[1]சேரமுன் ஓதுஉப தேசன்;—அடி-
யார்தமை ஆள்விசு வாசன்.

எந்த நேரமும் வந்தனை செய்தடி
எண்ணும்அண் ணாமலை தாசன்—துதி
பண்ணும்மெய்ஞ் ஞானவி லாசன்,—என்னோடு
இந்தெழுந்து தயங்குமாலையில்
வந்துவண்டு முழங்குசோலையில்
இன்ப சாகர மாகிய லீலைகள்
அன்புட னேசெய்தான் மானே.—அந்தச்
சம்ப்ரமம் என்னசொல் வேனே!

---

வேள் - மன்மதன். கணை - அம்பு. பழி - பாவம்.
செந்தில் - திருச்செந்தூர். தேசிகன் - குரு. வாசி - குதிரை; பறவையுமாம். சிறு திங்கள் - பிறைச் சந்திரன். பண சங்க - படத்தோடு கூடிய. மாசுணமும் - பாம்பும். செஞ்சடாடவி - சிவந்த சடைக்காடு. சிறு திங்களும்...உபதேசன் - பிறைச் சந்திரனும், பாம்பும், கங்கையாளும் சடையில் சூடுகின்ற சிவ பிரானுடைய செவியில் உபதேசித்தவன். இந்து - சந்திரன். இன்பசாகரம் - இன்ப சமுத்திரம். சம்ப்ரமம் - கோலாகலம்.
(பா—ம்) 1. சேரமுன் னேன்உப தேசன்.

*மங்கை மார்பல ரும்புடை சூழ்தர*
*மாமலர் கொய்திடச் சென்றேன்;—அங்கோர்*
*பூமரத் தேதனி நின்றேன். – சந்த்ர*
*மண்டலங்களை வென்றஆனனம்*
*ஐந்தொடொன்று மிகுந்துவார்மது*
*வண்ட லோடு கடம்பெனும் ஆரமும்*
*வாரமும் தோன்றிடச் சேர்ந்தான்;—[1]எனது*
*ஏரும்பார்த் தேகளி கூர்ந்தான்.*

*"பங்க யாசனம் மேலுறை நான்முகப்*
*பாதக னும்மலர்க் கைதான்—கொண்டுன்*
*சோதியை எப்படிச் செய்தான்?—அடி*
*பஞ்சுரஞ்சினும் அஞ்சுசீரடி*
*கொஞ்சுரஞ்சித வஞ்சியே! புவி*
*பட்டு நீநிலை நிற்கவொண் ணா"தென்று*
*பன்மலர் மெத்தையொன் றிட்டான்;—பின்பு*
*மென்மெல வந்தென்கை தொட்டான்.*

---

புடை சூழ்தர - சுற்றிவர. ஆனனம் - முகம். ஐந்தொடு ஒன்று மிகுந்து - ஆறு. வாரமும் - அன்பும். ஏரும் - அழகும். பங்கயாசனம் - தாமரையாகிய ஆசனம். நான்முகப் பாதகன் - பாவிப்பயல் பிரமன்! ஆச்சரிய மிகுதியால் சொல்லும் வார்த்தை "பாதகன்" என்பது. பஞ்சுரஞ்சினும் - (பஞ்சு உரஞ்சினும்) பஞ்சு உரசினலும் கூட.

அஞ்சு சீரடி - (அழுத்தும் என்று) பயப்படுகின்ற அழகிய பாதங்கள்.

புவிபட்டு...தென்று - தரையில் (பாதங்கள் படும்படியாக) நீ நிற்பது தகாது என்று.

மென்மெல - மெல்ல மெல்ல.

(பா—ம்) 1. என் சிரை.

## 18. துதி

கன்னல் சூழ்பழ னம்புடை சூழ்கழு-
காசலம்தனில் வாழ்பிர தாபனே!—கன
வாசம்எங்கும் கமழ்கின்ற நீபனே!—வளர்
காதலோடிரு போதிலும்பல
போதிஞல்பணி வார்மனத்துறை
காரிருட்குலை நீக்கிய தீபனே!—அதி
சூரபத்மனைத் தாக்கிய கோபனே!

சென்னி மாநகர் வாழும்அண் ணுமலை
செப்பும்செந் தமிழ்க்கதி நேசனே!—சிவ
சுப்பிரமண் யன்எனும்பிர காசனே!—கொடுஞ்
சிந்தைநைந்து புலம்பிநின்திரு
மந்திரம்தனில் வந்தடைந்துனைச்
சேவிக்கும்குணம் என்றெனக் காகுமோ?—மிகு
பாவிக்கும்துயர் எப்படிப் போகுமோ?

வந்த வர்க்குப் பழம்புளிக் காடியே
தந்திடச்சகி யார்தமைத் தேடியே,—பிர-
பந்தம்எத்தனை எத்தனை கோடியே-குலை
வாழையின்பழ மோகனிந்திடும்
மாழையின்கனி யோஎனும்படி
மதுரிதம்பெ றவேஙிதம் பாடியே,-ஒரு
[1]விதப்பரிசும் பெறுதுளம் வாடியே,

---

கன்னல் – கரும்பு. பழனம் - வயல். இரு போதிலும் - (காலை மாலையாகிய) இரண்டு வேளைகளிலும். போதிஞல் பணிவார் - பூ அரும்புகளால் பணிகின்றவர். திருமந்திரம் - திருக்கோயில். என்றெனக் காகுமோ? - என்று எனக்குக் கைகூடுமோ? பழம் புளிக்காடி - புளித்துப்போன பழைய கஞ்சி. பிரபந்தம் - பாமாலை. மாழையின் கனி - மாம்பழம். மதுரிதம் - இனிமை. பரிசும் - சிறப்பும்.

(பா—ம்) 1. பரிசதும் பெருமலுளம் வாடியே,

வெந்த ரைக்குள் வெடிப்பிடைப் பாலையே
சிந்துபித்தரைப் போல்வெறும் வேலையே—செய்யும்
வீணன்நான்விளங் குன்தண்டைக் காலையே,—எந்த
வேளையும்துதி கூறவும்துயர்
நீளும்வெம்பவம் மாறவும்புரி
வில்வவேணிசேர் கற்பக வாலையே—தரு
செல்வனேஎனும் கற்பகச் சோலையே!

## 19. தலைவியின் ஊடல்

செந்தூர் வளர்முருக நாதா!—அருணோதயச்
செந்தா மரைநிகரும் பாதா!—திகழ்
சிந்தையில்அண் ணுமலைசெய்
நிந்தையைஎண் ணுது அருள்செய்
சித்திர வேல்கரவி நோதா!—உனதுவஞ்சச்
செய்கைஇன் னமும்தெரி யாதா?

சந்தோஷ மாகவேபோய் வீடு—வீடுகள் தோறும்
சரசம்கொண் டாடுவதே பாடு;—வந்துன்
தன்னுடனே சேர்பிரியக்
கன்னியர்கள் பேர்வரியச்

---

துயர் நீளும் வெம்பவம் - துயரங்கள் பெருகுகின்ற கொடிய பாவம். மாறவும் புரி - மாறவும் செய்வாயாக.
வில்வவேணி - வில்வமும் சடையும் உடைய சிவன். கற்பக வாலை - யௌவனப் பெண்ணான கற்பகாம்பிகை; பார்வதி. தரு - பெற்றெடுத்த.
அருணோதயச் செந்தாமரை – சூரியோதயத்தின்போது காணுகின்ற மலர்ந்த செந்தாமரை. பாடு – வேலை. வரிய – வரைய, எழுத.

*சகஸ்திரம் வேணுமேவெள் ளேடு!—தனித்தோரிடம்*
*தங்கியே மேயுமோவெள் ளாடு?*

*வேசையர் வாசலிலே சென்று,—தம்பலங்களை*
*வெட்கமில் லாமல்வாங்கி மென்று,—தின்று*
*மெத்தப்பயித் தியம்கொண்டு,*
*சுற்றித்திரிந் தேமருண்டு,*
*வீடுதேடி வந்தாயே இன்று;—தொடவேமாட்டேன்*
*வேணும்என் றாலும்போடு கொன்று.*

*ஆசைகொண் டவருக்கு ரோசம்—கிடையாதென்பார்,*
*அப்படிக் காகில்விசு வாசம்—வைக்கும்*
*அந்தவிலைப் பெண்டுகளைச்*
*சொந்தமெனக் கொண்டலையே,*
*ஆனாலும் உனைப்போல மோசம்—போனவர்*
*உண்டோ?*
*ஆரும்செய்கி றரேபரி காசம்!*

---

சகஸ்திரம் - ஆயிரம். வெள்ளேடு - எழுதாத ஏடு. உன்னோடு வந்து கூடுகின்ற பிரியக் கன்னியர்களின் பெயர்களை எல்லாம் எழுத வேண்டும் என்றால் ஆயிரம் ஏடுகள் வேண்டும். தனித்தோரிடம்.....வெள்ளாடு? - வெள்ளாடு (கூட்டத்தோடு சேராமல்) தனியாக மேயாது. அது போல நீ பெண்கள் கூட்டத்தோடு சேராமல் இருப்பாயா? தவிரவும், வெள்ளாடுஓரிடத்தில் நின்று வயிறு நிரம்பத் தழை தின்னாது; பலபல செடிகளிலும் சிறிது சிறிது மேய்ந்துகொண்டே போகும். 'ஆடு தழை தின்றாற் போல' என்பது ஒரு பழமொழி. அதுபோலவே, நீயும் ஒரு பெண்ணுடன் கூடியிராமல் பல பெண்களோடு கூடித் திரிகிறாய் என்றும் ஒரு கருத்து உரைக்கலாம்.

தம்பலம் - வெற்றிலை பாக்கு; தாம்பூல எச்சில். ரோசம் - ரோஷம், மானம். விசுவாசம்-நம்பிக்கை. விலைப் பெண்டுகள் - பரத்தைமார்கள்.

கந்தாசெய் யாதேபல வந்தம்—புதுமலரைக்
கசக்கி அறிவார்களோ கந்தம்?—சற்றும்
காதலிலா மல்சினந்த
மாதைவலி யப்பிடித்துக்
கலந்தால் வருமோசுகா னந்தம்?–உனக்கெனக்கும்
கனவிலும் இல்லை இனித் தொந்தம்.

"எந்தப் பிறப்பினுமே வல்லி,— உனையல்லாமல்
எவளையும் சேரேன்" என்று சொல்லி—ஊரில்
எத்தனை [1]பரத்தையையோ
நித்தமும் அணைத்தனையோ?
இப்படிக் காசிகாஞ்சி டில்லி—கன்யாகுமரி
எங்கும்பார்த் தாலும்இல்லை சல்லி!

கங்கு கரை[2] இல்லையே! சாடை—சொல்லிவைபவர்!
கட்டுகி றாயேஎதற் காடை?—மனம்
காக்கவல்ல வா? என்பாலே
சேர்க்கையிலா தேஅன்பாலே
காத்தாயே வேசைமாதர் மேடை!—கைவசமாமோ
கலப்புல்லுத் தின்றாலுமே காடை?

குங்குமம் சந்தனம் [3]சவ் வாது—சுககதம்பம்
குமுகுமென் றேபுயத்தின் மீது—வாசம்

---

பலவந்தம் - பலாத்காரம். கந்தம் - வாசனை. தொந்தம்-உறவுச் சம்பந்தம். வல்லி - கொடி போன்றவளே. பரத்தை - வேசி. சல்லி - போக்கிரி.
கங்கு...வைபவர்! - ஜாடை சொல்லித் திட்டுபவர்களுக்குக் கணக்கு வழக்கு இல்லையே! கட்டு...காடை? -எதற்கு வேட்டி கட்டுகிறாய்? (மானம் காக்கத்தானே?) மேடை - வீட்டு மாடி. கைவச...காடை? - (நம் வீட்டில்) ஒரு கலம் கம்புத் தானியத்தைத் தின்றாலும் காடை நம் வசம் இருக்குமோ?

(பா—ம்) 1. பரத்தையரை. 2. இலையே. 3. சவாது.

கொட்டுதுஎழில் நெற்றிசந்தப்
பொட்டொடுப கட்டுது இந்தக்
கோலம் புதிதாய்வந்த தேது?—நடந்ததெல்லாம்
கொஞ்சம்சொல் வாய்பண்ணுதே சூது.

## 20. தலைவி வருந்தல்

பாளை வாய் கமுகில்[1]வந்தூர் வாளைபாய் வயல்சூழ்செந்தூர்
பாலனம் புரியவந்த புண்ணியா!—போகம்
காலையும்செய் கிறாய்முன்பின் எண்ணியா?

"வேளையோ விடிந்ததையா,[2]நாளை வாறேன் இன்றுகையை
விட்டி"டென்று ஓம்விடாமல் பிடிக்கிறாய்!—பாலை
ஒட்டவே [3]மடி அரிந்து குடிக்கிறாய்!

சித்தமும்அண் ணுமலைசெய் குற்றமெண்ணு
வேலா!கண்டோர்
"நின்இதழ்ப் பவளங்களில் வெள்ளை ஏ"—தென்றால்
என்னசொல்வேன் நான்ஒருபெண் பிள்ளையே?

மத்தக நிகர்தனத்தில் மெத்தநக ரேகைபட்டு
மாலைப்பிறை போல்அனந்தம் தோணுதே!—இது
கேலித்துறை யாகுமென்று நாணுதே!

---

சந்தப்பொட்டு – அழகிய பொட்டு அல்லது சந்தனப்பொட்டு. முதலில் அடியோடு வெறுத்து வீட்டைவிட்டுத் துரத்தி விடுபவள் போலப் போச ஆரம்பித்தவள், கடைசியில் இறங்கி வந்து தன்னை அறியாமல் வெறுப்பைக் கைவிட்டுவிட்டதைக் குறிப்பாகத் தெரிவிக்கின்றன, "கொஞ்சம் சொல்வாய்" என்று தலைவி கூறும் கடைசி வார்த்தைகள். இப்போது அவள் கெஞ்சிக் கேட்கவே ஆரம்பித்து விட்டாள்!
வந்தூர் – (வந்து-ஊர்) வந்து ஊர்கின்ற. வாளை – வாளைமீன் பாலனம் புரிய – காப்பாற்ற; பாதுகாக்க. வாறேன் – வருகிறேன். நின் இதழ்...தென்றால் - பவளம் போன்ற உன் உதடுகள் ஏன் வெளுத்திருக்கின்றன என்று கேட்டால்.
அனந்தம் - கணக்கின்றி. கேலித்துறை - கேலிக்கிடம்.
(பா—ம்) 1. வந்து. 2. நாளை வாரேன். 3. மடு அரிந்து.

உன்னையும், விவாகமில்லா என்னையுமே அன்னைகண்டால்
ஒன்றும்சொல்லி டாளோ, அட பாவியே?—"இன்று
தின்றிடுவேன்" என்பாள்பச்சை நாவியே.

"சன்னை சாடையாகவந்தென் தன்னையணை வாய்நீ" என்று
சாற்றிடும்என் உண்மையான சொல்லையே,—விட்டுக்
கூற்றுவன்போல் வந்தாய்என்ன தொல்லையே!

சாறுசேர் கரும்புருசி யாயிருந்தா லும்வேரோடே
தான்பறித்துத் தின்னுவது ஞாயமோ?—முழு
ஆண்பிள்ளைக்கு இதுதான்சம்ப்ர தாயமோ?

நூறுதரம் மாறிமாறி வேறுவேறு லீலைசெய்தால்
நோகுமோநோ காதோஎனக் குள்ளமே?—கொண்டு
போகுமோகி ணற்றுநீரை வெள்ளமே?

## 21. நற்றாய் இரங்கல்

என்னடி நான்பெற்ற மங்கை?
இரு கொங்கை-
களில் சங்கை?—எண்ண
எத்தனை கோடியோ செங்கை—விர-
லிடமேவளர் நகரேகைகள்
மிகவேபடு வகைதோகையில்
ஏய்ந்த முருகவேள் கிள்ளி—உனைத்
தோய்ந்ததோ சொல்லடி கள்ளி?

---

பச்சை நாவி - பர்ஷாணம். சன்னை - சைகை. கூற்றுவன் - எமன். ஞாயமோ? - நியாயமோ? சம்ப்ரதாயம் - சாமர்த்தியம்.

பச்சை நாவி - பாஷாணம். சன்னை - சைகை. கூற்றுவன் - எமன். ஞாயமோ? - நியாயமோ? சம்ப்ரதாயம் - சாமர்த்தியம்.
சங்கை - கனம் அல்லது சந்தேகம். தோகையில் ஏய்ந்த- மயில் வாகனத்தில் பொருந்திய.

அன்னவயல் செந்தூர் வாசன்,
மந்த காசன்,
அன்பர் நேசன்,—நாளும்
அண்ணு மலைக்கவி ராசன்—பாடும்
அமுதச்சுவை தருமுத்தமிழ்
களபத்தொடு கமழ்பொற்புய
அற்புத வேலன்செய் சாலம்—தன்ளுல்
கற்பழிந் தாயோ இக் காலம்?

சித்தசன் கொக்கோக நூலை
அந்தி மாலை-
யொடு காலை—வைத்துச்
சிந்திப்ப தாச்சுதுன் வேலை!—சிமிழ்ச்
சின்னத்தன மடவஞ்சியே!
உன்னைப்பணி வொடுகெஞ்சியே
சேவற் கொடியோன் பூஞ் சோலை—தனில்
தேடிப் புரிந்தானே லீலை?

மெத்தப் பிரமைகொண் டேங்கி,
கொங்கை வீங்கி,
நேசப் பாங்கி—மாரை
விட்டுத் தனியாக நீங்கி,—வடி
வேலுக்கதி பதி[1]மையலை
மேவிட்டல றியதையலே!

---

மந்தகாசன் - புன்னகை திகழ்பவன்.
முத்தமிழ் களபத்தொடு முத்தமிழாகிய கலவைச் சந்தனத்தோடு. சாலம்–சாலவித்தை, நடிப்பு.
சித்தசன் – மன்மதன். சிமிழ்ச் சின்னத் தன–சிமிழ்போன்றதும் சிறிதாக உள்ளதுமான கொங்கையை உடைய. சேவற்கொடியோன் – முருகன். பிரமை – பைத்தியம். பாங்கிமார் - தோழிப் பெண்கள்.

(பா–ம்) 1. மையலே

வெட்கத்தைப் போக்கடித் தாயோ?—கர்ம
வேசைத் தனம்படித் தாயோ?

இன்னம் விவாகமே இல்லை,
கமழ் கொல்லை
வெடி முல்லை—குழல்
எங்கும் சிங்காரித்து வில்லை—சந்தம்
இனிதாகிய களபம்தன
கனமேருவில் அணிகின்றனை,
இப்படியும் தலை விதியோ?—பெண்ணே!
செப்படியே இது மதியோ?

சன்னத மாய்க்காமப் பேயே
பிடித் தாயே!
வேப்பங் காயே—போலச்
சாதம் வெறுத்தாயே நீயே!—பெருஞ்
சண்டாளியே! கண்டோர்திரள்
கொண்டேபழி விண்டார்நம
சாதிக்கெல்லாம் ஒரு வடுவே,—வரத்
தான்பிறந்தாய் வந்து நடுவே.

வண்ணப் பயிரவி தோடி
ராகம் பாடி
உற வாடி
மஞ்சத்தி லேசென்று கூடி,—உன்றன்
வன்னப்படி கம்போல்ஒளிர்
கன்னத்தினி லும்தேனிதழ்

---

கொல்லை - கொல்லைப் புறத்தில். குழல் – கூந்தல். வில்லைச் சந்தம் – வில்லையாகச் செய்த சந்தனம். தன கன மேருவில் –மேரு மலை போன்ற பருத்த ஸ்தனங்களில். சன்னதம் – ஆவேசம். திரள் ....,..விண்டார் – கூட்டமாகக் கூடி பழி தூற்றினர்கள் நம – நம்முடைய.

வன்னப் படிகம் – பிரகாசமான பளிங்கு.

*வாயிலும் கொஞ்சம்பற் குறியோ—வைத்தான்!*
*வாலை மகனுக்கும் வெறியோ?*

*எண்ணங் குமரவேள் பாலே*
*சென்ற தாலே*
*இனி மேலே—வயி-*
*றெப்படி யாகிலும் சூலே—வரும்*
*என்றேஎன துளம்அஞ்சுது*
*நன்றேசொலில் என்வஞ்சகம்*
*இல்லை; கிழவன்சொல் வீணைக்—காரர்க்-*
*கேற்காதென் றாலும்கண் ணாணை.*

## 22. காலம் நீடத் தலைவி வருந்தல்

*மஞ்சுநிகர் குந்தள மின்னே!*
*சத தளங்கள்*
*விகசிதம்செய்*
*வாரிசாத னத்தில்வாழ் பொன்னே!—செய்ய*
*வன்னமே! ஒளிர் சொன்னமே! நடை*
*அன்னமே! இடை பின்னமே பெற*
*வந்தன பார வஞ்சியே!*
*அதி விருப்பத்-*
*துடனுரைக்கும்*
*வார்த்தை யைக்கேள், ஆசை மிஞ்சியே.*

---

குமரவேள் பாலே-முருகனிடத்திலே. சூலே – கர்ப்பமே. நன்றே.....கண்ணாணை - சரியாகச் சொல்லுவதென்றால், என் வஞ்சகம் ஒன்றுமே இல்லை; கிழவன் சொல் வீணைக்காரருக்கு ஏற்காதுதான். ஆனாலும் கண் ஆணையாக நான் சொல்வது உண்மை. 'கிழவன் சொல் வீணைக்காரருக்கு ஏற்காது' என்னும் பழமொழி, நாட்டு வழக்கில் 'கிழவன் சொல் கின்னரக் காரனுக்கு ஏற்காது' என வழங்குகிறது. 'ஏழைசொல் அம்பலம் ஏறாது' என்னும் பழமொழியைப் போன்றது. மஞ்சு – மேகம். குந்தளம் – கூந்தல். சத தளங்கள்–நூறு இதழ்கள். வாரிசாதனம் -தாமரையாகிய ஆசனம். பொன்னே–லக்ஷ்மியே. செய்ய வன்னமே – சிவப்பு நிறமே. பின்னமே பெற – சிதைய, ஒடிய.

அஞ்சுவய தான பருவம்-
தனில் எனது
சிறு மனைமுன்
அங்கசவேள் போல உருவம்—பெற்றே
அன்று வந்து நயந்து மாலையில்
நெஞ்ச ழிந்து மயங்க வேபுணர்
ஆறுமுக வேல வனையே
நினைவு கொண்டே,
மதி மருண்டே,
ஆறுதில்லை, என்ன வினையே!

*என்னிரண்டு கண்ணும் தேடுதே
கனவி லினும்
மனது நினைந-

---

ஒரு பெண் தன் காதலைப்பற்றிச் சொல்லும்போது, தன்னுடைய அறியாப் பருவத்திலேயே காதலன் வந்து தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டதாகச் சொல்லுவது நூல்மரபு.

''என்னுயிரில் கலந்துகலந் தினிக்கின்ற பெருமான்
என்இறைவன் பொதுவில்நடம் இயற்றுநட ராஜன்
தன்னையறி யாப்பருவத் தென்னைமணம் புரிந்தான்
தனையறிந்த பருவத்தே எனையறிய விரும்பான்
பின்னையன்றி முன்னமொரு பிழைபுரிந்தே னில்லை
பெண்பரிதா பம்காணல் பெருந்தகைமைக் கழகோ?
கன்னல்என்றால் கைக்கின்ற கணக்கும்உண்டோ?
அவன்தன்
கணக்கறிந்தும் விடுவேனோ கண்டாய்என் தோழி!''
—ஸ்ரீராமலிங்க சுவாமிகள்

சிறுமனை - விளையாடுவதற்காக மணலால் கட்டிய சிறு வீடு.
அங்கசவேள் – மன்மதன்.

*இந்தக் கண்ணி கல்குளம் குப்புசாமி முதலியார் பதிப்பில் (1902) காணப்படுகிறது. சிற்சில பதிப்புக்களில் இது இல்லை. உதாரணமாக 1907, 1928-ஆம் வருஷங்களில் வெளிவந்துள்ள பதிப்புக்களில் இக்கண்ணி காணப்பெறுமை நோக்கத்தக்கது. 1914-ம் வருடத்தில் வெளிவந்த பதிப்பில் 'இக்கண்ணி இன்னும் அகப்படவில்லை' என்ற ஒரு குறிப்பும் உள்ளது.

6

தேக்கமுற் றலைந்து வாடுதே—முன்னம்
என்றன் ஆகம தொன்ற வேபுணர்ந்-
தன்று போனகு கன்றன் ஆவலை
எண்ணியெண்ணி என்ன பயனே?
உருகி நிதம்
மருகி விழ
இப்படி விதித்தான் அயனே.

சென்னிகுளம் மேவிய வாசன்
இனிய துதி
அனுதி னமும்
செய்திடும்அண் ணாமலை தாசன்—பாடும்
சிந்து மீதுமி குந்த மோகமு-
மும்சு சீலகு கன்ச ரோருக
திவ்வியமு கங்கள் ஆறுமே,
கண்களில் கண்டால்
பெண்களுக் கெல்லாம்
செவ்விதழும் வாயும் ஊறுமே.

## 23. பாலனைப் பழித்தல்

அங்கத்தில் பசப் பாச்சே!—அழகு
அவ்வளவும் குடி போச்சே!—முந்தி
ஆதிபிர மாவகுத்த சோதனையி னால்உதித்த-
தையோ! இதும் பொய்யோ?
தங்கக் கிண்ணங்கள் போலே—மின்னும்
தனங்களும் சாய்ந்த தாலே,—கந்தன்

---

மருகி – மறுகி, மனம் கலங்கி. அயன் – பிரமதேவன்.
சுசீல குகன் - நற்குணமுள்ள முருகன். சரோருகம் - தாமரை
அங்கம் - உடம்பு. பசப்பு - பசலை; பிரிவின் காரணமாகப் பெண்களின் உடம்பு பசந்துவிடும் என்பது கவிமரபு.

*தன்னை மரு விச்சுகித்த கன்னியர்க்கு மெல்லாம்*
*மெத்தத்*
*தாழ்ந்தேன், நொந்து வீழ்ந்தேன்.*

*சாமம் நாலினும் பிரியான்—என்னைத்*
*தனிக்கவிட் டெங்கும் திரியான்,—கர்ப்பம்*
*தன்னையறிந் தென்னையும்விட் டன்னியராம்*
*கன்னியரைச்*
*சார்ந்தான்; ஆசை தீர்ந்தான்.*

*''காமம் மீறு''தென் றழுவான்,—பின்னும்*
*காலிலே வந்து விழுவான்,—அவன்*
*காசுதனில் ஆசைமிகும் வேசையர்கள் மீதினிலே*
*கடந்தான்; அங்கே நடந்தான்.*

*''கோடிச் சேலைக்கொரு வெள்ளை,—இளம்*
*குமரிதனக் கொரு பிள்ளை''—என்று*

---

காதலிக்குக் குழந்தை பிறந்ததும், அவள் அழகு மறைந்துவிட்டது என்று, அவளைத் தலைவன் கைவிட்டு விட்டதாகக் கருதி, தன் குழந்தையைப் பார்த்துக் காதலி பழித்துப் பேசுவது 'பாலனைப் பழித்தல்' என்று நூல்களில் வழங்கும். இதற்கு உதாரணமாக இங்கே இரண்டு பாடல்களைப் பார்ப்போம்:

சதிராக நந்தி பரன்தனைக் கூடிய தையலரை
எதிராக்கி, என்னை இளந்தலை யாக்கி,என் அங்கம்எல்லாம்
அதிராக்கித் தூசும் அழுக்காக்கி, அங்கம் அங்காடிக்கிட்ட
பதராக்கி, என்னையும் பற்றும லாக்கிய பாலகனே!

—நந்திக் கலம்பகம்

மாலாக்கி என்னைப் பெருவய தாக்கி,என் மார்பின்முலை
பாலாக்கி, அங்கம் பசுநரம் பாக்கிஅப் பாவையரை
மேலாக்கி, சிக்கு விளக்கெண்ணெ யாக்கி,என் மேனி
யெங்கும்
தோலாக்கவோ மகனே பிள்ளையாய் வந்து தோன்றினையே?

—தனிப்பாடல்

கோடிச்சேலை......பிள்ளை – ஒருதடவை வெளுத்த மாத்திரத்தில் புதுப்புடவை பழைய புடவையாகிவிடும்; ஒரு பிள்ளை பெற்ற மாத்திரத்தில் குமரி என்ற பெயர்போய் தாய் என்ற பெயர் கிடைத்துவிடும்; கன்னிப் பருவம் கழிந்துவிடும்.

கூறுகின்ற வார்த்தைநெஞ்சில் தேறினனக்
கானதென்று
கொண்டேன்; மனம் விண்டேன்.
வேடிக்கை யெல்லாம் விடுத்தேன்;—பஞ்சு
மெத்தையும் தள்ளிப் படுத்தேன்;—கோடி
மின்னலொளி போலிருந்த என்நிறமெல் லாம்
மெலிந்து
வெளுத்தேன் பிஞ்சில் பழுத்தேன்.
சென்னி மாநகர் வாசன்;—துதி
செயும்அண் ணுமலை தாசன்;—தர்ம
சிந்தையில் இருந்துநித்தம் வந்ததுய
ரம்தவிர்க்கும்
சீலன், உமை பாலன்.
கன்னி மாமதில் சூழும்—திருக்
கழுகு மாமலை வாழும்—மயில்
கந்தன்,ஒரு மைந்த!நீ பிறந்தபோ துலைந்த
தெண்ணிக்
கழித்தான்; மெட்டை அழித்தான்
அந்தரப் பிழைப் பாச்சே!—நட்-
டாற்றுக் கோரையாப் போச்சே!—இங்கே
ஆறுமுக நாதன்மனை தேடிவரும் வேளை தனி
ஆச்சே, பெரு மூச்சே.
சந்தனம் பன்னீர் யில்லை,—பூசச்
சம்மதம் இப்போ தில்லை;—சிவ
சண்முகக் குமாரவேளுக் கின்னமும்என்
மீதில்ஆசை
தருமோ? மோகம் வருமோ?

---

மனம் விண்டேன் – மனம் உடைந்தேன்.
கன்னி மாமதில் - என்றும் அழியாத பெரிய மதில். மெட்டை – கௌரவத்தை. அந்தரப் பிழைப்பு – ஆதரவற்ற வாழ்க்கை.

*அழு தாலும்துயர் போமோ?—இந்த*
*[1]ஆ பத்தும்வர லாமோ?—தோழன்*
*ஆறுமுக னைப்[2]பிரிந்து போகமே நினைந்துருகு-*
*தாவி, அடா பாவி!*
*பழுதில் லாதகொக் கோகம்—தனில்*
*பகரும் காமசை யோகம்;—அந்த*
*பச்சமுற்ற வேலவனை இச்சணத்தி லேபிரித்தாய்*
*பாலா! எம காலா!*

## 24. தலைவனிடம் வந்து செவிலித்தாய் கூறுவது

*கந்தம்சேர் தருபொழில் திகழ்கழு-*
*காசல மாநகர் வாழ்முருகா!*
*கஞ்சம்தான் எனஒளிர் விகசித*
*கரதல மாதவன் மால்மருகா!*
*கருதும் அண்ணாமலை தேசிகனே!*
*அருணை உண்ணாமுலை யாள்மகனே!*

---

சையோகம் - கலவி. பச்சம் - பக்ஷம்; பிரியம். 'கொக்கோகம் என்னும் மதன சாஸ்திரம் கலவியைப் பற்றி எடுத்துரைக்கிறது. ஆனால், நீயோ அந்த அன்பன் வேலவனை இப்போது என்னிட மிருந்து பிரித்து விட்டாய்...' என்பது கடைசிக் கண்ணியின் பொருள்.

(பா–ம்) 1. ஆபத்து. 2 பிரியும்.

24-வது சிந்தைக் குறித்து முன்னுரையில் கூறியிருப்பதைக் கவனிக்கவும். கஞ்சம்.....மால் - தாமரைபோன்ற கைகளை யுடைய மகாவிஷ்ணு. அருணை உண்ணாமுலை - திருவண்ணாமலை யில் கோயில் கொண்டுள்ள உண்ணாமுலையம்மன்.

*[1]கங்குல்பொருந் தும்குழல்தங்-*
*கும்சிறுபெண் ணும்தினமும்*
*கண்டு மயங்கினள் அணைவாயே!*

*தொந்தம்தோம் [2]திங்கண வென்றுது-*
*லங்கும் அரம்பையர் ஆடிடவே,*

---

கங்குல் - இரவு. குழல் – கூந்தல். கூந்தலுக்கு இங்கே இரவின் இருள் உவமை.

(பா–ம்) 1. இந்த வரியும் அடுத்த வரியும் நான் கொடுத்துள்ள பாடம். ஏட்டுப் பிரதியில் பின்கண்டவாறு எழுதப்பட்டிருந்தது:

''கங்குல்பொருந் துங்களனு
தங்கும்சிறு பெண் ணுந்தனமும்''

ஏட்டுப் பிரதி வைத்திருந்தவருக்கு இந்தச் சிந்துகள் மனப்பாடம். பலரும் காவடி எடுக்கும்போது பாட்டுப் பாடுவதற்காக அவர் உடன் செல்லுவது உண்டு. அவர் இந்தச் சிந்தை பாடிக்காட்டும்போது பின்கண்ட விதமாக இந்த இரண்டு வரிகளையும் பாடினார்.

''கங்தல்பொருந் துங்களாலும்
குஞ்சிறுபெண் ணுந்தனமும்''

இங்கே காட்டிய இரண்டு பாடங்களிலும் பிழைகள் மலிந்திருப்பதால் உண்மையான பாடம் தெரிய ஏதுவில்லாமல் போய்விட்டது. நானாக ஊகித்துக் கொடுத்துள்ள பாடம்தான் மேலே பாட்டில் மூலபாடமாகக் கொள்ளப்பட்டது. ஆகவே உண்மைப் பாடம் இவ்விதமே இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. கீழ்க்கண்ட விதமாகவும் இரண்டு பாடங்களை ஊகிக்க முடிகிறது; ஆனால் அவை நயம்பட அமையவில்லை.

''கங்குல்தொறுங் கண்கலுழும்
அம்சிறுபெண் ணும்தினமும்''

''கல்குல்பொருந் தும்கழலும்
சங்கிருகண் ணும்தினமும்''

தொந்தம் தோம் திங்கண – நாட்டிய ஜதியின் ஒலிக்குறிப்பு.

(பா–ம்) 2. ஏட்டுப் பிரதியில் 'திங்கண' என்ற சொல்லுக்கு முன் 'தொதி' என்னும் சொல் காணப்பட்டது.

துன்றும்தோ மழைஎன வீணைகள்
　　தும்புரு நாரதர் பாடிடவே,
　சுடர்மர கதம்நிகர் தோகையிலே
　திடமொடு பவனிநீ போகையிலே,
தொங்கல்களும் சங்கினமும்
பொன்கலையும் சிந்தினள்உன்
　சொந்தம் எனும்கனி அணைவாயே.

அண்டம்பா தலமதி லும்கிடை-
　　யாத சவுந்தர ரூபவதி;
அஞ்சம்பால் அனுதினம் அமர்புரி
　　அங்கச ராசன் அடைந்தநிதி
　[1]அகிலமும் அருள்பிர காசமயில்;
　மிகமது ரிதமொழி பேசுகுயில்;
அன்றிலும் இந் தும்கடலும்
கண்டுமருண் டஞ்சுதல்கொண்-
　டங்க மெலிந்தனள் அதுபாராய்!

---

துன்றும் – நெருங்கும். தோமழை – மிகுந்த மழை. தோகையிலே – தோகை மயிலிலே. தொங்கல்கள் - மாலைகள். சங்கினம் சங்கு வளையல்கள். பொன்கலை – பொன் சரிகை போட்ட புடவை. முருகனுடைய பவனியைப் பார்த்து, அவனை மோகித்து, அவனை உடனே அடையப் பெறாத வேதனையால் உடல் மெலிந்து விட்டாள்; அதன் காரணமாக அவள் அறியாமலே அவளுடைய மாலைகளும், வளையல்களும், புடவையும் கீழே நழுவி விழுந்துவிட்டன.

அண்டம், பாதலம் - மேல் உலகம், கீழ் உலகம். அஞ்சம்........ நிதி - ஐந்து மலர்ப் பாணங்களால் தினம்தோறும் சண்டை செய்கிற மன்மதராஜனின் பொக்கிஷம் (அந்தப் பெண்). அன்றில் - ஜோடி பிரியாது கழுத்தோடு கழுத்துப் பின்னிக் கொண்டு இருக்கும் ஒரு பறவை. அன்றில் கூவினாலும் நிலவு காய்ந்தாலும் கடல் முழங்கினாலும் பிரிந்து வாழும் காதலர்களின் விரகநோய் அதிகப்பட்டு அவர்கள் வருந்துவார்கள் என்பது நூல் மரபு.

(பா–ம்) 1. 'அகிலமும் ஒளிர் பிரகாசமயில்' என்று இருந்தால் பொருத்தமாக இருக்கும் என்று தோன்றுகிறது.

முற்றும்

# அநுபந்தம் — I

## இந்நூலில் எடுத்தாளப் பெற்ற பழமொழிகள்*

(எண் : சிந்தின் எண்)

| | |
|---|---|
| அக்கரைக்காரர்க்குப் புத்தி கொஞ்சம் | 12 |
| ஆக்கப் பொறுத்தாலும் ஆறப் பொருதவர் | 12 |
| ஆசை கொண்டவருக்கு ரோசம் கிடையாது | 19 |
| கரும்பு ருசியா யிருந்தாலும் வேரோடே பறித்துத் தின்னுவது ஞாயமோ? | 20 |
| கனலேறிய மெழுகு | 4, 16 |
| கிழவன்சொல் வீணைக்காரர்க்கு ஏற்காது | 21 |
| கைவச மாமோ கலப்புல்லுத் தின்ருலுமே காடை? | 19 |
| கொண்டு போகுமோ கிணற்றுநீரை வெள்ளமே? | 20 |
| கோடிச் சேலைக்கொரு வெள்ளை; குமரிதனக்கொரு பிள்ளை | 23 |
| தனித் தோரிடம் தங்கி மேயுமோ வெள்ளாடு? | 19 |
| நட்டாற்றுக் கோரை | 23 |
| புதுமலரைக் கசக்கி அறிவார்களோ கந்தம்? | 19 |

---

* சிந்தின் சந்தத்திற்கு இசைந்து வரும்படியாக, நாட்டு வழக்கில் உள்ள பழமொழிகள் சிற்சில மாறுதல்கள் செய்யப் பெற்று மேற்கண்ட விதமாக எடுத்தாளப்பட்டுள்ளன. ஆசிரியர் 24 சிந்துகளில் 12 பழமொழிகளை எடுத்தாண்டிருக்கிருர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அநுபந்தம்—2

## இப்பதிப்பிற்கு உபயோகப்பட்ட காவடிச்சிந்து நூல் பிரதிகள்

| பதிப்பாசிரியர் | ஆண்டு | விபரம் |
|---|---|---|
| கல்குளம் குப்புசாமி முதலியார் பி. ஏ. | 1904 | இரண்டாம் பதிப்பு. இதன் முதற் பதிப்பு 1904-ல் வெளிவந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது. சென்னை பிரஸிடென்ஸி பிரஸில் அச்சிட்டு, சென்னை சடகோபாசாரி அண் கம்பெனியார் வெளியிட்டுள்ளனர். |
| பதிப்பாசிரியர் பெயர் தரப்படவில்லை | 1907 | சென்னை ஸ்ரீ பத்மநாப விலாச அச்சு யந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது. சேற்றூர் சமஸ்தான வித்வான் மு. ரா. அருணாசலக் கவிராயர் இப் பதிப்பை அச்சிடும் போது உதவி செய்ததாக ஒரு குறிப்பு எழுதப்பட்டுள்ளது. |
| க. வே. நாராயணசாமி முதலியார் | 1914 | இதனை அச்சிட்டவர் டி. பி. ஏகாம்பர முதலியார் இது சென்னை சூளை ஜீ. ஆர். பாலைய நாயுடுவின் பாலவிர்த்தி போதினி அச்சியந்திர சாலையில் அச்சிடப் பெற்றது. பிழைகள் மிக மலிந்து காணப்படுகிறது. |
| யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரம்ம ஸ்ரீ ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள் | 1928 | யாழ்ப்பாணம் பருத்தித்துறை கலாநிதி யந்திர சாலையிற் பதிப்பிக்கப்பட்டது. |
| குருமலை ஏட்டுப்பிரதி | | இதிலிருந்துதான் இந் நூலில் உள்ள இறுதிச் சிந்து கிடைத்தது. |

இவை தவிர சில சிதிலமான பழைய அச்சுப் புத்தகங்களும் உபயோகிக்கப்பட்டன.

# அநுபந்தம்—3

[காவடிச் சிந்தை 1902, 1904 ஆகிய ஆண்டுகளில் இரு முறை பதிப்பித்த கல்குளம் குப்புசாமி முதலியார் பி.ஏ., இந் நூலுக்கு எழுதியுள்ள முகவுரை]

## முகவுரை

சிந்து என்பது இசைத் தமிழின் பாகுபாடுகளில் ஒன்று. அது ஐந்துறுப்புக்களாலாயதோர் யாப்பு விசேடம். அவ்வுறுப்புக்களாவன: பல்லவி, அநுபல்லவி, மூன்று கண்ணிகள் அடங்கிய சரணம். இப்பெயரை வகித்துப் பல்லவியும் அநுபல்லவியும் இன்றிச் சரணங்கட்குரிய கண்ணிகளை மாத்திரம் பெற்று நடைபெறுவன சிலவகைச் சிந்துகள். இக்காவடிச் சிந்தும் இவ்வகையைச் சேர்ந்ததே. சிந்து என்பது கும்மி, குறம், வழிநடைப்பதம் என்பனவற்றின் நடையையே பெரும்பான்மையும் தழுவிச் செல்லும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்குக் காவடி எடுக்கும்படி பிரார்த்தனை செய்து கொண்டவர் அதை நிறைவேற்றுந் தினத்துக் காவடி தோளின்மேல் ஏற்றிக் கந்தபிரானைப் பன்முறையினும் பல வழியினும் துதி செய்து செல்வர். நாயகா நாயகி பாவமாக வழிபடுவோன் அன்பு மேலீட்டினால் கடவுளை நாயகனைப் பாவித்து நாயகனுடன் சேர்ந்தும் பிரிந்தும் ஊடியும் நிற்பதனால் நாயகிக்குண்டாகும் சுகதுக்கங்களை எடுத்தியம்புவதுபோல் அகப்பொருட்டுறையினும் சிலபாக்கள் பாடப்பெற்றுள்ளன. இந்நூலைப் படிப்பவர்களும் பாடக் கேட்பவர்களும் ஒருங்கே ஆனந்தமடைவார்கள் என்பது திண்ணம். இதனுண்மை அவரவர் அநுபோகத்தில் தெரியவரும். இத்தகைய காவடிச் சிந்துகளின்மீது ஜனங்களுக்கிருக்கும் ஆர்வம் தென்னாட்டிற பெரிதும் விளங்கும். முருகப்பிரானுக்குக் காவடி செலுத்தாநின்ற பழனி, திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், கழுகுமலை, எட்டிகுடி, திருத்தணிகை முதலிய தலங்களில் காவடிச் சிந்தின் பெருமை அதிகமாய்த் தெரிய வரும்.

இக் காவடிச் சிந்தினை இயற்றிய அண்ணாமலை ரெட்டியார் வரதுங்கராம பாண்டியனால் வெண்பா, கலித்துறை, விருத்தம் என்னும் பாவாலும் பாவினங்களாலும் பாடப்பெற்ற அந்தாதித் தொடை* பூண்ட முக்காளலிங்கர் வீற்றிருக்கும் கருவைப் (கரிவலம் வந்த நல்லூர்) பதிக்கு அணித்தாய சென்னிகுளம் என்னும் ஊரில் பிறந்தவர். திருநெல்வேலி ஜில்லா சேற்றூர் சமஸ்தான வித்வான் ம.ரா.ரா.ஸ்ரீ இராமசாமிக் கவிராயர் அவர்களிடம் கல்வி கற்று அதில் மிக்க தேர்ச்சியடைந்து பிறகு ஊற்றுமலை ஜமீன்தார் சமஸ்தானத்து வித்துவானாக விளங்கியவர். தென்னாட்டில் இவரைக் கொண்டாடாத வித்துவான்களும், கனவான்களும், ஜமீன்தார்களுமில்லை. இவர்களில் முறையே தலைநின்றோர் திருநெல்வேலி ஸ்ரீ நெல்லையப்பன் கவிராயர் அவர்களும், இராஜவல்லிபுரம் ஸ்ரீமான் முத்துசாமிப் பிள்ளை அவர்களும், ஊற்றுமலை ஜமீன்தார் ஹிருதாலய மருதப்பத்தேவர் அவர்களுமே.

இந் நூலாசிரியர் ஒருகால் திருவாவடுதுறை மகா சந்நிதானம் காலஞ்சென்ற ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் பாற் சென்று, அவரோடு அளவளாவிக் கொண்டிருக்கையில், அவர்மீது பாடிய பாக்களில்,

அரசனக ராதியர்முன் போற்றவட வாலமர்ந்த
வமலா தென்பால்
அரசனக ரவைவென்ற விடைமதிச்செஞ் சடைகரந்திவ்
வவனி போற்ற
அரசனக ரார்ந்தொளிர்சுப் பிரமணிய குருமணியே
அடிமை யேனுன்
அரசனக ராகமங் லக்கடைக்கட் கருணைபுரிந்
தாளுவாயே.

---

* இவ் அந்தாதிகளைப் பாடியவர் அதிவீரராம பாண்டியர் அல்லர் என்றும், அவர் சகோதரராகிய வரதுங்கராம பாண்டியரே என்றும் தென்னாட்டுப் பிரதிகளாலும், அந்நாட்டுப் புலவர்களாலும் தெரியவருதலால், இந்நாட்டில் நூலாசிரியருடைய பேரை மாற்றிப் பதிப்பித்துவருதல் பிழையென்க.

என்னுமிப் பாட்டைச் சொன்னபோது பாடியோருதவி யின்றித் தாமே பொருள் காணவல்ல சுவாமிகள் இவ் யமகக்கவியின் நான்காவது அடியிலுள்ள 'அரசன்' என்னும் பதத்திற்குத் தக்க பொருள் காண்பது அரிது எனக் கண்டு புலவரை நோக்க, அவர் அதன் பொருளைக் *குறிப்பிக்கத் தெளிந்து ஆனந்தங் கொண்டு புலவருடைய புலமைக்கு வியந்து, 'நீ ஜாதியிலும் ரெட்டி; புத்தியிலும் ரெட்டி' என்று சொல்லிக் கொண்டாடினர். இவருடைய புலமையின் பெருமையையறிய விரும்புவோர், "ஊற்றுமலைத் தனிப் பாடல் திரட்டு" என்னும் புத்தகத்திலும் காணலாம். முப்பதாமாண்டு முடிவதற்கு முன்னரே 1891-ம் வருடம் இவர் காலஞ் சென்றனர். இளம் வயதிலேயே இவர் சென்றுவிட்டது தமிழ்மாதின் தவக்குறைவே. இவர் பாடிய பாட்டுக்கள் "'தொட்டாலும் கைமணக்கும் சொன்னாலும் வாய் மணக்கும்" என்பதற்கோர் இலக்கியமாகும்.

இந் நூலின் முதற்பதிப்பில் நிகழ்ந்த குறைபாடுகளை நீக்கி இதனை இம்முறை அச்சிடும்போது உடனின்று பலவாற்றானும் உதவிய நண்பர்கட்கு வந்தனமளிக்கிறேன்.

சென்னை
3—3—1904 } **கல்துளம்-குப்புசாமி முதலியார்**

---

* அரசன் - ரசமறியாதவன்.

## *அனுபந்தம்—4*

[அண்ணுமலை ரெட்டியாரால் இயற்றப்பட்ட பின் கண்ட பாடல்கள் ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டிலிருந்து எடுக்கப்பட்டவை. பாடல்களின் வலது புறத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டில் உள்ள வரிசைக் கிரமத்தை அனுசரித்த எண்களாகும்.]

# அண்ணுமலை ரெட்டியார் தமக்கு நோய் வந்ததைப் பற்றிப் பாடிய பாடல்கள்

சங்கர நயினர் கோயிலில்...

*1. ஓரராசை யங்களிரண்*
*டெடுத்தனநட் டனத்தரம்பை*
*யோர்விண் ணைட்ட*

*மரராசைக் கமலமின்னார்*
*தம்புருடர் கிம்புருடர்*
*வரஞ்சேர் தாப*

*தரராசை வசித்தாந்தப்*
*பழம்பொருளே யெனுந்துதியு*
*ததிவாய் போர்ப்ப*

**வரராசை* யெனப்பெயர்பூண்**
**டெழுபுவிக்குஞ் செழும்புகழ்க்க**
**வசஞ்செ யூரில்** 302

---

* வரராசை—சங்கர நயினர் கோயில்.

## கோமதியம்மன் தவம் செய்யும் தபசுத் திருவிழாவில்...

2. மாமதியா னனமைந்து
படைத்தமண வாளன்முன
மனத்தூ டின்பக்
காமதியா னமீதற்
றியோகியற்றி ஞெனெனும்ப
கையுட் கொண்டு
கோமதியா னனங்கைதனித்
திருந்துதவம் புரிந்தத்தக்
கொண்கன் தன்னைத்
தாமதியா னயமொடு
தன்னைத்தேடி வரப்புரிவித்
தகவி ழாவில் 303

## ஊற்றுமலை ஜமீன்தார் நடத்திய விழாவில்

3. பன்மலரைப் புறங்கண்டாய்
தனுவெடுத்துத் தனுக்கரும்பைப்
பற்று ருமா
லன்மலரைம் பாலருக்கு
வருமதனு நீபுர்சா
றதனிற் புன்னை
நின்மலரைத் தொழுவார்க்
கமரர்பதந் தருபவன்போ
லிலத்துப் பூவாப்
பொன்மலரை யின்னரம்பைக்
கனியொடுவிண் வழியளிக்கும்
போது தன்னில் 304

## ஜமீன்தாரைக் கண்டு கவிபாடி, சென்னிகுளத்துக்குப் போன பின்...

4. நிற்கண்டு களிகூர்ந்து
துறைசை*யிற்சுப் பிரமணிய
நிமலன் மேற்செய்

கற்கண்டு கசக்குமது
ரிதக்கவிசொற் றுன துசிரக்
கம்பத் தானெஞ்

சிற்கண்டு பேரின்பத்
தொடுவிடைபெற் றணிவிடங்கத்
திரள்கள் சூன்மங்

குற்கண்டு வண்டசையு
மணிமாடச் சென்னிநகர்க்
குப்போம் பின்னர் 305

### அரையாப்பினல் பட்ட கஷ்டம்

5. ஆதியிலக் கணப்படியே
யுதித்திரண்டிற் கடங்காத்துன்
பாக்கி மூன்றை

மேனியிற் பலவிதமாச்
செஸ்வுசெயு மாறுபுரி
வித்த நாலிற்

பாதியிலு லியாள்பட்ட
பாடுசொல முடியாது
பஞ்ச மென்ப

தேதுமில்லை யோதுமில்லை
யுகந்துதெரு வுலவுதற்கு
மேது வில்லை. 306

---

* துறைசை—திருவாவடுதுறை

"நோய் தீர்ந்ததும் வீரகேரளம் புதூருக்கு வருவேன்"

6. பற்பலபண் டிதர்புரிந்த
வைத்தியத்தாற் பத்தியத்தாற்
படிவஞ் சாலத்
துற்பலமுற் றெய்த்ததிது
தீர்ந்துககம் பிறந்தபின்புன்
சுமுகங் காண
நற்பலவின் முட்கனியி
னுட்கனியி னருவருவி
நளிர்கா லோடி
யுற்பலமென் மலர்த்தடங்க
ணிறைத்திடுதென் வீரைநகர்க்
குறுவன் மாதோ. 307

"சீதையிடம் அனுமன் கொடுத்த ராமனின் கணையாழியைவிட
ஜமீன்தாரின் கடிதம் சிறந்தது"

7. தருவா ழிமயவர்பிரான்
றனையனைய சுகபோக
சம்ப ஹுறன்
வெருவாழி கடந்தேற
கீயருளோர் சுபதிருபம்
விரித்தேர்க் கொற்றைக்
குருவாழி ரவிகுலரா
கவதூத னசோகவனக்
கொடிக்கன் றீந்த
திருவாழி எனினுமது
சிறப்பிலதேல் வேறுவமை
செப்பற் பாற்றே.

"பகவான் உனக்குக் கிருபை செய்வான்" என்று ஜமீன்தார் எழுதிய கடிதம் கண்டதும் அயர்ச்சி பறந்தது

8. நன்னிருப குலதிலக
நராதிபசற் குணதரவென்
ஞளு மன்பின்
முன்னிருப கவானுனக்குக்
கிருபைசெய்வா னெனும்வாழ்த்து
மொழிக ளூட்டி
யன்னிருபத் துனதுப்ங்க
யக்கரந்திட் டக்கரங்கண்
டயர்ச்சியெல்லாம்
பன்னிருப கலுமுளைக்கப்
பரந்தவிருள் பரந்ததுபோற்
பரந்த தாலோ. 318

மேற்படியாரின் கடிதம் கண்டு வெய்ய வியாதி எங்கோ போய்விட்டது

9. புவியாதி பதியேதென்
பொதிகைவரைத் தமிழ்முழுதும்
புகுந்து நின்ற
செவியாதி காந்தமெலாஞ்
செறிந்தபுக் ழாகரகின்
செங்கை யால்யான்
றவியர்தி துசமயத்தி
லருணிருபத் திலகுறுமஞ்
சனங்கண் டென்வெய்
யவியாதி வெவ்விடம
திவ்விடம்விட் டெவ்விடமோ
வடைந்த மன்னே. 319

## மேற்படியாரின் கடிதம் கண்டு பிணி தகர்ந்து இன்பம் பெற்றது

*10.* *மன்னுகப் படிப்பகடு*
*மதன்சிலையோ டடிமுடியே*
*வாய்வாய் மேய்ந்து*
*புன்னுகப் பொதும்பர்நறு*
*நிழலெருறுங்கண் வளர்வழுதிப்*
*புகழ்நா டானு*
*நின்னுகப் பேரளியா*
*லெற்கருட னிருபம்வந்து*
*நிலவ லாலே*
*யென்னுகப் பிணிமுழுதுந்*
*தகர்ந்தறப்பெற் றனன்பரம*
*வின்பந் தானே.* 320

## பிணி ஆறுமாதம்; சுரம் இரண்டுமாதம்

*11.* *என்பணிய கலக்கடவு*
*ளிடத்தினின்முத் தமிழுமுண*
*ரியற்கும் பன்கம்*
*பன்பணியத் தருங்கேள்வி*
*படைத்தவித யாலயபூ*
*பாலா மாலாய்*
*முன்பணிய வினையாலோர்*
பிணியாறு திங்களிற்போய்
முடிந்த தப்பால்
வன்பணிய சுரமிரண்டு
மாதமிருந் துறுத்தியதால்
*வருந்தி னேனுல்.* 323

## கடவுள் கருணை புரிந்தால், வீரகேரளம்புதூர் நவநீத கிருஷ்ணப் பெருமாள் கோவில் திருவிழாவுக்கு வரத் தடையில்லை

12. முருக்கவிழா நின்றமலர்
கருக்குமித மரம்பையரின்
முன்றிற் பாலித்
தருக்கவிழா மதுப்பிலிற்றும்
வீரைநகர்க் கராமகுட
சயன மாறன்
பெருக்கவிழாச் சிறப்பினையு
நீகவிக்குப் புரிசிரக்கம்
பிதமும் யான்பார்த்
திருக்கவிழாத் திருக்கருணை
புரிகுவனேற் றடையறவந்
தெய்து வேனே. 325

## "சாப்பிட்டது சீரணிக்க மருந்து அனுப்புக"

13. தாரணிக்க மருந்துமருந்
தெனக்கயவர்ப் பாடாதென்
தனைக்காத் தாய்பாங்
காரணிக்க மருந்துங்க
வரமளித்தா னட்பினுட
னுக முபெற்
றேரணிக்க மருந்துறந்த
புதுமதவே ளேநுகர்ந்த
தெல்லா நன்றாய்ச்
சீரணிக்க மருந்துசிறி
துளதெனில தனுப்புவண்ணஞ்
செய்விப் பாயே. 326

" எனது இல்செலவுக்காகவே நூறு ரூபாயும்
எனக்கு அளிப்பாய் "

14. மீனூறு வசக்கிடையா
 மெல்லியலார் பகவிரா
  வேழ மாரன்
ருனூறு படாதெழுந்து
 வந்தனனென் றுரைத்திடுஞ்சுந்
  தரரு பாசெந்
தேனூறு வசனவித
 யாலயபூ பதியெனதிற்
  செலவுக் காக
வேனூறு ரூபாயு
 மெனக்களிப்பாய் மனக்களிப்பாய்
  விரும்பித் தானே. 289

" என் அகத்துக்குப் பணம் தந்திடுக "

15. பொன்னகத்துக் குப்பணவன்
 வன்கையிலேக் கும்பணைத்த
  புயவி சால்
மன்னகத்துக் குப்பணவு
 மணிபலவிண் மணியெனவில்
  வழங்குந் தெய்வப்
பன்னகத்துக் குப்பணப்பா
 ரம்பொறுத்த மருதப்ப
  பாண்டிய கோவே
யென்னகத்துக் குப்பணந்தந்
 திடக்கருணை முழுதினும்வைத்
  திரட்சிப் பாயே. 295

## "கம்பனுக்கு ஒப்பானே"

16. *பிரமரசங் கக்கந்தக்*
*கவினளினத் தாரையணி*
*பிரமன் மாதே*

*வரமரசங் கக்கந்தக்*
*கவினளினத் தாரையடு*
*மழுவா னஞ்சக்*

*கிரமரசங் கக்கந்தக்*
*கவினளினத் தாரையுய்த்தோன்*
*கிளர்தோள் வாழ்த்தும்*

**பரமரசங் கக்கந்தக்**
**கவினளினத் தாரைபெய்கம்**
**பனுக்கொப் பானே.** 291

## கல்விப் பழக்கந்தனில் கம்பன் சிரக்கம்பம் செய...

17. *முப்பழக்க மதுரமுற*
*றியலிசைநா டகமென்ன*
*மொழியுஞ் செங்கல்*

**விப்பழக்கந் தனிற்கம்பன்**
**சிரக்கம்பஞ் செயவுணர்ந்த**
**மேலோ னேதே**

*யுப்பழக்கஞ் சுழலவரு*
*காளியொடு கூளிகளு*
*முவப்ப வொன்னர்*

*குப்பழக்கந் துணித்துநெய்யுட்*
*குளித்துறையிற் குடிபுகும்வாட்*
*குடங்கை யானே.* 300

## "காயாவா காயமதி" என்ற எதுகை

18. காயாவா காயமதிக்
கொன்னலரை யேற்றுவில்லா
கவபு விச்ச

காயாவா காயமதிற்
கிளுவையித யாலயதுங்
காவே ளம்பு

காயாவா காயமதி
கம்படவென் றேதநல்லார்
கரும்பு வேப்பங்

காயாவா காயமதி
கதிராவென் றுருகுவளென்
கன்னி தானே. 7

## சரிகமபதநி

19. சரிகமப தநியேற்குச்
சந்துசொலென் பாண்மதனே
தைக்க மார்பிற்

சரிகமப தநிசமனத்
தார்க்கருள்சங் கர்வெனுமத்
தத்தி நில்லா

சரிகமப தநித்நித
மனையரருத் திடினுமருந்
தாமல் வாடிச்

சரிகமப தநியெனப்பா
டுதலேமறந் தாளிதயா
லயசற் கோவே. 42

## சாயாதரங்கிணி

20. தினஞ்சாயா தரங்கிணியி
னும்மிவள்கட் புலனதுபோற்
றெருவிற் சிற்றின்

பினஞ்சாயா தரங்கிணித்த
ஊன்விதியைத் தொழுதழற்கண்
விழிக்க நான்செய்

யினஞ்சாயா தரங்கிணிகு
தனநகில ரதிகணவா
வென்னுந் தோய்மோ

கனஞ்சாயா தரங்கிணிதே
ரெங்களித யாலயசிங்
கார மாலே. 66

## நடனுராயணி

21. நடனுரா யணியணிவண்
டினம்பகர்கா வடுத்தெடுத்த
னங்க ளுங்க

படனுரா யணியணிகொங்
கையிலெயவம் பின்றுகண்ணுற்
பார்த்தா லென்னே

வடனுரா யணியணிவாழ்
நடராயா வென்பளென்ற
னவதி யெல்லா

மடனுரா யணியணியா
வோதிருத யாலயன்பான்
மருவித் தானே. 67

## சாவேரி.

22. சாவேரி யம்பையிர
வியனமிசை யாள்விழிவந்
தசல நேருங்

காவேரி யம்பையிர
வியனமதி யின்றிறென்றற்
காற்று மாமா

தாவேரி யம்பையிர
வியனரலை பகைமொழிக்குத்
தருந்தி தாருப்

பூவேரி யம்பையிர
வியனமிசை யாளிதயா
லயபூ மானே. 68

## காம்போதி

23. எப்போதுங் காம்போதி
வண்டிசைக்குங் குழன்முடியா
ளெழிலார் வேலோ

வப்போதுங் காம்போதி
யோவெனுங்கண் டனையிமையா
ளங்க சன்புங்

கப்போதுங் காம்போதி
சையும்பகையாம் பட்டதுசங்
கடனங் கன்னிக்

குப்போதுங் காம்போதி
சரியவணை தாளிதயா
லயகோ மானே. 69

## மோகனம்

24. மோகனஞ்சு மாதவிக்குப்
போரியற்ற மூரியற்றுன்
முன்பு வேதா
வாகனஞ்சு மாதவிக்கும்
படிநிதமுந் தூதுவிடு
வாள்கை யிற்சங்
கேகனஞ்சு மாதவிக்கும்
படர்துடைவைப் பூப்பறியா
ளிடைய ருங்கோ
மாகனஞ்சு மாதவிக்கும்
பாலருந்தா ளணையிதயா
லயவல் லோனே. 70

## சேற்றூர் முதலிய ஊர்ப் பெயர்கள்

25. சேற்றூருங் கமடமதொப் பாம்புறவங் கிரிசந்
திரகிரியே யிளமுலைவஞ் சிவகிரிநான் மருங்கு
போற்றுமெழி லூர்க்காடு பிடித்தடக்கை நிகராம்
புணராச்சங் கடம்பூர்வப் புலனைமயக் குதென்றுள்
வேற்றுமுகம் பாராப்பெண் மணியாச்சி வருமே
விறற்சிங்கம் பட்டினிமே வினும்புல்விரும் புறுமோ
வூற்றுவரை முன்படைத்த வூற்றுவரை மகிபா
வுயர்மருதப் பேந்திரனு முலகதுரந் தரனே. 268

## "பரணி" முதலிய நக்ஷத்திரப் பெயர்கள்

26. பாரார்முன் னெழிற்கிரதி யென்பரிநா ளிவளென்
பரணியணி யாளனங்கார்த் திலகக்குமருத் தினில்
வேள்
வோராவா ரோகணிக்கப் பயந்தனள்சந் தந்தி
மிருகசீரிடப்புறத்து விழிதுடிக்கு ததனுற்

நீராதி ரையுங்கடலோட் டங்குவர்வெம் பழிச்சொற்
செப்புனர்பூ சம்பூசம் பூவெனிற்சீ ருதென்
ருராலும் பணியுமின்பாற் சொன்மருதப் பேந்த்ரா
வாயிலிய மகமேவைபு மறிதரவல் லோனே. 269

## இனிப் பாகும் இனிப்பாகும்

27. பெருங்குவளைத் திருக்குறுவல்
வாய்ப்பெயுமா லிடம்பிரியாப்
பிரியன் கொங்கை
நெருங்குவளைத் திருக்குழையார்
மதனனித யாலயனிந்
நேரம் வந்தான்
மருங்குவளைத் திருக்குமெழி
லம்பரஞ்சோ ராதுமுத்த
மாலை போனீர்
இருங்குவளைத் திருக்குகா
தினிப்பாகு மினிப்பாகு
மெனக்குத் தானே. 95

## மேகலையுமே கலையுமே

28. பொற்பவனி யாளுகின்ற பூமனித யாலயவே
ணற்பவனி வந்ததொடிந் நாள்வரையுங்-கற்பரிவைக்
கேகலையு மேகலையுற் றெண்ணிறரஞ் சோருமிடை
மேகலையு மேகலையு மே. 206

## "இந்த லச்சைக்கு என் சொல்வேனே"

29. சுரும்பாலுந் தொடையலணி
யிருதயா லயன்பவனித்
தோற்றங் கண்டு

பெரும்பாலு மயலாகிப்
பிறர்முகங்கண் டறியாவென்
பேதை காமன்
கரும்பாலு மரும்பாலுங்
கலையாலு மலையாலுங்
கலங்கி யேத
யிரும்பாலும் பாயசமுங்
கசக்குமென்று விந்தலச்சைக்
கென்சொல் வேனே. 33

ஒருவடை அப்பம்

30. தருவடையப் பஞ்சுகந்த
மலர்தருவார்க் கருடரும்பித்
தாவெ னப்ப
கருவடையப் பஞ்சுகந்த
வேண்மகிழ்மைத் துனன்விடுக்குங்
காலை மாலை
வெருவடையப் பஞ்சுகந்த
பாதமட வார்பழிக்க
மின்னு ளுண்ணு
வொருவடையப் பஞ்சுகந்தத்
தணையிருத யாலயனு
முசித மாலே 82

ரவை ரவையாக அவன்கணை மின்மெய்யைக் கொய்ய

31. சத்தமலைத் திருப்பரவை
மிகவெழுப்பக் கட்டிலுப
தான மெத்தை

மொத்தமலைத் திருப்பரவை
விழியருவி நீரெழுந்து
முடுக்க மாரன்
மெத்தமலைத் திருப்பரவை
ரவையாக வவன்கணைமின்
மெய்யைக் கொய்யச்
சித்தமலைத் திருப்பரவை
யாரிருத யாலயவ
சீர மாலே. 93

சடைத்தார் ஆள் ஆயிரம்பேர்

32. கொடைத்தாரா ளாவிருத
யாலயபூ பதியேவிண்
குலவும் வேரி
யுடைத்தாரா ளாகின்ற
நின்புயத்தி லாசைவைத்த
வொருத்திக் கன்னம்
படைத்தாரா ளாவென்று
தன்னருமைத் தாயர்கண்ணுற்
பார்த்துப் பூத்துச்
சடைத்தாரா ளாயிரம்பேர்
சந்தனச்சே றப்பியப்பித்
தவித்திட் டாரே. 106

வம்புத்தனம் ஆதலினால்

33. கந்தவம்புத்தன நேர்தேமலார்ந்து கடமெனக்கு
விந்தவம்புத்தன மீதெய்துமாரன் விழைத்தனன்மி
குந்தவம்புத்தன மாதலினலிக் கொடியுணக்க
சந்தவம்புத்தன மாமிதயாலய தாட்டிகனே. 147

கால்தோசையும் அருந்தாள்.

34. வேளிரதக் காற்ருேசை மென்செவியுட் கேட்டரிக் கண்
ணுளிரதக் காற்ருேசை யும்மருந்தாள்—காளகண்டங்
கூவகைந்தாள் வாய்கசந்தாள் கூடியித யாலய மால்
பூவனைந்தாள் வாய்தனஞ்செப் பு. 185

காவடிச் சிந்து முதல் பதிப்பு அச்சிடுவதற்கு ஊற்றுமலை ஜமீன்தார் இருதயாலய மருதப்பத் தேவர் பொருளுதவி செய்தபோது அவர்பேரில் ரெட்டியார் பாடிய பாடல்கள்

ஊற்றுமலையில் வாழும் ராஜ ராஜன்

35. படங்கிடங்கர்ச் சனைபுரியும்
பயோதரங்கண் வளர்மாடப்
பந்தி யும்போர்
தொடங்கிடங்கர் தெலுங்கர்வங்கர்
துளுவர்கரு நாடருயிர்
துடிப்புற் ருேட
வுடங்கிடங்கர்க் குலம்பிறழ்பற்
பேழ்வாயங் காப்பினுட
னுலாவு கின்ற
தடங்கிடங்கர் களுந்திகழு
ரூற்றுமலை மேவியவா
சராசராசன். 329

## வீரகேரளம்புதூர் ஸ்ரீ நவநீத கிருஷ்ணப் பெருமாளுக்கு நேசன்

36. தடங்கான கத்தனத்தி
ஞெடுநடந்தோன் பழவடியர்
தமக்குத் தாய்க்கெண்
மடங்கான கத்தனத்தி
னகரனைப்போ ரிடைமறைத்தோன்
மகர மூருங்
இடங்கான கத்தனத்தி
நிகர்சுருபன் கோவியராங்
இளரும் வம்புக்
கடங்கான கத்தனத்தி
யரைப்புணர்வீ ரைக்கடவுட்
கதிக நேசன் 330

## இருதயாலயப் பெயர்கொண்ட அற்புத சுசீலன்

37. பெட்பரத னத்துடன்பொன்
மலையிரண்டு பிறந்தெனப்
பெருத்துக் கச்சுக்
குட்பரத னத்துணைகள்
புதைக்கவடங் காதுகிழித்
துருவ வன்பாங்
தட்பரத னத்துறழ்கந்
தரமடவா ரமிழ்துகைத்துத்
தனது செவ்வாய்ப்
புட்பரத னத்துறைச்செ
யிருதயா லயப்பேரற்
புதசு சீலன் 331

முத்துசாமி மன்னனின் நேயனான நெல்லையப்பக்
கவிராஜ சிங்கம் அச்சகத்தில்

38. முல்லையப்பன் மானுமட
மானினியர்க் கொருமதனன்
முரணுந் தெவ்வை
வல்லையப்ப ரும்படைகொண்
டடருமுத்து சாமிமன்னன்
மகிழ்நே யன்பொற்
சில்லையப்ப ளகிபுகளத்
தனக்காந்தி மதிகொழுநன்
திருத்தாள் போற்று
நெல்லையப்பக் கவிராஜ
சிங்கநிறு வியவச்சு
நிகேத னத்தில் 332

கழுகுமலை முருகன் பேரில் பாடிய காவடிச் சிந்தை
அச்சிடச் செய்து புகழைக் கைக்கொண்டான்

39. நாவடிச்சிந் தனந்தரலிஸ்
விலைபகர்ந்தோன் மாவலிபார்
நல்கென் றண்டந்
தாவடிச்சிந் தனந்தமகன்
மருகனென்ற மைத்திடுகந்
தன்றே மாரி
பூவடிச்சிந் தனந்தவனம்
பொலிகழுகா சலபதிமேற்
பொருந்த நாஞ்சொல்
காவடிச்சிந் தனந்தமச்சிற்
பதிப்பிவித்துப் புகழ்முழுதுங்
கைக்கொண் டானே. 333

முற்றும்